வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வாரமலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 309 பக்கங்கள் : 16



07 சர்வதேச மோதலாகும் சர்வதேச உறவு!


08 தேர்தல்களை தவிர்த்து அதிகாரத்தில் இருக்க விரும்பும் அரசாங்கம்


09 ஹமாஸ் ஊடான ரணிலின் தனிப்பார்வை தமிழர் விவகாரத்தில் மாறுபடும் முரண்!


13 முழுமையான முற்றுகைக்குள் காசா!


# நாகை- காங்கேசன் கப்பல் சேவை இரு நாட்டு உறவை வலுப்படுத்தும்

## இந்தியப் பிரதமர் மோடி நம்பிக்கை



சென்னை, ஒக்ரோபர் 15

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜ தந்திர மற்றும் பொருளாதார உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். நாகப்பட்டினத் துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டமை எமது உறவுகளை வலுப்படுத்தும் ஒரு முக்கியமான மைல்கல். இந்த முக்கியமான சந்தர்ப் பத்தில் உங்களுடன் இணைவது எனது பாக்கியம் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

15

# 40ஆண்டுகளுக்கு பின்னர் நேற்று ஆரம்பிக்கப்பட்டது கப்பல் சேவை



யாழ்ப்பானம், ஒக். 15

நாகப்பட்டிணம் மற்றும் காங்கேசன்துறைக்கும் ஆரம்பிக்கப்பட்ட பயணிகள் கப்பல் சேவை நேற்று நண்பகல் காங்கேசன் துறைமுகத்தை வந்தடைந் தது.

குறித்த கப்பலினை கப்பல்துறை விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் யாழ். இந் திய துணை தூதுவர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர்.

நாகப்பட்டிணம் மற்றும் காங்கேசன்துறைக் கும் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து

15

# புலமைப்பரிசில் பரீட்சை இன்று!

## வடக்கில் 18,759 மாணவர்கள் தோற்றுகின்றனர்

யாழ்ப்பாணம், ஒக். 15

தரம் ஐந்திற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் வடக்கில் 18 ஆயிரத்து 759 மாணவர்கள் தோற்றுவதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ள தரம் ஐந்திற்கான புலமைப் பரிசில் பரீட்சை

15

# பொதுஜன பெரமுனவில் சிலருக்கு அமைச்சு பதவிகள்

## அரசாங்கம் இரகசிய நகர்வு

கொழும்பு, ஒக். 15

2023ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட் டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பல ருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு அரசாங் கம் தயாராகி வருகின்றது.

பொதுஜன பெரமுன மாவட்ட தலைவர்கள்

15

# வர்த்தக வாகன இறக்குமதி அனுமதி மீண்டும் இரத்து!

கொழும்பு, ஒக். 15

வர்த்தக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங் கப்பட்டிருந்த அனுமதி மீண்டும் இரத்து செய்யப்பட் டுள்ளது.

வர்த்தக வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கி வெளியிடப்பட்ட வர்த்தமானியின் செல்லுபடி யாகும் காலம் நிறைவடைந்ததையடுத்து, இந்த

15

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தாக்குதல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமை நீக்கம்!

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ்.போதனா வைத் தியசாலையில் வந்த நபர் மீது தாக்குதல் மேற் கொண்ட இரண்டு பாது காப்பு உத்தியோகத்தர் களும் நேற்றிலிருந்து கடமை நீக்கம் செய்யப் படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித் தார்

அவர் மேலும் தெரி விக்கையில்-

யாழ். போதனா வைத் தியசாலை நுழைவாயி லில் வைத்தியசாலைக்கு வந்த நபர் ஒருவர் பாது காப்பு ஊழியர்களால் தாக்கப்பட்ட சம்பவமா னது கண்டிக்கப்பட வேண்டியது.

இந்த விடயத்தை

15

# இலங்கையின் 2 சட்ட வரைவுகள் கவலை வெளியிட்டுள்ளது ஐ.நா.!

ஜெனிவா, ஒக். 15

இலங்கைப் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டம் மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப் புச் சட்டம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கவலை கொண் டுள்ளது.

இந்த இரண்டு சட்ட மூலங்களும் அதிகாரி களுக்கு விரிவான அதிகாரங்களை வழங்குவதாகவும்,

15

# புலிபாய்ந்தகல் பகுதியில் அத்துமீறி சட்டவிரோத மீன்வாடிகள் அமைப்பு!

## நடவடிக்கை எடுக்க தயங்கும் அதிகாரிகள்

முல்லைத்தீவு, ஒக். 15

கொக்குத்தொடுவாய் வடக்கு பகுதிக்கு இடைப்பட்ட பகுதியான புலிபாய்ந்தகல் கடற் கரையை அண்டிய பகுதி யில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்க ளால் சட்டவிரோதமாக மீன்வாடிகள் அமைக் கப்பட்டுள்ளன. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் டாதுள்ளதாக குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.



அங்கு மீண்டும் புதிய வாடிகள் அமைக்கப் பட்டு வருவதாக தெரி விக்கப்பட்ட தகவலைய டுத்து அவ்விடத்துக்கு சென்று நிலவரங் களை பார்வை யிட்ட பின்னர்

15

# இப்படியும் நடக்கிறது

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் நாம் மறக்கமுடியாதவை. திலீபனின் உண்ணாவிரதம், புலேந்திரன், குமரப்பா கைது, புலிகளுடன் மோதல், கடைசியில் இந்திய இராணுவம் அவமானகரமாக நாடு திரும்பியமை என்று அனைத்துமே வரலாற்றில் மறக்கமுடியாதவை.

இங்கே யார் சரி யார் தவறு என்பதை விவாதிப்பது எமது நோக்கமல்ல. ஆனால் அந்தக் காலத்தில் இயக்கங்களிடையே பிளவுகளும் சச்சரவுகளும் ஏற்படுவதற்கும் அந்த ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் போனதற்கும் இந்தியாவும் காரணமாக இருந்தது என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

அப்போது இந்தியத் தூதுவராக இருந்த டிக்சிற் ஒரு புறமும், இந்திய இராணுவத்தை வழிநடத்திய உளவுத்துறை ஒருபுறமுமாக முடிவுகளை எடுத்ததே அப்போதைய பிரச்னைகளுக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுவதுண்டு.

அந்தக் காலத்தில் இளம் பத்திரிகையாளர்களாக இருந்த ஊர்க்குருவி போன்றவர்கள், இது போன்ற தகவல்களை அறிந்திருக்கிறார்களே தவிர, அதுபற்றி ஆழமாக ஆராய்ந்ததில்லை.

இப்போது அதுபற்றி எதற்கு ஆராயவேண்டும் என்ற கேள்வி எழுவதில் நியாயம் இருக்கலாம். ஆனால் அந்தச் செய்தியைப் பார்த்தபோது இவை எல்லாம் மனக்கண்ணில் தோன்றுவதை தவிர்க்க முடியவில்லை.

அண்மையில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்த ஒரு கருத்தும், அதற்கு தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் தெரிவித்திருந்த கருத்துக்களையும் படிக்க முடிந்தது.

சில மாதங்களுக்கு முன்னர் பதின்மூன்றை அமுல்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரி இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுவதை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் ரெலோ கூட்டம் ஒன்றைக் கூட்டியதும், அந்தக் கூட்டத்தில் ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் ஆகியோர் கலந்துகொண்டதும் ஞாபகமிருக்கலாம். அந்தக் கூட்டத்தில் சம்பந்தன் கலந்துகொள்ளாததை காரணம் காட்டி கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் சம்பந்தனின் பங்குபற்றுதலுடன் கொழும்பில் நடைபெற்றபோது, அவரோ பதின்மூன்றுடன் மட்டும் நின்றுவிடமுடியாது என்றும் சமஷ்டி, சுயநிர்ணய உரிமை என்று அடம்பிடித்ததால் ஹக்கீமும், மனோ கணேசனும் அதிலிருந்து வெளியேற, நீண்ட இழுபறியின் பின்னர் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தக்கோரி கடிதம் எழுதுவது என்று முடிவாகியது.

ஆனால் அப்படியொரு கடிதத்தில் சம்பந்தன் கையெழுத்திடக் கூடாது என்பதில் சம்பந்தனின் 'தளபதி'யான சுமந்திரன் விடாப்பிடியாக இருந்தார். அவர் ஏன் அதற்கு விருப்பமின்றி இருந்தார் என்பதும் புரிந்து கொள்ளக்கூடியதுதான்.

சுமந்திரனின் விருப்பத்திற்கு மாறாக அதில் கையெப்பமிட முடிவு செய்த சம்பந்தன், சுமந்திரனை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவிட்டு, சித்தார்த்தனையும் செல்வத்தையும் அழைத்து சுமந்திரனுக்குத் தெரியாமலேதான் கையொப்பமிட்டார். அதன் பின்னரே அந்தக் கடிதம் இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது.

அப்படியொரு கடிதத்தை எழுதியதால்தான் இந்தியா இப்போது பதின்மூன்றுக்கு மேலே செல்லவில்லை என்று மிக அண்மையில் சுமந்திரன் கூறியிருந்ததும் கவனிக்கவேண்டியது. இந்தியப் பிரதமருக்கு அப்படியொரு கடிதம் எழுதியிருக்காவிட்டால் இந்தியா சமஷ்டிக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கியிருக்கும் என்ற சுமந்திரனின் அண்மைய நம்பிக்கை, நல்லாட்சி காலத்தில் புதிய அரசியலமைப்பை கொண்டு வரலாம் என்று நம்பியதைவிட மேலானது. அதுவல்ல இன்று நாம் சொல்ல வருவது.

தாங்கள் எழுதிய கடிதம் இந்தியப்பிரதமரிடம் போய்ச் சேரவில்லை என்று விக்னேஸ்வரன் ஐயா அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து, அதுபற்றி கருத்துச் சொல்லியிருக்கிறார் சுமந்திரன். அதாவது விக்கினேஸ்வரனுக்கு மறதி அதிகரித்துவிட்டது என்றும், அதற்காக அவர் விரைவில் மருத்துவரைச் சந்திக்கவேண்டும் என்றும் ஆலோசனை சொல்லியிருக்கிறார். அவரது அந்தக் கருத்தும் ஆராயப்பட வேண்டியதுதான் என்றாலும், அவர் சொல்லியிருக்கும் மற்றுமொரு கருத்துத்தான் இந்த ஊர்க்குருவிக்கு ஆச்சரியத்தை தந்தது.

அதாவது, அந்தக் கடிதத்தை புதுடில்லிக்கு எடுத்துச் சென்ற இந்தியத் தூதுவர், அந்தக் கடிதங்களை இந்தியப் பிரதமரிடம் கையளித்தவுடனேயே புதுடில்லியிருந்து தனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து கடிதங்களைப் பிரதமரிடம் கையளித்துவிட்டேன் என்று அறிவித்திருந்தார் என்று சுமந்திரன் கூறியிருக்கிறார்.

ஆக, எந்தக் கடிதத்தில் சம்பந்தன் கையெழுத்து வைக்கக்கூடாது என்று சுமந்திரன் விடாப்பிடியாக இருந்தாரோ, அந்தக் கடிதத்தை கையளித்துவிட்டு தூதுவர் சுமந்திரனுக்கே தொலைபேசி எடுத்து கூறியிருக்கிறார் என்றால், தூதுவர் தமிழ் அரசியல் கட்சிகளிடையே- கட்சிகள் பற்றிய எத்தகைய புரிதலுடன் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வேளையில்தான் இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் தூதுவர் டிக்சிற் நடந்துகொண்ட பல சம்பவங்கள் ஞாபகத்திற்கு வருவதையும் தவிர்க்க முடியவில்லை.

தமிழ் அரசியல் கட்சிகளிடையே எப்போதும் ஒரு முறுகல் நிலை இருப்பதைத்தான் பலரும் விரும்புகிறார்களோ தெரியவில்லை. தமிழ் இயக்கங்களை ஒன்றுடன் ஒன்று சேர்ந்துவிடாமல் பார்த்துக்கொண்டதாக கூறப்பட்டது உண்மைதானோ என்று நினைக்காமலும் இருக்கமுடியவில்லை.!

**- ஊர்க்குருவி.**

## நாகபட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பம்





















# 2025ஆம் ஆண்டளவில் 6,110 ஹெக்ரேயர் நிலப்பரப்பை இழக்கவுள்ளது இலங்கை!

## சார்க் உணவு சங்கத்தின் துணைத் தலைவர் எச்சரிக்கை

**கொழும்பு, ஒக். 15**

**தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் கடல் மட்ட உயர்வினால் எதிர்வரும் 2025ஆம் ஆண்டளவில் 6,110 ஹெக்ரேயர் நிலப்பரப்பை இலங்கை இழக்கும் என சார்க் உணவு சங்கத்தின் துணைத் தலைவர்வைத்தியர் பி.ஜி. ஹேமந்த குமார தெரிவித்துள்ளார்.**

அதன்படி, இது 2100ஆம் ஆண்டளவில் 25,000 ஹெக்ரேயராக அதிகரிக்கும் எனவும் அவர் கூறினார்.

“காலநிலை மாற்றத்தினால் சுகாதார தாக்கம்” என்ற தொனிப்பொருளில் கீழ் களுத்துறை வாத்துவையில் நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் எவ்வாறு ஆரோக்கியத்தை நேரடியாக பாதிக்கிறது என்பது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இலங்கையில் ஒரு வருடத்திற்குள் அதிதீவிர காலநிலை நிகழ்வுகள் அதிகமாக உள்ளதால், உலகளாவிய காலநிலை இடர் குறியீட்டில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது.

இதேவேளை, இலங்கையில் நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் மதிய உணவுத் தாள்கள் மற்றும் 150,000 பொலித்தீன் பைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு மாதத்திற்கு தனிநபர் பொலித்தீன் பயன்பாடு ஒரு கிலோ ஆகும்.

வானிலை மற்றும் காலநிலை மாற்றம் திசையன் மூலம் பரவும் நோய்த்தொற்றுகளின் உயிரியல் மற்றும் விநியோகத்தை பாதிக்கும்.

உதாரணமாக, வெப்பநிலை மாற்றங்கள், உலகளாவிய காற்று மற்றும் மழைப்பொழிவு முறைகள் மற்றும் மிதமான தட்பவெப்பநிலைகளில் ஈரப்பதத்தில் ஏற்படும் மாற்றங்கள் பூச்சி இனப்பெருக்கத்தை சாதகமாக பாதிக்கலாம் மற்றும் அதன் அடர்த்தியை அதிகரிக்கலாம் - என்றார். (அ)

நீதிபதி சரவணராஜா விவகாரம்

# குற்ற புலனாய்வுப் பிரிவின் அறிக்கை பொய்யானதே!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 15

குற்ற புலனாய்வு பிரிவின் விசாரணை அறிக்கை முற்றிலும் பொய்யானதாகவே இருக்கும். அவர்கள் சரியான விசாரணையை செய்திருக்கமாட்டார்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதிபதி சரவணராஜாவுக்கு இருந்த அச்சுறுத்தல் அவர் நாட்டை விட்டு வெளியேறியமை வெறுமனே ஒரு நீதிபதிக்கான அச்சுறுத்தலாக பார்க்க முடியாது.

நீதித்துறை என்பது எவ்வளவு தூரம் இந்த சிங்கள அரசாலும், அரச இயந்திரத்தாலும், அவமதிக்கப்படுகின்றது என்ற விடயத்தையே எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் மக்களுக்கு எதிராகவே குற்றப்புலனாய்வுப் பிரிவின் அறிக்கைகள் காலாகாலமாக வெளி வந்ததுள்ளது. அது போல் தான் நீதிபதி சரவணராஜா பற்றிய அறிக்கையும் முற்றிலும் பொய்யானதாகவே இருக்கும்.

சரியான விசாரணையை அவர்கள் செய்திருக்க மாட்டார்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்த அறிக்கையை நாங்கள் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை - என்றார். (அ)

# இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி; 2 மாதம் நிறுத்த வர்த்தக அமைச்சு முடிவு

கொழும்பு, ஒக். 15

உள்நாட்டில் முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளதையடுத்து, அடுத்த இரண்டு மாதங்களுக்கு இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதியை நிறுத்த வர்த்தக அமைச்சு முடிவு செய்துள்ளது.

முட்டை உற்பத்தியாளர்களுக்கு கடந்த காலங்களில் முறையாகப் பெறப்படாத மூலப்பொருட்கள் திரும்பப் பெறப்பட்டதன் காரணமாக உள்ளூர் முட்டை உற்பத்தி வளர்ச்சி கண்டு வருவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அந்த நிலையை கருத்தில் கொண்டு முட்டை இறக்குமதியை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தாய் கோழிகளை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்குதல், உற்பத்தியாளர்களுக்கு பணம் வழங்குதல், சோளத்தை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற வசதிகள் வழங்கப்படுவதன் மூலம் இலங்கையில் முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளதாக வர்த்தக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# டெங்கு நோய் பரவல் 30 வீதத்தால் உயர்வு!

கொழும்பு, ஒக். 15

டெங்கு நோய் பரவல் 30 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒக்ரோபர் 2ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரையான 40ஆவது வாரத்தில் 684 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

39ஆவது வாரத்தில் 526 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

அதன்படி, 39ஆவது வாரத்துடன் ஒப்பிடுகையில் 40ஆவது வாரத்தில் குறித்த நோயாளர்களின் எண்ணிக்கை 30 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதேவேளை, குறித்த காலப் பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 146 டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் 48.2 வீதமானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

இந்நிலையில், பிலியந்தலை,மொறட்டுவை , அத்தனைகல்ல , களனி , தொம்பே , இராகம , கம்பளை , உடுநுவர , மாத்தளை , பதுளை உள்ளிட்ட 16 பிரிவுகளில் டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



இவ்வாண்டின் ஆரம்பம் முதல் இதுவரையில் 65 ஆயிரத்து 479 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமெனின் அது டெங்கு காய்ச்சலாக இருக்கலாம் எனவும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் உடனடியாக வைத்தியரை நாடுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நுளம்புகள் பெருகாதவாறு சூழலை பேணுவதன் மூலம் டெங்கு நுளம்புகள் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் இதனால் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)

# இஸ்ரேல்-பலஸ்தீன யுத்தம் காரணமாக இலங்கை பொருளாதாரம் மீள சரியலாம்!

## எச்சரிக்கிறார் கொழும்பு பல்கலை பேராசிரியர்

கொழும்பு, ஒக். 15

மீண்டுவரும் இலங்கையின் பொருளாதாரம் இஸ்ரேல் - பலஸ்தீன யுத்தம் காரணமாக மீண்டும் வீழ்ச்சியடையலாம் அல்லது ஸ்தம்பிதமடையலாம் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார கற்கைப் பிரிவின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க தெரிவித்தார்.

அதன்படி, இஸ்ரேல்-பலஸ்தீன யுத்தம் காரணமாக எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்குள் உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 100 டொலர்களாக உயரலாம் எனவும் அவர் கூறினார்.

இதுவரை யுத்தம் காரணமாக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை ஐந்து டொலர்களால் அதிகரித்துள்ளதாகவும் தற்போது ஒரு பீப்பாய் எண்ணெய் 100 டொலர்களாக உள்ளதால், எதிர்வரும் சில மாதங்களில் மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக இலங்கையில் பணவீக்கம் மீண்டும் உயரக்கூடும்.

கொவிட்-19 தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இதனால் மேலும் மேலும் துன்பப்பட நேரிடும்.

யுத்தம் காரணமாக இஸ்ரேலில் பணிபுரியும் 20,000 பேர் மீண்டும் இந்நாட்டுக்கு திரும்பினால் வெளிநாட்டுக்கு அனுப்பும் பணத்தை இழப்பது பெரும் பிரச்னையாகி அந்த மக்கள் வேலையற்றவர்களாக மாறுவார்கள் .

இஸ்ரேல் மட்டுமன்றி மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பணிபுரியும் இலங்கையர்களும் போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிக்கு செல்வோரின் எண்ணிக்கை குறைவடையும் , இதன் காரணமாக வெளிநாட்டு பணவரவுகள் குறையும் .

யுத்தம் காரணமாக உலக சந்தையில் இலங்கையின் ஏற்றுமதிக்கான தேவை குறையலாம் எனவே எதிர்காலத்தில் ஏற்றுமதி வருமானம் குறையலாம். உலகில் உள்ள சுற்றுலாத்துறையிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இது முழு உலகத்தையும் பாதிக்கும் ஒரு நெருக்கடி என்பதால், இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் குறையும் என எதிர்பார்க்கலாம் .

இஸ்ரேல்-பலஸ்தீனப் போருக்கு தற்போது மேற்கத்திய நாடுகளின் உதவிகளை இஸ்ரேல் பெற்று வருகிறது. எதிர்காலத்தில் உக்ரைன்-ரஷ்யா யுத்தம் இந்தப் போக்கோடு முடிவுக்கு வந்தால், உலகப் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களிலிருந்து இந்நாடு ஓரளவு நிம்மதியை எதிர்பார்க்கலாம் - என்றார். (அ)

# பிலிப்பைன்ஸுக்கான இலங்கை தூதராக சானக ஹர்ஷ நியமனம்

கொழும்பு, ஒக். 15

பிலிப்பைன்ஸிற்கான இலங்கைத் தூதுவராக கலாநிதி சானக ஹர்ஷ தல்பஹேவா நியமிக்கப்பட்டுள்ளார்.

சானக ஹர்ஷ தல்பஹேவா தனது நற்சான்றிதழை பிலிப்பைன்ஸ் குடியரசின் ஜனாதிபதி பெர்டினாண்ட் ஆர். மார்கோஸிடம் கையளித்துளித்துள்ளார்.

மணிலாவில் உள்ள மலாக்கான் மாளிகையில் அவர் தனது நற்சான்றிதழை வழங்கினார்.

நற்சான்றிதழ்கள் கையளிக்கப்பட்டவுடன், தூதுவர் தல்பஹேவா ஜனாதிபதி மார்கோஸுடன் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார்.



ஜனாதிபதி மார்கோஸ், அரசாங்கம் மற்றும் பிலிப்பைன்ஸ் மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாழ்த்துக்களையும், ஆதரவையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

கலந்துரையாடலின் போது, இலங்கை மற்றும் பிலிப் பைன்ஸுக்கு இடையிலான நட்புறவை மேலும் பலப்படுத்தி அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு தாம் உழைக்க எதிர்பார்த்துள்ளதாக தூதுவர் தல்பஹேவா தெரிவித் தார்.

பிலிப்பைன்ஸில் உள்ள நிறுவனங்களிடமிருந்து முதலீடுகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு தீவிரமாக செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# தற்போதைய பிரச்னைகள் குறித்து இந்திய பிரதமருக்கு மீண்டும் கடிதம்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 15

**இலங்கையில் தற்போது இடம்பெறுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் இந்திய பிரதமருக்கு கடிதமொன்று அனுப்பப் படும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் 20ம் திகதி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடத்துவதற்கு திட்டமிடப்பட் டுள்ள நிர்வாக முடக்கல் போராட்டம் தொடர்பில் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந் தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணி யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக் னேஸ்வரனின் இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் தேசிய கட்சி மற் றும் ஜனநாயக போராளிகள் கட்சி என்பவற்றின் பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்த கலந்துரையாடலை அடுத்து ஊடகங்களுக்கு கருத் துரைத்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலை வர் சுரேஸ் பிரேமச்சந்திரன், நிர்வாக முடக்கல் போராட்டம் தொடர்பில் இலங்கையில் உள்ள வெளிநாட்டு இராஜதந் திரிகளுக்கும் தெளிவுப்படுத்தப் படும் என குறிப்பிட்டார். (அ)



# பொருளாதார பிரச்னை விரைவில் தீர்க்கப்படும்

## ஜனாதிபதி ரணில் உறுதி

கொழும்பு, ஒக். 15

நாட்டு மக்கள் எதிர்கொண் டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் அரசாங்கம் அறிந் துள்ளதெனவும், பொருளாதார பிரச்னைகளை விரைவில் தீர்த்து அனைத்து மக்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும் என வும் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள் சம்மேளனத்துடன் இடம்பெற்ற கலந்துரையாட லின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கல்வி ஆய்வுகளுக்கான வரி விதிப்பு தொடர்பில் புதிய சுற்றறிக்கையொன்றை வெளி யிடுவதற்கான இயலுமை தொடர்பில் ஆராய்ந்து, அடுத்த 3 வாரங்களுக்குள் தமக்கு அறிக்கையொன்றை சமர்பிக்குமாறு ஜனாதிபதி இதன்போது, அதிகாரிகளுக்கு பணித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது. (அ)



# போலி ஆவணம் தயாரித்த நீதிமன்ற பதிவாளர் கைது!

கொழும்பு, ஒக். 15

சந்தேகநபர் ஒருவரின் பய ணத்தடை நீக்கப்பட்டதாக போலி கடிதம் தயாரித்து தொலைநகல் மூலம் குடிவரவு- குடியகல்வு கட்டுப்பாட்டாள ருக்கு அறிவித்ததாக குற்றப்புல னாய்வுத் திணைக்களம் நேற்று முன் தினம் கோட்டை நீதவான் நீதிமன்றப் பதிவாளரை கைது செய்துள்ளது.

இந்த சந்தேக நபருக்கு நீதி மன்றம் பயணத்தடை விதித் துள்ளது. கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்குட் படுத்தப்பட்ட ஏழு குற்றச்சாட் டுக்கள் தொடர்பிலான வழக் கில் தண்டனை விதிக்கப்பட்ட சந்தேக நபருக்கு வெளிநாட்டு பயணத்தடை நீக்கப்பட்டுள்ள தாக சந்தேகத்திற்குரிய பதிவா ளர் குடிவரவு-குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத் துக்கு இந்த போலிக் கடிதத்தை வழங்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான ஆவணம் காணாமல்போயுள்ள தாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதுடன், காணா மல்போன வழக்கு பதிவு தொடர்பில் கோட்டை நீத வான் நீதிமன்றில் கிடைக் கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபரான பதிவாளர் கைது செய்யப்பட் டார்.

இந்த போலிக் கடிதத்தை தட்டச்சு செய்த பெண் உத்தி யோகத்தரிடம் சி.ஐ.டியினர் விரிவாக விசாரணை நடத் தினர். தட்டச்சு செய்யப் பதிவா ளரிடம் இருந்து கடிதத்தின் வரைவோலை பெற்றதாக தட் டச்சாளர் புலனாய்வாளர்களி டம் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும், பதிவாள ரிடம் இருந்து அது தொடர் பான வழக்கு ஆவணம் தனக்கு கிடைக்கவில்லை என அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவின ரிடம் தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வழக்குக் கோப்புகள் வைக்கப்பட்டுள்ள அறையில் கடமையாற்றிய உத்தியோகத் தர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், மேலதிக விசார ணைகளை தொடர்வதற்கு சந்தேகத்தின் பேரில் பதிவாளர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# 17 வயது சிறுமி துஷ்பிரயோகம் மன்னாரில் மூன்று பேர் கைது!

மன்னார், ஒக். 15

மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள கிராமம் ஒன்றில் 17 வயதுடைய சிறுமி ஒருவர் மூன்று நபர்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள் ளாக்கப்பட்ட நிலையில் மன்னார் பொலிஸ் நிலை யத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த மூவர் மன்னார் பொலிஸ ாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார்-பெரியகமம் பகுதியை சேர்ந்த 23,18, 17 வயதுடைய இளைஞர்கள் மூவரே மேற்படி சம் பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூன்று நபர்களும் சிறுமியின் நிர்வா ணப் புகைப்படத்தை வைத்திருந்ததோடு அதனை நண்பர்களிடமும் பரிமாறியுள்ளனர்.

அப்புகைப்படங்களை வைத்து சிறுமியை மிரட்டி துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு இருக்க லாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அதேநேரம், சம்பவத்தின் பிரதான குற்றவாளி யாக சந்தேகிக்கப்படும் வாகனத் திருத்தகம் ஒன் றில் பணிபுரியும் 23 வயதுடைய நபர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்ததுடன் அவரிடம் இருந்து 2,000 ரூபாய் பணத்தையும் வலுக்கட்டாயமாக அபகரித்துச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் அவரின் தாயார் மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மன்னார் பொலிஸார் குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் கைது செய்தனர்.

குறித்த மூவரும் மன்னார் நீதவான் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்பட்டவேளை மூவரையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

# யாழில் கடிநாயிடமிருந்து தப்பிக்க முயற்சி மதில் இடிந்து விழுந்து மாணவன் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஒக். 15

கடி நாயிடமிருந்து தப்பியோடிய மாணவன், மதில் ஏறி குதிக்க முற்பட்டபோது, மதில் இடிந்து விழுந்து பலத்த காயமடைந்துள்ளார்.

நேற்று முன் தினம் பருத்தித்துறை, தும்பளை பகுதியில் இந்த சம்பவம் நடந்தது.

18 வயதான மாணவன் ஒருவர் கால் எலும்பு கள் உடைந்து படுகாயமடைந்த நிலையில், பருத் தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார்.

வீதியில் சென்ற இளைஞன், ஏதோ தகவல் கேட்பதற்காக வீடொன்றுக்குள் நுழைந்தபோது, அங்கிருந்த கடிநாய் விரட்டியுள்ளது. நாயிடமி ருந்து தப்பிக்க வீட்டுச் சுவர் ஏறி தப்பியோட முயன்றுள்ளார்.

இடையில் தூண் வைத்து கட்டப்படாத அந்த மதில் இடிந்து, மாணவனின் மேல் விழுந்துள்ளது.

படுகாயமடைந்த மாணவன், வீட்டு உரிமையா ளரால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (அ)

# முல்லைத்தீவு விவசாய அமைப்புக்களுடன் அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று சந்திப்பு

முல்லைத்தீவு, ஒக். 15

முல்லைத்தீவு மாவட்ட விவ சாய அமைப்பு திணைக்களங்க ளுடனான சந்திப்பு ஒன்று நேற் றுக் காலை 9.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயல கத்தின் மாநாட்டு மண்டபத் தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அர சாங்க அதிபர் அ.உமாமகேஸ் வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, கிராமிய இரா ஜாங்க அமைச்சர் மஸ்தான், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன , மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.குணபாலன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ் வரன், முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பொறி யியலாளர் எஸ்.விகிதரன், கமநல சேவைகள் நிலைய உதவி பணிப்பாளர் பரணிதரன், பிரதி மாகாண விவசாய பணிப் பாளர் திருமதி ஜாமினி சுசீல் டன் மற்றும் அரச உயர் அதிகா ரிகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் பங் கேற்றிருந்தனர்.

இதன்போது அழிவடைந்த பயிர்செய்கைக்கான காப்புறுதி காசோலைகள் வழங்கப்பட்டன. விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டதுடன், கடந்த கால உழுந்து, பயறு செய்கை தொடர்பாகவும், கடந்த கால மற்றும் எதிர்கால நெற் பயிர்ச் செய்கை, பயிர்செய்கையின் போது யானையின் தாக்கம் தொடர்பாகவும் கலந்துரையா டப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத் தில் யானை, குரங்குகள் அச்சு றுத்தல் இருப்பதாக விவசாயி கள், விவசாய அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து வெளி யிட்ட அமைச்சர், இதற்காகவே நான் சீனாவுக்கு குரங்களை அனுப்புவதற்கு முயற்சி செய்த போது சுற்றாடல் அதிகார சபையால் வழக்கு தொடுக்கப் பட்டதால் இடைநடுவில் அந்த முயற்சி கைவிடப்பட்டதாக தெரிவித்தார். (அ)



ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
15.10.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய இணைப்பின் முக்கியத்துவம்

காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவையை இந்திய பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக ஆரம்பித்து வைத்திருக்கின்றார். இந்தச் சேவை வர்த்தகத்தை மேம்படுத்துவதுடன், இரு நாடுகளுக்கிடையிலான நீண்டகால பிணைப்பை வலுப்படுத்துமென்று - பிரதமர் மோடி தெரிவித்திருக்கின்றார். இதன்போது, இந்தியாவின் தேசிய தமிழ் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரின் சிந்துநதி - பாடலில் குறிப்பிடப்பட்டிருக்கும், இரு நாடுகளுக்கும் இடையிலான பாலத்தையும் மோடி நினைவுபடுத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு மேற்கொண்ட முதல் பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையில் பாலம் அமைக்கும் யோசனையை முன்வைத்திருந்தார். பாலம் அமைக்கும் விவகாரம் சற்று நெருக்கடியான விடயமாகவும் அடிப்படைவாதிகளால் நோக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், நீண்டகாலமான இழுபறி நிலையில் இருந்துவந்தது குறித்த கப்பல் சேவை தற்போது ஆரம்பமாகியிருக்கின்றது.

இலங்கையில் பெரும் திட்டங்களை முன்னெடுக்கும் முயற்சியில் இந்தியா ஆர்வம் காண்பித்துவருகின்றது. ஏற்கனவே இதற்கான ஆரம்ப கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக திருகோணமலையை மையப்படுத்தி, முன்னெடுக்கத் தீர்மானித்துள்ள இரண்டு நாடுகளுக்கும் இடையிலான எண்ணெய் குழாய் பொருத்தும் திட்டம் பிரதானமானது.

இலங்கையின் பொருளாதார மீட்சியில் இந்தியாவின் திட்டங்கள் பெருமளவில் செல்லாக்கு செலுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியா பொருளாதார நிலையில் உலகின் ஐந்தாவது சக்தி. பிரித்தானியாவை பின்னுக்குத் தள்ளியிருக்கும் நாடு. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கணிப்பின்படி இன்னும் சில வருடங்களில், பொருளாதார நிலையில் மூன்றாம் நிலை சக்தியாக இந்தியா எழுச்சியுறும். இவ்வாறானதொரு நிலையில் இந்தியாவின் அயல்நாடுகள் அனைத்துமே பொருளாதார ரீதியில் நன்மைகளை பெறமுடியும். ஓர் உடனடி அயல் நாடென்னும் நிலையில், இலங்கைக்கு சாதகம் அதிகம்.

ஆனால், இலங்கையின் ஆட்சியாளர்கள் தொடர்பில் ஒரு பிரச்னையுண்டு. இந்தியாவுக்கு வழங்கும் வாக்குறுதிகளுக்கு அமைவாக கொழும்பு நடந்துகொள்வதில்லையென்னும் குற்றச்சாட்டு அவ்வப்போது மேலெழுவதுண்டு. கிழக்கு கொள்கலன் முனைய விவகாரத்தின் போது, முன்னைய ஆட்சியாளர்களுடன் இணக்கம் காணப்பட்ட உடன்பாட்டிலிருந்து, கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் விலகி சங்கடங்களை ஏற்படுத்தியிருந்தது.

இந்தியா - அதன் அயலுறவுக் கொள்கையின் கீழ் அயல் நாடுகளை நட்பு நாடுகளாகவே கருதுகின்றது. அந்த அடிப்படையிலேயே விடயங்களையும் கையாளுகின்றது. இலங்கை பொருளாதாரரீதியில் வங்குரோத்து அடைந்தபோது, இந்தியாவே கைகொடுத்தது. நிபந்தனைகளின்றி 4 பில்லியன் டொலர்களை வழங்கியது இதனால் ஆபத்தான நிலையை அடைவதிலிருந்து இலங்கை தப்பியது. அதேபோன்று, ஈழத் தமிழ் மக்களின் பிரச்னையிலும் இந்தியா ஒன்றே தொடர்ந்தும் அரசியல் தீர்வை வலியுறுத்திவரும் ஒரேயொரு நாடாகும்.

குறித்த கப்பல் சேவை தொடர்பில் எமது முன்னைய ஆசிரியர் தலையங்கத்திலும் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தோம். அதாவது, இந்த கப்பல் சேவை வடக்கு மாகாணத்தின் பொருளாதார நலன்களிலும் பெரியளவில் செல்வாக்குச் செலுத்தும். இதனை சாதகமாக தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்ளும். அனைத்தையும் கறுப்பு - வெள்ளையாக நோக்கும் தமிழ் பார்வையிலிருந்து விடுபட்டு, தென்னிந்திய - வடக்கு இணைப்பை, முற்றிலும் சாதகமாக பயன்படுத்திக் கொள்வது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

# புதிய வரிகளை சுமத்தமுடியாது



ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

கொழும்பு, ஒக். 15

"நாட்டு மக்கள் மீது புதிய வரிகளை சுமத்த முடியாது என்றும் வருமான வரி செலுத்தாத வர்களிடமே வரி அறவிடப்பட வேண்டும் என்றும்" நிதி இரா ஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் வருமானம் ஈட்டும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடியவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நிதி அமைச்சில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அமைச்சர் ரஞ்சித் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் வருவாயை அதிகரித்து விரைவாக வருமான இலக்குகளை நோக்கி நகர வேண்டும்.

மேலும் இந்நாட்டு மக்கள் மீது புதிய வரிகளை சுமத்த முடியாது. தற்போதுள்ள முறையில் வருமான வரி செலுத்தாதவர்களிடமே வருமான வரி அறவிடப்படவேண்டும்- என்றார். (அ)

# ஜப்பான்-இலங்கை சுதந்திர வர்த்தக வலயம் மிகவிரைவில் இலங்கையில்!

கொழும்பு, ஒக். 15

ஜப்பான்-இலங்கை சுதந்திர வர்த்தக வலயமொன்றை இந்நாட்டில் உருவாக்கத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இதற்காக பிங்கிரிய மற்றும் இரணைவில ஆகிய பகுதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது துறைமுக நகரம் தொடர்பான நிர்மாணப் பணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதி தற்காலிகமாக பொதுமக்களுக்கு பார்வையிடவும் திறக்கப்பட்டுள்ளது.

முத்தரப்பு ஒத்துழைப்பின் கீழ் துறைமுக நகர செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது சுமார் 15 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதிகொண்ட திட்டமாகும். சைனா ஹார்பர் நிறுவனத்தின் சுமார் 80 வீத நிர்மாணப் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

துறைமுக நகரத்தில் வர்த்தகம் செயற்பாடுகளுக்கு அவசியமான சட்டக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. பல்வேறு செயல்பாட்டு விதிமுறைகளும் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படுள்ளன. ஏனைய சட்ட வரைவுகளும் எதிர்காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

சுமார் 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகள் ஏற்கனவே கிடைத்துள்ளன. ஆனால், சட்டக் கட்டமைப்பைத் தயாரிக்கும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. அதன்படி, எதிர்காலத்தில் இந்த முதலீடுகளை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

முழுமையான வணிக செயற்பாடுகளுக்காக 74 நிலப் பகுதிகள் இத்திட்டத்தில் உள்ளடங்குகின்றன. பொதுவான செயற்பாடுகளுக்காக 44 பகுதிகள் உள்ளன. அதன்படி இங்கு மொத்தம் 118 நிலப் பகுதிகளுக்கான முதலீடுகள் உள்ளன.

மேலும், ஜப்பான்-இலங்கை சுதந்திர வர்த்தக வலயமொன்றை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை பிங்கிரிய பிரதேசத்திலும் இரணைவிலைக்கு அருகாமையிலும் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பான்-இலங்கை வர்த்தக சபை ஒன்று உள்ளது. ஜப்பானில் உள்ள அந்த சபையில் பாரிய அளவில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் ஏராளமான தொழிலதிபர்கள் உள்ளனர்.

அவர்கள் இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்க விரும்புகிறார்கள். அதற்குத் தேவையான பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# சுவர் இடிந்து விழுந்து பதுளையில் வீடு சேதம்!

கொழும்பு, ஒக். 15

பதுளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பதுளை அமுனுவெல்பிடிய - வட்டலுவ கொடபதன பகுதியில், மழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்தமையினால் வீடு பகுதியளவு சேதமடைந்துள்ளது.


சுவர் இடிந்து விழுந்ததால் வீட்டின் கூரைகளும் கீழே விழுந்து சேதமடைந்துள்ளன.

அத்துடன் வீட்டில் இருந்த பொருட்களும் சேதமடைந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் இடம்பெறும் போது வீட்டில் 5 பிள்ளைகளும் தாய் மாத்திரமே இருந்துள்ளதாகவும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இவ்வனர்த்தம் நேற்று முன் தினம் இரவு 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -99

# குழந்தைகளிடமிருந்து தொடங்கும் விழிப்புணர்வு

**கணபதி சர்வானந்தா**

கடந்த 13 வெள்ளிக் கிழமையன்று யாழ். புங்கங்குளம் கண்டி வீதி முன் புறூடிஸ் ஒழுங்கையில் அமைந்துள்ள "லிற்றில் சுட்டீஸ் மொன்ருசோரி" (டுவைவடந ஊாரவவறைள ஆழவெழளழசசை) இல் இருந்து கருவி நிறுவனத்துக்கு ஒரு அழைப்பு வந்தது. இன்று "சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை எமது கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த சிறுவர்கள் சகிதம் கொண்டாடுகிறோம். வாருங்கள் என" அந்த அழைப்பிலே குறிப்பிடப்பட்டிருந்தது.

அங்கு போகும்போது அக் கொண்டாட்டம் பற்றி எமக்குள்ளே பல கேள்விகள். சிறுவர்கள், வெள்ளைப் பிரம்பு இந்த இரண்டினை யும் இணைத்தவாறே அந்தக் கேள்விகள் அமைந்திருந்தன. அந் தச் சிறுவர்களுக்கு வெள்ளைப் பிரம்பு பற்றிய விழிப்புணர்வை எவ்வாறு வடிவமைத்திருப்பார்கள்? என்ப தைக் காணும் ஆர்வத் தோடு அந் நிறுவனத்தைச் சென்றடைந்தோம்.

முறைப்படி வரவேற்கப்பட்டோம். ஏறத்தாழ 100 க்கு மேற்பட்ட சிட்டுகளுக்கு முன்பு நாம் அமர்ந்திருக்க நிகழ்வு தொடங்கியது. நிறுவன முதல்வர் திருமதி நீலகி அரவிந்தன் அவர்கள் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து அங்குள்ள ஆசிரியைகளில் ஒரு வர் விழாவினை வழிநடத்திச் சென்றார். அந்த ஆசிரியை பிறருடன் அன்பாக இருப்பது பற்றி, பிறருக்கு உதவுவது பற்றி அந்தச் சிறுவர் கள் விளங்கிக் கொள்ளக் கூடிய மொழியில் அவர் களோடு உரை யாடினார். அவர்கள் நடமாடும் சூழலில் ஒரு விழிப் புலனற்றவரைக் கண்டால் அவருக்கு எவ்வாறு உதவ வேண்டும் என்ற விபரங்களை எடுத்துச் சொன்னார். தொடர்ந்து வெள்ளைப் பிரம்பின் முக்கியத்து வத்தையும் அதனால் விழிப்புலனற்றவர்கள் பெறும் நன்மைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து கருவி நிறுவனத்தைச் சேர்ந்த திரு. து.யசிந்தன் திருக்குறள் வழியே திருவள்ளுவர் சொல்லிய "பிறருக்கு உதவு வது" என்ற விடயத்தினைச் சிறுவர் மொழியிலேயே எடுத்துரைத்து அவர்களோடு உரையாடினார்.

மேற்படி நிகழ்வில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் அச் சிறு வர்களின் எதிர் வினையாற்றல்களை அவதானித்தபோது ஒரு விட யத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அன்று மட்டு மல்ல தினமும் அவர்களுக்கு இவ்வாறான விடயங்கள் எடுத்துச் சொல்லப் படுவதோடு அவற்றை கதைகளாகவும், கலைகளாகவும், இலக்கி யங்களுக்கூடாகவும், அரங்கத்துக்கூடாகவும் அவர்க ளுக்கு சொல் லப்படுகிறதென்ற உண்மையை என்னால் கிரகிக்க முடிந்தது.



அது மட்டுமல்லாது அந் நிறுவனம் அத் தின ஞாபகார்த்தமாக ஒரு நீர் சுத்தகிரிப்பு கருவியொன்றையும் கருவி நிறுவனத்துக்கு அன்பளிப்பாக வழங்கியது. அதனை அவர்கள் கருவி நிறுவனத் துக்குக் கொடுத்ததென்பது முக்கியமல்ல. அந்தப் பொருளை அவர் கள் வாங்குவதற்கு நிதியைச் சேகரித்த முறைமையைத்தான் பெரி தெனலாம். நிகழ்வுக்குப் பல நாட்களுக்கு முன்பு நிதி சேகரிப்புக்கென ஒரு பெட்டியைத் தயாரித்து அதனை அவர்கள் பார்வைக்கு வைத்தி ருந்தனர். பின்னர் அதன் முக்கியத்துவம் அவர்களுக்கு அறிவிக் கப்பட்டது. கூடவே அது அவர்கள் பெற்றோர் களைச் சென்றடையவும் வழிவகுக்கப்பட்டது. சிறுவர்கள் சமூகத் தைப் பற்றிச் சிந்திக்க இது போன்ற நடவடிக்கைகளும் வழி வகுக்கும் என்ற விளக்கமும் பெற்றோர்களுக்கு சொல்லப்பட்டது.

அது மட்டுமல்லாது சிறுகச் சிறுகச் சேமிப்பது, சேமிப்பின் முக்கி யத்துவத்தை அவர்களுக்கு உணர்த்துவது, அது கொண்டு சமூ கத்துக்குரிய தேவையை அறிந்து அதனை நிவர்த்து செய்வது எனப் பலவற்றை இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சிறுவர்க ளுக்கு உணர்த்தலாம் என அக் கல்வி நிறுவனம் நம்புவது தெரி கிறது.

பொதுவாக ஒரு கல்வி நிறுவனம் தமது கல்விச் செயற்பாடு களோடு தம்மை எல்லைப்படுத்திக் கொள்ளாது சமூகம் சார்ந்து ஒரு வர் கொண்டிருக்க வேண்டிய பொறுப்பையும் உணர்த்தித் தமது மாணவர்களை வழி நடத்துவதென்பது போற்றத்தக்கது. அச் செயற் பாட்டினை முளையிலே ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லார் மத்தியிலும் ஏற்பட வேண்டும் என்பதற்கு மேற்படி கல்வி நிறுவனம் ஒரு சான்றாக அமையும் என்பது எனது கருத்து.

ஒருவர் விரும்புவதுதான் அவர் செயற்பாடாகப் பரிணமிக்கும் என்ற சொல்லுக்கு அமைய மேற்படி செயற்பாடும் அந் நிறுவனத்தின் விருப்பாகவும் இருந்திருக்கிறது.தம்முள்ளே உதித்ததை அவர்கள் நடவடிக்கையாக வெளிக் கொணர்ந்திருக்கிறார்கள். அதனையும் சிறுவர்களை வளப்படுத்துகின்ற ஒரு நடவடிக்கையாக மாற்றி அதற் கேற்ப நிகழ்வுகளை வடிவமைத்து, அது சார்ந்த நிறுவனங்களை ஒன்றிணைத்து அந் நிகழ்வை சமூகத்துக்கு ஒரு முன்னுதாரண மாக்கியிருப்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

தற்போது எமது சமூகத்திலே நலிவடைந்து செல்கின்ற "பிறருக்கு உதவ வேண்டும்" என்ற சிந்தனையைப் பல வழிகளிலே புதுப்பித்து எமது சமூக ஆரோக்கியத்தை பலப்படுத்துவதென்பதைத் தலையாய கடமைகளில் ஒன்றெனப் பலர் கருகின்றனர்.

சிறுவர்களை வளப்படுத்துவதனூடாக, அவர்களை ஆரோக்கிய முள்ள மனிதர்களாக வளர்த்தெடுப்பதனூடாக, ஒரு தலைசிறந்த சமூகத்தைக் கட்டமைக்கலாம் என்ற உயரிய சிந்தனையின் அப் படையிலே பலர் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

யுத்தத்துக்குப் பின்னரான காலப்பொழுதில் எமது சமூகத்தில் நடைபெற்ற ஆரோக்கியமற்ற பல நடிவடிக்கைகளுக்கு நாம் தான் காரணம் என்பது பலரறிந்த விடயம். முதலில் பிறர் நலன் சார்ந்த சிந்தனைகளை வளர்த்தெடுக்கத் தவறியதை முக்கியமாகக் குறிப் பிடலாம். பிறர் நலன் சார்ந்து சிந்திக்காதவனும், அவர்களை வளப் படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணம் அற்றவனும் சமூகத்துக் குத் தேவையற்றவன் என்பதை நன்கறிந்த ஔவையார், சிறுவர் களை வளப்படுத்தக் கூடிய சிந்தனைகளை ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியவற்றினூடாகவும் திருவள்ளுவர் திருக்குறளினூ டாகவும் விதைத்திருக்கிறார்கள். இவை இற்றைக்குப் பல ஆண்டுக ளுக்கு முன் நடந்த கதை.

பொதுவான சமூக மாற்றத்துக்கான நற் சிந்தனைகளைக் கருத் தில் கொண்டு இது போன்ற காரியங்கள் அதிகம் நடைபெற வேண் டும். நடைபெறாதவிடத்து அவை நடைபெற நாம் அவற்றை ஊக்கு விக்க வேண்டும் என்பது காலத்தின் தேவை எனக் கொள்வோமாக.

# இந்தவார ராசிபலன் 15.10.2023 - 20.10.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 28
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பிரதமை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மனதுக்கினிய பயணம் செய்ய நேரிடும். எதிரிகள் தானாக விலகி விடுவார்கள். குழந்தைகள் பற்றிய கவலையில் இருந்து விடுபடுவீர்கள். உயர்ந்தோரின் நட்பு கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பாராட்டு கள் கிடைக்கும். வியாபாரிகள் சுறுசுறுப்பாக வியாபாரத்தை மேற் கொள்வார் கள். விவசாயிகள் நல்ல விளைச்சலைக் காண்பார்கள். அரசியல்வாதிகள் முக்கிய பொறுப்புகளை ஏற்பார்கள். கலைத் துறையினருக்கு அனுகூலமான திருப்பம் உண்டாகும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

தொழிலில் உற்பத்தியைப் பெருக்குவீர்கள். பிறருக்கு உதவி களைச் செய்வீர்கள். கடன் வாங்கும் நிலை இருக்காது. எவருக்கும் கடன் வாங்கித் தர வேண்டாம். உத்தியோகஸ்தர்கள் நற்பெயர் எடுப் பர். வியாபாரிகள் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவார்கள். விவ சாயிகள் வருவாயைப் பெருக்குவார்கள். கலைத் துறையினர் ஏற்றத் தாழ்வுகளைச் சந்திப்பார்கள். பெண்கள் குழந்தைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்துவார்கள். மாண வர்கள் நண்பர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பார்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். சிலர் புதிய நிலங் களை வாங்குவார்கள். கௌரவமும் அந்தஸ்தும் உயரும். மருத்து வச் செலவுகள் குறையும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்ப்புகள் வில கும். வியாபாரிகள் புதிய முயற்சிகளைத் துணிவுடன் செயல்படுத்து வார்கள். விவசாயிகள் பயிர்களுக்கு பூச்சிகொல்லிகளைப் பயன் படுத்துவார்கள். அரசியல்வாதிகள் பயணங்களால் நன்மை அடைவார்கள். கலைத் துறை யினருக்கு பண வரவு இருக்கும். பெண்கள் சேமிக்கத் தொடங்குவீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பெற்றோருடன் இணக்கமாகப் பழகுவீர்கள். பிரச்னைகளில் இருந்து விடுபடுவீர்கள். இல்லத்தின் தேவைகளைப் பூர்த்தி செய் வீர்கள். குறைந்த லாபத்தில் தொழிலை நடத்துவீர்கள். உத்தியோ கஸ்தர்களுக்கு கெடுபிடிகள் குறையும். வியாபாரிகளுக்கு வேலைப் பளு குறையும். விவசாயிகள் புதிய உபகரணங்களை வாங்குவீர்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களுக்கு உதவுவார்கள். கலைத் துறையினருக்கு வெற்றி கிடைக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிந்தித்து காரியமாற்றுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிறையும். சமுதாயத்தில் அந்தஸ்து கூடும். வெளியூரில் இருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் அன்பைப் பெறுவார்கள். வியாபாரிகள் கடைகளை விரிவுபடுத்துவார்கள். விவ சாயிகளுக்கு புதிய குத்தகை கிடைக்கும். அரசியல்வாதிகள் தொண்டர் களைப் பகைத்துகொள்ள வேண்டாம். கலைத் துறையினருக்கு விருதுகள் கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பிறரிடம் விட்டுக் கொடுத்து பழகுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள். குழப்பங்களைத் தவிர்க்க, தனிமையை நாடுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் தடைகளைத் தாண்டி பொருள்களை விற்பனை செய்வார்கள். விவசாயிகள் கால்நடைகளின் மீது தனிக் கவனம் செலுத்துவீர்கள். அரசியல்வாதிகள் புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். கலைத் துறையினருக்கு புதிய வாய்ப்பு கிடைக்கும். மாணவர்களுக்கு விளையாட்டுகளில் வெற்றி கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உடல் ஆரோக்கியம் சிறக்கும். உங்களுக்குக் கீழ் பணிபுரிவோர் சற்று அசிரத்தையாக இருப்பார்கள். தொழிலில் வளர்ச்சியைக் காண்பீர்கள். பிறரிடம் இன்முகத்துடன் பழகுவீர்கள். உத்தியோகஸ் தர்களுக்கு எதிர்ப்புகள் ஏற்படாது. வியாபாரிகள் புதிய லாபத்தை எட்டுவார்கள். விவசாயிகள் பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வார்கள். கலைத் துறை யினரின் கௌரவம் உயரும். மாணவர்களின் திறமை வெளிப்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

பொறுப்புடன் பணியாற்றி நல்ல பலன்களைப் பெறுவீர்கள். பெற் றோரும் ஆதரவாக இருப்பார்கள். உயர்ந்தோரின் நட்பால் அந்தஸ்து உயரும். சிலருக்கு வருமானம் உயரும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் நற்பெயர் எடுப்பார்கள். வியாபாரிகள் செலவுகளைக் குறைப்பார்கள். விவசாயிகள் புதிய கிணறுகளை வெட்டுவார்கள். அரசியல்வாதிகள் எதிரிகளை வெல்வார்கள். கலைத் துறையினருக்கு வெற்றி கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

நண்பர்களின் குணாதிசயங்களைப் புரிந்துகொள்வீர்கள். எதிர்த்தவர்களும் நட்பு கொள்வார்கள். சாதுர்யமாகப் பேசுவீர்கள். அரசு கெடுபிடிகளும் குறையும். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர் களின் வேலைகளைக் குறைப்பீர்கள். வியாபாரிகள் வீண் செலவுக ளைத் தவிர்ப்பீர்கள். விவசாயிகள் கடினமாக உழைப்பார்கள். அரசியல்வாதிகளின் மதிப்பு உயரும். கலைத் துறையினருக்குப் புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

தொழில் பிரச்னைகளுக்கு நல்ல தீர்வை காண்பீர்கள். அநா வசிய வாக்குவாதங்களைத் தவிர்த்து விடுவீர்கள். பெற்றோரின் ஆசையைப் பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் ஊதிய உயர வைப் பெறுவார்கள். வியாபாரிகள் சக வியாபாரிகளிடையே நல்ல மதிப்பைப் பெறுவீர்கள். விவசாயிகள் கடன்களை அடைப்பீர்கள். அரசியல்வாதிகளின் செயல் பாடுகள் சிறக்கும். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.பண்கள் குடும்பப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பீர்கள். மாணவர்களின் தனித்திறமை வெளிப்படும்

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


கவனமாகப் பணியாற்றுவீர்கள். வழக்கு விவகாரங்களில் வெற்றி பெறுவீர்கள். பொருளாதாரம் சிறப்பாகவே இருக்கும். சேமிப்புத் திட்டங்களில் சேர்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பய ணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளிடையே இருந்த போட்டியும் பொறாமையும் விலகும். விவசாயிகள் புதிய குத்தகைகளை எடுப்பீர் கள். அரசியல்வாதிகள் பிறருக்கு உதவி செய்வீர்கள். பெண்களுக்கு குடும்பத்தில் செல்வாக் கும் மதிப்பும் உயரும். மாணவர்களுக்கு சிந்தனையில் தெளிவு உண்டாகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

காலம் தாழ்த்தாமல் முடிவு எடுப்பீர்கள். பங்குச் சந்தையில் வரு மானம் உயரும். உறவினர்களுக்கு உதவுவீர்கள். உடல் உபாதைகள் நீங்கும். உத்தியோகஸ்தர்கள் திட்டமிட்டு செயல்படுவீர் கள். வியாபாரிகள் கடுமையாகப் போராடி போட்டிகளை சமாளிப்பீர்கள். விவசாயிகள் நிலப் பிரச்னைகளில் நல்ல முடிவைக் காண்பீர்கள்.

அரசியல்வாதிகள் பல விவகாரங்களில் முக்கிய பங்காற்றுவீர்கள். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்களுக்கு கணவரிடம் அன்பும் பாசமும் அதிகரிக்கும். மாணவர்கள் புதிய நண்பர்களிடம் எச்சரிக்கையாகப் பழகவும்.

# “ஒண்ணுமே புரியல உலகத்திலே...”



சென்னை மடல்
-பகவான் சிங்-

## சர்வதேச மோதலாகும் சர்வதேச உறவு!

எனக்கு அருகிலும், தொலைவிலும் நடக்கும் விஷயங்களைக் கவனிக்கத் தவறினாலோ, அவற்றுக்கு ஏதேனும் ஒரு வழியில் எதிர்வினை ஆற்றாமல் இருந்தாலோ என் வாழ்வே வீண்.

மேலே உள்ள வெளிச்சத்தை அறியாத, ஆழ்ந்த சேற்றுக் கிணற்றுத் தவளையாகவே நான் இருந்து மடிந்து விடுவேன். செய்தித்தாள்களைப் படிக்காமல், தொலைக்காட்சியிலும் மொபைல் போன் திரையில் கிடைக்கும் பல்வேறு செயலிகளிலும் டிஜிட்டல் ஊடகங்களில் நூற்றுக்கணக்கான சமூக ஊடக தளங்களிலும் கிடைக்கும் செய்திகளைப் பார்க்காமல் கழியும் வாழ்க்கையைப் பற்றித்தான் நான் பேசுகிறேன். சுருக்கமாக, அச்சு, காட்சி மற்றும் டிஜிட்டல் தளங்களில் உள்ள பல தகவல் ஆதாரங்களை நான் குறிப்பிடுகிறேன். என் வாழ்க்கைக்கு இவையெல்லாம் ஒரு பொருட்டல்ல என்று நினைப்பதால் நான் இவற்றைப் புறக்கணிக்கத் துணிந்தவனாகிறேன். ஆகையால், நான் அந்தத் தவளையாகவே இருந்து விடுகிறேன். அதோடு, நான் எனது பல்கலைக்கழக வகுப்புகளில் கலந்துகொள்வதில் மிகவும் திருப்தி அடைகிறேன். அதிக மதிப்பெண்களுடன் தேர்வில் தேர்ச்சி பெறுகிறேன் அதனால் வெளிநாட்டில் உயர்கல்விக்கான உதவித்தொகை அல்லது இங்கு நல்ல வேலை கிடைக்கும் என்பதற்காகவோ அல்லது பகலில் அலுவலகத்தில் எனது முதலாளிகளை மகிழ்விப்பது, மாலை மற்றும் வார இறுதி நாட்களில் குடும்பத்துடன் நேரத்தைச் செலவிடுவது மற்றும் எனது செலவுகளுக்காகவும் என்னைச் சேர்ந்தவர்களுக்காகவும் சம்பாதிப்பதிலும் வியாபாரம் செய்வதிலும் நான் திருப்தியடைகிறேன். வெளி உலகம் எனக்குத் தேவையற்றது என நினைக்கிறேன். ஆனால், ஒரு கிணற்றுத் தவளையாக நான் இறக்க விரும்பவில்லை என்றால், அருகில் மற்றும் தொலைவில் என்ன நடக்கிறது என்பது பற்றிய தகவல்களை எனது தேவைகளுக்குப் பொருத்தமற்றவை என்று நிராகரிக்காமல், தீவிரமாக அணுக நான் விரும்பினால் - அவற்றுக்கெல்லாம் தொடர்ந்து எதிர்வினையாற்ற நினைத்தால் - நான் அந்தத் தகவல்கள் அனைத்தையுமோ அல்லது எனது ஞானமும் புத்திசாலித்தனமும் சல்லடை போட்டு சலித்து அவற்றில் என்னைச் சேர்ந்தவர்களுடன் தொடர்புடையவை, முக்கியமானவை எனத் தேர்ந்தெடுத்தவற்றையோ அவர்களுடன் பகிர்ந்து கொண்டால் - தகவலைப் பகிர்வது மட்டுமல்லாமல், அவை குறித்த விவாதங்களையும் தொடங்கினால் - நண்பர்களே, தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள், நச்சுக் காற்றை மட்டுமே சுவாசிக்கும் இருள் சூழ் உலகிலிருந்து ஓர் ஒளிமயமான, நேர்மறையான உலகை நாம் இந்தத் தெளிவுடன் உருவாக்க முடியுமல்லவா?

கிணற்றுத் தவளைப்பற்றி நான் உங்களிடம் பேசுகிறேன், ஏனெனில், சில காலமாகவே, என்னைச் சுற்றிப் பல கிணற்றுத் தவளைகளை நான் பார்க்கிறேன். இது மிகவும் கவலைக்குரிய ஒரு நிலை. இந்த நிலை குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே பரவலாக உள்ளது. அவர்கள், கடந்த காலத்தில் என்ன நடந்தது, இப்போது உலகில் என்ன நடக்கிறது என்பது பற்றிய பரந்த அறிவைக் கொண்டு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை மதிப்பீடு செய்து, நம் உலகின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் துடிப்புடன் செயல்பட வேண்டியவர்கள். நமது இளைஞர்களில் பலர் தங்கள் முதுகலைப் பட்டங்களைத் தொடர்வதற்கும், வெளிநாடுகளுக்குப் பறப்பதற்கும் தேவையான அதிக மதிப்பெண்களை அடைவதற்காகத் தங்கள் கல்வி இலக்குகளைத் தொடர்வதிலேயே திருப்தி அடைகிறார்கள்.

தயவுசெய்து என்னை தவறாக நினைக்காதீர்கள். கல்வியிலும் வெளிநாட்டு வேலை பெறுவதிலும் கவனம் செலுத்துவதில் தவறில்லை. ஆனால், இந்த ஒரு விஷயத்தில் மட்டுமே ஈடுபாட்டைக் காட்டி, சுற்றிலும் உள்ள உலகிற்குக் கதவடைத்துக்கொள்வது என்னைப் பொறுத்தவரை மிகவும் தவறு மட்டுமல்லாமல், குற்றமும் பேரிடரும்கூட. 1978இல் ‘பிரஸ் டிரஸ்ட் ஒவ் இந்தியா (பி.ரி.ஐ) யின் நிருபராக நான் முதன்முதலில் பத்திரிகைத் துறையில் நுழைந்தபோது, மக்கள் செய்தித்தாள்களை வாங்குவதும், சூடான காபி அல்லது தேநீர் பருகுவதைப்போன்ற ஆர்வத்துடன் அவற்றை வாசிப்பதும், மதிய உணவு இடைவேளையின்போது சக ஊழியர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கும் வாசிப்பதற்கும் அவற்றை அலுவலகங்களுக்கு எடுத்துச் செல்வதும் மிகவும் பொதுவான காட்சியாக இருந்தது. பல வருடங்களுக்கு முன்பு வீட்டின் வரவேற்பறைக்குள் ரிவி வந்தபோது, செய்தித் தொகுப்புகள்தான் அதிகம் தேடப்பட்டன. பிபிசி தமிழ் ஓசை ஈழப் போரைப்பற்றி மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமிருந்து தகவல்களைக் கொண்டுவருவதற்கு வீட்டின் அத்தியாவசியத் தேவையாக இருந்தது. ஆனால், ஆண்டுகள் செல்லச் செல்ல,



மக்கள் செய்தித்தாள்களை வாசிப்பதில் அல்லது தொலைக்காட்சி மற்றும் வானொலியில் செய்தி அறிக்கைகளுக்காக காத்திருப்பதில் ஆர்வத்தை இழந்துவிட்டனர். இளைய தலைமுறையினர் செய்திகளை அணுகும் முறை மிகவும் மோசமாக உள்ளது் அவர்கள் பெரும்பாலும் தங்கள் மொபைல் போன்களில் சமூக ஊடகத் தகவல்களையும், ‘சாதாரண விஷயங்களையும்’ பொழுதுபோக்கு, அரட்டை மற்றும் பிற ஆபாசங்களையும் பகிர்ந்துகொள்வதிலுமே அதிக நேரம் செலவிடுகிறார்கள். மேற்கத்திய உலகில் உள்ள மிக வலுவான ஊடக நிறுவனங்கள்கூட தங்கள் செய்தித்தாள்களை விற்பதில் சிரமம் ஏற்பட்டதால், அவற்றின் அச்சுப் பதிப்புகளை மூடிவிட்டன. தங்கள் செய்தி வணிகத்தை மடிக்கணினிகள் மற்றும் மொபைல் போன்கள் போன்ற டிஜிட்டல் தளங்களுக்கு மாற்றினர். அவர்களில் சிலர் தங்களுடைய விலையுயர்ந்த ரியல் எஸ்டேட்டை விற்றுப் பிழைப்பை நடத்தினர். இப்போது, நகர்ப்புற வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் கிராமப்புற விவசாயிகள்கூட தங்கள் மொபைல் போன்களில் பிஸியாக இருப்பதைக் காண்கிறோம் ஆனால், அவர்களையும் அவர்களின் நாட்டையும் பாதிக்கும் தீவிரமான செய்திகளைக் காட்டிலும், அவர்கள் பெரும்பாலும் பொழுதுபோக்கு மற்றும் வதந்திகள் சார்ந்த விஷயங்களில் ஆர்வமாக உள்ளனர். அவர்களையும் குறைகூற முடியாது, ஏனென்றால், நமது சமூகத்தில் படித்த மற்றும் அறிவார்ந்த பிரிவினர்கூட அதையேதான் செய்கிறார்கள்.

நான் ஒரு பழங்காலத்து ஆசாமி, கிணற்றுத் தவளையல்ல. ஹமாஸுக்கும் இஸ்ரேலிய அரசாங்கத்துக்கும் இடையில் யார் தவறு, யார் சரி என்ற கூக்குரலுக்கு மத்தியிலும் - இஸ்ரேலிலும் அண்டை பகுதியான காசாவிலும் இந்த மாபெரும் உயிர் மற்றும் உடைமை இழப்புக்கள் குறித்து அறிந்திருக்கிறேன்- இவையெல்லாம் எங்கோ ஒரு மூலையில் நடந்துகொண்டிருந்தாலும்கூட. டெல் அவிவ் மற்றும் காசாவில் என்ன நடக்கிறது என்பது உண்மையில் எனக்குத் தொடர்பில்லாதது என்று கூறி நான் தப்பித்துக்கொள்ளவில்லை. பல குழந்தைகள் படுகொலை செய்யப்படுவதையும், சிறுமிகள் பலாத்காரம் செய்யப்படுவதையும், மக்கள் வீடிழந்து பட்டினியால் வாடுவதையும் கண்டும் காணாமல் கடந்து செல்லும் குற்ற உணர்விலிருந்து என்னால் தப்ப முடியவில்லை. ‘சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் மக்களாகிய நாம் இவ்வளவு துன்பங்களை அனுபவித்தபோது உலகம் கவலைப்படவில்லையே’ என்று எண்ணித் தற்போது அதேபோன்று அலட்சியத்தைக் காட்டமாட்டேன். பாலஸ்தீனர்கள் மற்றும் இஸ்ரேலியர்கள், அரேபியர்கள் மற்றும் யூதர்கள் பற்றி நாம் ஏன் இப்போது கவலைப்படவேண்டும்? என்று கேட்கலாம். இந்த அநாகரிகமான போக்கு எனக்கு உடன்பாடில்லை. மாறாக, இரத்தம் தோய்ந்த ஈழம் போன்றே, ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக கொந்தளிப்பாக இருந்த அந்த மத்திய கிழக்கு பிராந்தியத்தில் வெளிப்படும் துயரத்தை நான் உன்னிப்பாகக் கவனித்து வருகிறேன்.

ஒக்ரோபர் 7 அன்று காசா பகுதியில் இருந்து ஹமாஸ் தீவிரவாதிகள், இஸ்ரேலைத் தாக்கி, குண்டுகளை வீசிப் பெரும் எண்ணிக்கையிலான இறப்புகளுக்கு வழிவகுத்ததையடுத்து, இப்போதைய போர் வெடித்தது. அதைத் தொடர்ந்து இஸ்ரேல் அளித்து வரும் பதிலடியில், அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட காசாவின் பல பகுதிகள் தகர்க்கப்பட்டு, ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். வெறும் 365 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள காஸா பகுதியில் 23 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அதில் ஏறத்தாழ பாதிப்பேர் 18 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள்.

மேலும் வெள்ளிக்கிழமை அன்று, இந்தப் போர் ஏழாவது நாளை அடைந்த தருவாயில், வடக்கு காசாவில் உள்ள சுமார் 1.1 மில்லியன் மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளதாக ஐ.நா. கூறியுள்ளது. வெளியேற்ற உத்தரவு, வரவிருக்கும் தரைவழி தாக்குதலுக்குக் கட்டியம் கூறுவதாக இருக்கலாம். ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருந்த காஸா பகுதியை இஸ்ரேலிய இராணுவம் வான்வழித் தாக்குதல் மூலம் தூள்தூளாக்கியதுடன், சாத்தியமான தரைவழித் தாக்குதலுக்கு முன்னதாக, பாலஸ்தீனர்கள் பொருட்களை சேமித்து வைக்க முயற்சித்த நிலையில், உணவு, தண்ணீர், எரிபொருள் மற்றும் மின்சார விநியோகம் தடைசெய்யப்பட்டது. காசா மக்களுக்கு எகிப்தில் இருந்து பொருட்கள் வருவதை இஸ்ரேல் தடுத்ததை அடுத்து, சர்வதேச உதவி குழுக்கள் மோசமான மனிதாபிமான நெருக்கடி எச்சரிக்கை விடுத்தன. ஒக்ரோபர் 7 அன்று ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு, இஸ்ரேல் - ஹமாஸ் போர் இரு தரப்பிலும், குறைந்தது 2,800 உயிர்களைக் கொன்றதாக வெள்ளிக்கிழமை வெளியான ஓர் அறிக்கை கூறுகிறது.

இஸ்ரேலின் நிறுவனரான டேவிட் பென்-குரியன் மே 14, 1948 இல் நவீன இஸ்ரேல் அரசை அறிவித்தார். மத ரீதியான கொடுமைகளிலிருந்து தப்பிய யூதர்கள், பல தலைமுறைகளாக அவர்கள் வாழ்ந்து வந்த ஒரு நிலப்பகுதியைத் தமது சொந்த நாடாகக் கோரிவந்த நிலையில் இந்தப் பாதுகாப்பான புகலிடம் உருவாக்கப்பட்டது. அடுத்த நாளே, ஐந்து அண்டை அரபு நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராகப் போரைத் தொடங்கின. அடுத்த ஆண்டு அந்தப் போர் முடிவடைந்ததில், 7.5 லட் சத்திற்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் இடம் பெயர்ந்தவர்களாகிவிட்டனர் மேலும் அந்தப் பகுதி இஸ்ரேல் அரசு, மேற்குக் கரை (ஜோர்டான் நதி) மற்றும் காசா பகுதி என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இன்று, காசா பகுதி இடம்பெயர்ந்த பாலஸ்தீனர்களின் தாயகமாக உள்ளது மற்றும் உலகின் அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

பாலஸ்தீனர்கள் இஸ்ரேலை நக்பா அல்லது பேரழிவாகவே கருதுகிறார்கள் - காரணம் இதனால் அவர்கள் புலம் பெயர்ந்து, தங்கள் நாட்டைக் கைவிட வேண்டியதாகியிருந்தது. காஸாவைத் தவிர, இந்த இடம்பெயர்ந்த பாலஸ்தீனர்கள் ஜோர்டான், சிரியா, லெபனான், மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

## வாழ்வைச் சிக்கலாக்கிய கொடூர மனிதன்

துன்புறுத்தப்பட்ட யூதர்கள் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குத் தப்பியோடி, 1948 இல் தங்கள் சொந்த நாடான இஸ்ரேலைப் பெற்றார்கள். பாலஸ்தீனர்களின் தாயகக் கனவு எப்போது நனவாகும் என்பதை எவராலும் யூகிக்க முடியவில்லை. எனது பத்திரிகையாள நண்பர் ஒருவர் ஒரு சுவாரஸ்யமான வாட்ஸப் பகிர்வு ஒன்றை எனக்கு அனுப்பியிருந்தார். அதை நான் உங்களுடன் பகிர விரும்புகிறேன். இந்த அழகான பூமியில் கொடூரமான மனிதன் வாழ்க்கையை எப்படி சிக்கலாக்கினான் என்பதை இது விளக்கும். ‘தயவு செய்து இதையெல்லாம் புரிந்துகொள்ள எனக்கு உதவ முடியுமா?’ என்ற கேள்வியுடன் எனது நண்பர் தனது செய்தியைத் தொடங்கியிருந்தார்.

இதோ அவரின் மெஸேஜ்:

சர்வதேச உறவுகள் ஏன் ஒரு பிரபலமான பாடமாக உள்ளது என்பதைப் பற்றிய புரிதல். (அது இப்போது சர்வதேச மோதல் என்று குறிப்பிடப்பட வேண்டும் என்பது வேறு விஷயம்)

ரஷ்யர்களும் உக்ரேனியர்களும் மத அடிப்படையில் சண்டையிடுகிறார்களா?

- இல்லை, இருவரும் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்கள்.

உக்ரேனியர்களை அமெரிக்காவும், ரஷ்யர்களை சீனாவும் ஆதரிக்கின்றன.

- அது சரி

சீனர்கள் நாத்திகர்களா?

-ஆமாம்

அப்போது அமெரிக்கா?

- அமெரிக்காவில் சில புரட்டஸ்டன்ட்டுகள், கத்தோலிக்கர்கள், மார்மன்கள் மற்றும் நாத்திகர்கள் உள்ளனர்.

இஸ்ரேலில்?

- அவர்கள் யூத மதத்தைச் சேர்ந்தவர்கள். மற்றும் பாலஸ்தீனர்கள்?

- பாலஸ்தீனர்கள் முஸ்லிம்கள். சுன்னிகள்.

பாலஸ்தீனர்களுக்கு யார் ஆதரவு தருகிறார்கள்?

- ஈரான்

(14ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல்களை தவிர்த்து சாத்தியமானளவு காலத்துக்கு அதிகாரத்தில் இருக்க வியூகம் வகுக்கும் அரசாங்கம்



வீரகத்தி தனபாலசிங்கம்

தேசிய தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுமா? அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுமா? பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றத்தைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என்ற தலைப்புகளுடன் கடந்த வாரம் வெளியான பத்திரிகைச் செய்திகள் இலங்கை அரசியல் நிலைவரம் எந்தளவுக்கு குழப்பகரமானதாக இருக்கிறது என்பதையும் மக்கள் முன்னால் செல்வதற்கு அஞ்சும் அரசாங்கம் தேர்தல்களைச் சந்திப்பதை தவிர்த்து எவ்வளவு காலத்துக்கு அதிகாரத்தில் இருக்கலாம் என்று தடுமாறிக் கொண்டிருப்பதையும் பிரகாசமாக வெளிக்காட்டுகிறது.

பாராளுமன்ற தேர்தலையும் பழைய தொகுதி அடிப்படையிலான முறை மற்றும் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை உள்ளடக்கிய கலப்பு முறையில் நடத்துவதற்கான யோசனை அடங்கிய அமைச்சரவை பத்திரம் ஒன்றை நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தயாரித்திருப்பதாக கூறப்படுகிறது.

அதன் பிரகாரம் தொகுதி அடிப்படையில் பாராளுமன்றத்துக்கு 160 உறுப்பினர்களை மக்கள் தெரிவுசெய்யும் அதேவேளை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் 65 ஆசனங்கள் ஒதுக்கப்படும்.

இந்த முயற்சி உள்ளூராட்சி தேர்தல்களை காலவரையறையின்றி ஒத்திவைத்ததைப் போன்று அடுத்த வருட பிற்பகுதியில் நடத்தப்பட வேண்டியிருக்கும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கான ஒரு முயற்சி என்று எதிரணி கட்சிகள் உடனடியாகவே சந்தேகத்தை கிளப்பியிருக்கின்றன.

உள்ளூராட்சி தேர்தல்கள் கலப்பு முறையில் ஏற்கெனவே ஒரு தடவை 2018 பெப்ரவரியில் நடத்தப்பட்டன. மாகாண சபைகளுக்கும் அதே கலப்பு முறையில் தேர்தல்களை நடத்துவதற்கு "நல்லாட்சி" அரசாங்க காலத்தில் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது. ஆனால் தொகுதி எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமிக்கப்படாத காரணத்தால் மாகாணசபை தேர்தல்கள் ஐந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாக நடத்தப்படாமல் இருக்கின்றன. அதனால் அரசாங்கத்தின் தற்போதைய முயற்சி குறித்து அரசியல் கட்சிகள் மத்தியில் மாத்திரமல்ல மக்கள் மத்தியிலும் வலுவான சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாதது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையும் விருப்பு வாக்கு முறையும் படுமோசமான ஊழலுக்கும் முறைகேடுகளுக்கும் காரணமாக அமைந்து பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை நான்கு தசாப்தங்களாக கேலிக்கூத்தாக்கியிருக்கும் நிலையில் மக்கள் தேர்தல் முறையில் மாற்றங்கள் தேவை என்று விரும்புகிறார்கள். பல வருடங்களாக இது தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் செய்யப்படக்கூடிய மாற்றங்கள் எந்தவொரு தேசிய தேர்தலையும் ஒத்திவைப்பதற்கு வழிவகுப்பதை மக்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

கடந்த வருடத்து மக்கள் கிளர்ச்சியை அடுத்து ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகிய காரணத்தினால் இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் நாட்டு மக்கள் வழங்கிய ஆணை இனிமேலும் செல்லுபடியாகக் கூடியது என்று வாதாடுவது உண்மையில் அர்த்தமற்றது.

புதிய ஜனாதிபதி அரசியலமைப்பின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டு அதே பாராளுமன்ற பெரும்பான்மையின் ஆதரவுடன் அவர் ஆட்சி செய்துவருகின்ற போதிலும், அரசாங்கத்தின் இருப்பின் நியாயப்பாடு கடுமையாகக் கேள்விக்குள்ளாகியிருக்கிறது. புதிய தேர்தல்களின் மூலமாக மக்கள் தங்களது பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்திருக்கிறது. இதற்கு மத்தியில் தேசிய தேர்தல்களை ஒத்திவைப்பது நிச்சயமாக ஜனநாயக விரோத செயலாகவே அமையும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு நிறைவேற்று அதிகார பிரதமருடன் கூடியதாக பாராளுமன்ற ஆட்சிமுறை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவேண்டுமா இல்லையா என்பது குறித்து சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றுக்கு இறுதியில் வழிவகுக்கக்கூடிய ஒரு முயற்சியின் அங்கமாகவும் விஜேதாச ராஜபக்சவின் அமைச்சரவைப் பத்திரம் இருப்பதாகவும்



இது தொடர்பில் அவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் விரிவான கலந்தாலோசனையை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இவை தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்பட விருப்பதாக விஜேதாச ராஜபக்ச கூறுகிறார்.

தேர்தல் சீர்திருத்தம் குறித்த அமைச்சரவை பத்திரம் அங்கீகரிக்கப்படுமானால்,

**பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றம், ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து அடிபடும் கதைகள்.**

அரசியல் சூழ்நிலையும் உகந்ததாக அமையும் பட்சத்தில் அரசியல் உயர்மட்ட கலந்தாலோசனைகளின் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செயயப்படும். ஜனாதிபதியினால் மாத்திரமே சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு உத்தரவைப் பிறப்பிக்கமுடியும்.

அந்த சர்வஜனவாக் கெடுப்பின் முடிவுகளின் அடிப்படையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுவதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதற்காக இந்த விவகாரம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படும். அவ்வாறு நடைபெறுமானால் அவசியமான சட்டத்திருத்தங்களை செய்வதற்காக (2024 நவம்பரில் நடத்தப்படவேண்டியிருக்கும்) ஜனாதிபதி தேர்தல் ஒத்திவைக்கப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது என்று ஊகிக்கப்படுவதாக மூத்த பாராளுமன்ற உறுப்பினர்களை மேற்கோள் காட்டி பத்திரிகைகள் கடந்த வாரம் செய்திகளை வெளியிட்டன.

கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடியின் விளைவான மக்கள் கிளர்ச்சியின் பின்னரான அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடையக் கூடியதாக எந்தவொரு கட்சியின் வேட்பாளரும் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறப்போவதில்லை என்ற நம்பிக்கையும் அரசாங்கத்தின் புதிய முயற்சிக்கு ஒரு காரணம் என்றும் அந்த செய்திகள் கூறின.

ஆனால், எதிரணி கட்சிகள் மாத்திரமல்ல, ஆளும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் கூட அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பது சாத்தியமில்லை என்றே தெரிகிறது.

இது விடயத்தில் ஒரு விசித்திரமான அம்சத்தை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அதாவது அரசாங்கத்தின் முயற்சியை எதிர்ப்பதற்கு ஆளும் பொதுஜன பெரமுனவும் பிரதான எதிர்க்கட்சி



யான ஐக்கிய மக்கள் சக்தியும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)வும் கூட ஒரேவிதமான காரணத்தை கூறுவதாக அறியமுடிகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை நீடிக்கவேண்டும் என்ற ஆணையுடன் தற்போதைய அரசாங்கம் தெரிவுசெய்யப்பட்டதன் காரணத்தால் குறைந்த பட்சம் 2025 பாராளுமன்ற தேர்தல் வரையாவது அந்த ஆட்சிமுறை தொடரவேண்டும். அதை ஒழிப்பதானால் அந்த பாராளுமன்ற தேர்தலில் தெரிவு செய்யப்படக்கூடிய புதிய அரசாங்கத்தின் கீழேயே செய்யவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் உயர்மட்ட வட்டாரங்கள் கூறுவதாக தகவல்.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு வாக்களிக்கு முகமாக முதலில் 2025 பாராளுமன்ற தேர்தலில் புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்துகின்ற அதேவேளை அடுத்த அரசாங்கம் மக்களின் புதிய ஆணையுடன் பதவிக்கு வரும் என்பதால் அதுவரைக்கும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது குறித்து தீர்மானிக்க முடியாது. அதற்கு முன்னதாக முன்னெடுக்கப் படக்கூடிய எந்த முயற்சியும் வெற்றியளிக்காது என்று ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கூறுகிறது.

இந்த கட்சிகளின் நிலைப்பாடுகள் தொடர்பில் வெளிவருகின்ற தகவல்களை அடிப்படையில் நோக்கும்போது அவற்றுக்கு அரசாங்கத்தின் உத்தேச முயற்சிகளின் நோக்கம் சாத்தியமானவரை தேர்தல்களை ஒத்திவைப்பதே என்ற வலுவான சந்தேகம் இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும். அதனால் அவை அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பை வழங்கப்போவதில்லை என்பது நிச்சயம்.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு பற்றி எந்த அக்கறையும் இல்லாமல் இருந்து வரும் அரசாங்கம் திடீரென்று அதைப் பற்றி சிந்திக்கத் தொடங்கியிருப்பது தான் மிகப் பெரிய ஆச்சரியம்.

தேர்தல்களுக்கு முகங்கொடுப்பதை தவிர்ப்பதற்காக, கடந்த நான்கு தசாப்தங்களாக சாத்தியப்படாமல் இருந்துவரும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து யோசனையை மீண்டும் அரசாங்கம் முன்வைக்கும் விசித்திரத்தை காண்கிறோம்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக தேர்தல்களில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கி அதிகாரத்துக்கு வந்த எந்த ஜனாதிபதியும் அதை நிறைவேற்றவில்லை. தற்போதைய அரசியலமைப்பை மாற்றுவதற்கு மிகுந்த அக்கறையுடன் முன்னெடுக்கப்பட்ட ஒரு முயற்சி என்றால், அது 2000 ஆம் ஆண்டில் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த புதிய அரசியலமைப்பு வரைவாகவே இருக்கமுடியும்.

திருமதி குமாரதுங்க தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முடிவில் மீண்டும் பிரதமராக பாராளுமன்றத்துக்கு வரும் திட்டத்தை மனதிற்கொண்டே அந்த வரைவை சமர்ப்பித்ததாக குற்றஞ்சாட்டிய அன்றைய எதிரணி குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சி அவரது முயற்சியை சீர்குலைத்தது.

எதிர்க்கட்சி தலைவராக விக்கிரமசிங்க அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க அவரது கட்சியின் உறுப்பினர்கள் சபைக்குள் வரைவின் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தி அட்டகாசம் செய்தததை நாம் எல்லோரும் கண்டோம்.

அதற்கு பிறகு ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பில் அக்கறையுடனான முயற்சி எதுவும் முன்னெடுக்கப்பட்டதாக இல்லை. இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து பேசப்படவேயில்லை.

தற்போதைய அரசாங்கம் பாராளுமன்றத்தில் அதன் பெரும்பான்மையை தக்கவைத்துக் கொள்வதற்கு பெரும் கஷ்டப்படுகிறது. முக்கியமான ஒவ்வொரு சட்டமூலமும் அல்லது தீர்மானமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டவுடன் வாக்குகளின் எண்ணிக்கையை காட்டி அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையை விடவும் மேலதிகமாக கொண்டிருக்கும் ஒவ்வொரு வாக்கு குறித்தும் பெருமைப்பட்டுக் கொள்கிறது.

இத்தகைய பின்புலத்தில், அதுவும் ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர்பில் பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டை நன்கு தெரிந்துகொண்ட நிலையில் அதை ஒழிப்பதற்கான யோசனை முன்வைக்கப்படுகிறது என்றால் அதன் பின்னணியில் ஒரு அந்தரங்கத் திட்டம் இருக்கிறது என்று எவரும் சந்தேகப்படவே செய்வர்.

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தைப் பொறுத்தவரையிலும் கூட அதை நடைமுறைப்படுத்தும் தனது யோசனைக்கு ஆதரவு கிடைக்காது என்பதை நன்கு தெரிந்துகொண்டுதான் ஜனாதிபதி விக்கிரமசிங்க அது தொடர்பில் தீர்மானிக்கும் பொறுப்பை தற்போதைய பாராளுமன்றத்திடம் ஒப்படைத்து விட்டு தனது பொறுப்பைக் கைகழுவி விட்டார்.

தற்போதைய பாராளுமன்றத்தைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஹமாஸ் ஊடான ரணிலின் தனிப்பார்வை

# தமிழர் விவகாரத்தில் மாறுபடும் முரண்!

**பனங்காட்டான்**



கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக உலகையும் ஊடகங்களையும் ஆக்கிரமித்து வந்த ரஷ்ய - உக்ரேனிய போர் இப்போது இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரமாக இஸ்ரேல் - ஹமாஸ் போராளிகளின் தாக்குதலும் ஹாசா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலும் 'கரண்ட் செய்திகள்'.

மனந்திறந்து சொல்வதானால் இந்த நிகழ்வுகளை செய்திகள் என்று வெறுமனே சொல்வது நன்றன்று. அப்பாவி மக்கள் படுகொலைகள் முள்ளிவாய்க்கால் களத்தை நினைவூட்டுகின்றன.

ரஷ்ய - உக்ரேன் போர், தாய்வானைச் சுற்றிவளைக்கும் சீனக் கப்பல்கள், கனடிய - இந்திய ராஜீக முறுகல் என்று எந்தப் பக்கம் திரும்பினாலும் மனித அவலத்தைக் குறி வைக்கும் நிகழ்வுகளே இடம்பெறுகின்றன.

தங்கள் நிலத்தைக் காப்பாற்ற எத்தனிக்கும் ஹமாஸ் தீவிரவாதிகள்தான் முதலில் தாக்குதலை ஆரம்பித்தனர். அதற்குப் பதிலடியாக ஹாசாவையே நாசமாக்கும் தாக்குதலை இஸ்ரேல் மேற்கொண்டு வருகிறது. 24 மணி நேரத்துக்குள் ஹாசாவின் வடபுல மக்களை - 1.1 மில்லியன் பேரை அவ்விடத்திலிருந்து வெளியேற வேண்டுமென்ற அறிவித்தலை இஸ்ரேல் அதிகாரபூர்வமாக வெளியிட்டது.

இதனை வாசிக்கும் வேளையில் இதன் அடுத்த கட்டத்துக்கு அனைத்தும் நகர்ந்திருக்கலாம். எத்தனை பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளார்கள், அடுத்தடுத்து இரு தரப்பிலும் எத்தனை பேர் கொல்லப்பட போகிறார்கள் என்பதை எவராலும் சொல்ல முடியாது. மற்றைய நாடுகள் இங்கு சிக்கியுள்ள தங்கள் நாட்டு மக்களை பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்து கின்றன. ஆனால், ஏதுமறியாத போரிட மக்களைக் காப்பாற்ற ஆத்மசுத்தியாக ஏதும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை மட்டும் அப்பாவி மக்களின் உயிருக்காக குரல் கொடுக்கிறது. சிக்குப்பட்டுள்ள மக்களை வெளியேற ஒரு வாசலைத் திறந்து விடுமாறு மன்றாடுகிறது. ஆனால் அதுவும் செவிடன் காதில் சங்கு போலவே காணப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் மனித அவலக் காலத்தில் பல சர்வதேச ஊடகங்கள் வல்லாதிக்க மேலாண்மை சார்புச் செய்திகளை எடுத்துச் சென்றன என்பது பலருக்கும் தெரியும். இப்போது இஸ்ரேல் - ஹமாஸ் நெருக்கடி காலத்திலும் அதே கோலந்தான். மெத்தப்பெரிய - அரசியல் செல்வாக்கான - முதலாளித்துவ நாடுகள் ஒருபக்கம் சாய்ந்துவிட்டன. அடிபாட்டுக்குள் சிக்கும் மக்களுக்கான குரல்கள் ஓரங்கட்டப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தளவில் இரண்டு குரல்களை இதனை எழுதும் வரை கேட்க முடிந்தது. இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட அரசியல் தரப்பிலிருந்து வந்துள்ளன. எனினும் இரண்டிலும் ஒருவகை ஒற்றுமையைக் காணமுடிகிறது. ஆனால், அதற்கான காரணம் வேறு.

முன்னர் ரெலோ இயக்கத்தில் முக்கியஸ்தராகவிருந்த, தற்போதைய தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா ஓர் அறிக்கை மூலம் உண்மை நிலையை வெளிப்படுத்தியுள்ளார். இஸ்ரேலிலும் ஹாசாவிலும் (பாலஸ்தீனியர்) பொது மக்கள் உயிரிழப்பும், பாதிப்புகளும் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டியுள்ள இவர், இதன் பின்னணியை அரச பயங்கரவாதத்துக்கும் விடுதலை இயக்கத்தின் பயங்கரவாதத்துக்குமான போர் என்று வகைப்படுத்தியுள்ளார்.

அதேசமயம், ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலுக்குள் ஊடுருவி தாக்குதலை நடத்தியதை சாட்டாக வைத்து ஹமாஸின் கட்டுப்பாட்டிலுள்ள ஹாஸா பிரதேசத்தை அடித்து தரைமட்டமாக்குவதற்கான காரணம், இப்பிரதேசத்தை இரண்டு துண்டுகளாக்கி அதில் ஒன்றை ஒட்டுமொத்தமாக விழுங்கிவிடும் இலக்கு என்று பட்டவர்த்தனமாக படம் பிடித்துக் காட்டியுள்ளார் சிறீகாந்தா.

1993ல் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் மத்தியஸ்தத்தில் இஸ்ரேலியத் தலைவர் யிற்சக் ரபினும் பாலஸ்தீனத் தலைவர் ஜசீர் அரபாத்தும் செய்த ஒப்பந்தம் செயலிழந்துபோனதால் உருவான சூழ்நிலையின் உச்சமாக தற்போதைய மோதல் இருப்பதையும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மறுதரப்பில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச பிரதிநிதிகள் கலந்து கொண்ட நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் தமது கருத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார். இந்த உரையில் இஸ்ரேலில் செல்வாக்கு செலுத்தி வரும் வல்லாதிக்க நாட்டினை நோக்கிய ரணிலின் பார்வை என்ன என்பதையும் அறிய முடிகிறது. இந்த உரையின் முக்கிய பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது:

"வளர்ந்து வரும் புதிய உலகின் போக்கு என்னவென்று நான் ஓய்வாக இருந்தபோது சில கருத்துகளை எழுதினேன். நேற்று அதனை கிழித்து விட்டேன். நேற்றைய எனது கருத்துகள் இன்று தேவையற்றதாகியுள்ளது. இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு என்ன நடைபெறப் போகிறது? அரசியல் அதன் இடத்தைப் பெறுவதை நாங்கள் காணலாம். இஸ்ரேல் இப்போது இப்போருக்காக ஒற்றுமை அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ளது. ஹமாஸை அழிப்பது ஒரு விடயம். அதற்கு எதிராக ராணுவ நடவடிக்கை எடுக்கலாம். அதற்கான எதிர்வினை என்ன? ஹாசாவை அழித்தால் 24 மணி நேரத்தில் முழு நிலைமையும் மாறும். இங்கிருந்து இந்தோனேசியாவுக்கும் பிற இடங்களுக்கும் சென்றால் அரசாங்கங்கள் கட்டுப்பாட்டை இழக்கும்" என்று கூறிய ரணில் மேலும் பின்வருமாறு சொன்னார்:

> **இஸ்ரேல் - ஹமாஸ் பிரச்சனை விடயத்தில் உள்நாட்டில் எப்படிக் கையாள்கிறார்கள்? ஹமாஸூடன் பேசுவது இலகுவாக இருக்குமல்லவா என்று உலக வல்லாதிக்கத்துக்கு அறிவுரை கூறும் ரணில் விக்கிரமசிங்க, தனது நாட்டின் இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் எந்த அளவுகோலை பயன்படுத்துகிறார்? ஜனாதிபதியாகி ஒரு வருடம் முடிந்தும் வழங்கிய உறுதிமொழிகளில் எதனையாவது நிறைவேற்றினாரா?**

"ஒருபுறம் இஸ்ரேலிலுள்ள ஒற்றுமை அரசாங்கம் (கூட்டரசாங்கம்) பதிலடி கொடுக்க விரும்புகிறது. இவர்கள் ஹாஸாவுக்குள் சென்றால் முழு மத்திய கிழக்கும் தீப்பற்றி எரியும். இது நம் அனைவரையும் பாதிக்கும். ஒரு பக்கம் துருக்கி, மறுபக்கம் பிலிப்பைன்ஸ் என்று இது மத்திய ஆசியாவைப் பாதிக்கும். அடுத்த சில நாட்களில் என்ன நடைபெறும் என்பது தீர்மானிக்கப்படும். அதிபர் பைடனின் சப்பாத்துக்குள் நான் இருக்க விரும்பவில்லை. இந்தப் பிரச்சனையை அவர் எப்படிக் கையாள்கிறார்? இரு தரப்பிலும் கூட்டணிக் கட்சிகள் இருப்பது மோசமானது. யூதர்களின் வாக்கு வங்கியையும், காங்கிரஸிடம் பேசுவதிலுள்ள சிரமத்தையும் நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. காங்கிரஸ் தலைமையுடன் பேசுவதைவிட ஹமாஸூடன் பேசுவது அவருக்கு எளிதாக இருக்கலாம். அது எவ்வளவு மென்மையானது. அவரது முடிவுகளைப் பொறுத்தே என்ன நடைபெறும் என்பது தீர்மானிக்கப்படும். எல்லாமே நாளை மாறக்கூடும். இப்பொழுது பின்வாசல் ராஜதந்திர முறையாக சில விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் மூலம் தீர்வு காண முடியாவிடின் உலகின் புதிய போக்கு என்ன என்பதை மீண்டும் முடிவு செய்ய வேண்டி வரும்" என்ற இந்த உரையை சாதாரணமான ஒன்றாக பார்க்க முடியாது. நிதானமான யதார்த்தமான தலைமைத்துவ பண்புள்ள பார்வையின் வெளிப்பாடு.

அதிபர் பைடனின் சப்பாத்துக்குள் இருக்க தான் விரும்பவில்லை என்ற சொல்லாடலின் ஊடாக தமது நிலைப்பாட்டை ரணில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதே இங்கு முக்கியமானது.

இஸ்ரேல் - ஹமாஸ் பிரச்சனையில் தமது கருத்தை அம்மணமாகக் கூறும் துணிச்சல் அல்லது அசாதாரண நேர்மை கொண்ட ரணில் விக்கிரமசிங்க தமிழர் பிரச்சனைத் தீர்வை ஏன் வேறு விதமாகக் கையாளுகிறார்?

2002இல் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பித்த போது பின்கதவால் அதனை முறியடிக்கவென புலிகள் அமைப்புக்குள் பிளவை ஏற்படுத்தி கருணாவை தம்பக்கம் கொண்டு போனார்.

தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொள்ளும் இனப்பிரச்சனைக்கான தீர்வை கடந்த பெப்ரவரி 4ம் திகதிக்கு (சிங்கள தேச சுதந்திர நாள்) முன்னர் அறிவிக்கப் போவதாக உறுதியளித்தார். நடைபெற்றதா? லண்டனில் புலம் பெயர்ந்த தமிழர் தரப்புடன் நடத்திய உரையாடலில் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு அவர்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வு வழங்கப்படுமென்று நம்பிக்கை ஊட்டினார். நடைபெற்றதா?

ஒவ்வொருவரினதும் மத வழிபாட்டு உரிமைக்கு போதிய பாதுகாப்பு இருக்குமென்று சொல்லி வந்தார். குருந்தூர் மலை விவகாரத்தில் நீதியாகத் தீர்ப்பளித்த நீதிபதிக்கு என்ன நிகழ்ந்தது? நீதிபதி எதற்காக நாட்டைவிட்டு ஓடிப் போனார்? 13ம் திருத்தம் அரசியலமைப்பின் ஒரு பகுதி. அது முழுமையாக நிறைவேற்றப்படும் என்றவர் பின்னர், காவற்துறை அதிகாரம் கிடையாது என்று சொன்னார். 13ம் திருத்தம் என்னாயிற்று?

போர்க்குற்ற விசாரணைக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை கேட்ட ஜெனிவா தீர்மானத்துக்கு நல்லாட்சி அரசில் பிரதமராக இருந்தபோது இணைஅனுசரணை வழங்கினார். ஜனாதிபதியான பின்னர் ஏன் அதனை நிராகரித்தார்? இறுதியாக கடந்த ஆகஸ்ட் மாதம் அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இலங்கையின் நிறைவேற்றுத்துறையும் சட்டத்துறையும் சம்பந்தப்பட்டதால் அதனை நிறைவேற்றியே தீருவேன் என்றார். செய்தாரா?

பாலஸ்தீன மக்களின் உரிமைக்குரலுக்காக சர்வதேச அரங்கில் நியாயம் கூறுபவர், தனது நாட்டில் பலஸ்தீன மக்கள் போன்று உரிமைகள் மறுக்கப்பட்ட தமிழின மக்கள் விடயத்தில் மாறுபாடாக நடந்து கொள்வது ஏன்? எதற்காக இரு நிலைப்பட்ட முரண்பாடு? ஊருக்கு உபதேசம், உனக்கல்ல என்ற சீத்துவக்கேடா?

# சமூக வாழ்வலகுச் சுட்டிகள் பற்றிய கருதுகோளும் தமிழின விடிவிற்கான புதிய அணுகுமுறைகளும்.

● மருத்துவர் சிவநாதன் யமுனாநந்தா

**ஈழத் தமிழினத்திற்குறிய சமூக வாழ்வலகுச் சுட்டிகள் மேன்மையுறும் பட்சத்திலேயே தமிழினவிடியல் வெளிச்சமாகும்.**

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் உலகமயமாதல் வேகமாக மாறிவருகிறது. இதனால் நாடுகளுக்கு இடையே முரண்பாடுகளும் இனங்களுக்கு இடையே முரண்பாடுகளும் விசவட்டமாக அதிகரித்து செல்கின்றது.

மனிதகுலத்திற்கு உரித்தான அமைதிக்கு குந்தகமாக பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இனப்படுகொலைகள், இயற்கை வளங்களை சூறையாடுதல், சூழல் மாசடைதல் என்பன அவற்றுள் சில. இவற்றினை எதிர்கொள்ள சமூக வாழ்வலகு சுட்டிக் கருதுகோள்களை சமூகவியலாளர் கையாள வேண்டிய அவசியம் உள்ளது.

சமூக வாழ்வலகுச் சுட்டிக் கருதுகோளினை உலக நாடுகளுக்கு இடையேயும் இனங்களுக்கு இடையேயும் நாடு கடந்த இனங்களுக்கு இடையேயும் பிரயோகிக்கலாம்.

முதனிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளாக பின்வரும் பன்னிரு சமூக வாழ்வியல் காரணிகளை வகைப்படுத்தலாம்.

அவையாவன,

உணவு, உறைவிடம், நீர், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, தொடர்பாடல், மருத்துவம், நீதி, மதவழிபாடு, பொழுதுபோக்கு, தொழில்.

அண்மைய காலங்களில் சமூக வாழ்வலகுச் சுட்டிகளில் பாதகமான மாற்றங்களை வட பகுதியில் மருத்துவத்திலும் நீதியிலும் ஏற்பட்டமையினை நாம் கண்ணுற்றோம். தொழில் புரிதலில் சமூக வாழ்வலகுச் சுட்டியின் பாதகமான நிலையினால் பலர் வெளிநாடுகளுக்கு புலம் பெயரும் நிலையில் உள்ளனர். தொடர்பாடல் தொடர்பான பாதகமான சமூக வாழ்வலகுக் கணியங்கள் மிகவும் வேகமாக சமூக இயக்கத்தினை பாதிக்கின்றன.

இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளாக பின்வரும் மூன்று கணியங்கள் காணப்படுகின்றன. அவையாவன,

உற்பத்தி, வர்த்தகம், நுகர்வு.

ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் சமூக வாழ்வலகு மேனிலையில் இருப்பதற்கு இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுக் கணியங்கள் சிறப்பு நிலையில் இருத்தல் அவசியம் இதில் முதலாவதாக உற்பத்தி அமைகிறது. விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், தொழில்நுட்ப உள்ளீடு, மனிதவள உள்ளீடு என்பன சிறப்பாக அமைய வேண்டும். அடுத்து உற்பத்திக்கான வர்த்தகம் பாதகமற்றதாக அமைய வேண்டும். இறுதியாக மக்களின் நுகர்வு அவர்களின் உற்பத்தி திறனுக்கும் வர்த்தகத்திற்கும் இடையில் சமச்சீராக அமைத்தல் வேண்டும். இவை பாதிக்கப்படின் சமூக வாழ்வலகுச் சுட்டி இரு திசைகளிலும் கீழ்நிலையடையும்.

மூன்றாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியாக நிர்வாகம் அமைகிறது. சமூக வாழ்வலகுச் சுட்டிகலின் முதல் இரு நிலைகளிலும் ஏற்படும் பாதிப்புக்கள் மூன்றாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியில் பாதிப்பினை ஏற்படுத்தும். இதனால் நிர்வாகம் சர்வாதிகாரமானதாகவும் வெளிப்படை தன்மை இல்லாததாகவும் அமையும்.

அதாவது முதனிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளில் உருவாகும் முரண்பாடுகள் இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளில் செல்வாக்கு செலுத்தும். இவ்வாறே மூன்றாம் நிலை வாழ்வலகுச் சுட்டியில் செல்வாக்கு செலுத்தி நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளிலும் செல்வாக்கினை செலுத்தும்.

நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளாக பின்வரும் கணியங்கள் அமைகின்றன அவையாவன அரசியல், இராணுவம், இராஜதந்திரம்.

இலட்சிய நாடுகளில் சமூக வாழ்வலகுச் சுட்டிகள் 100% இல் காணப்படும் உலக வல்லரசுகளிடையே இவை 75% ஆகக் காணப்படும். இன முரண்பாடுகள் உள்ள நாடுகள் யுத்தமுனைப்பை உடைய நாடுகளில் சமூக வாழ்வலகுச் சுட்டிகள் அனைத்து நிலைகளிலும் தாழ்நிலையிலேயே காணப்படும்.

நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகள் மூன்றாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியிலும் அஃதே இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியிலும் முதலாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளிலும் செல்வாக்கு செலுத்தும்.

ஈழத் தமிழர்களை பொறுத்தவரை நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகள் பூஜ்ஜிய மட்டத்திற்கும் 10% இற்கும் இடையிலேயே காணப்படுகின்றன. ஈழத் தமிழினத்திற்குறிய சமூக வாழ்வலகுச் சுட்டிகள் மேன்மையுறும் பட்சத்திலேயே தமிழினவிடியல் வெளிச்சமாகும். இவ்வாறே உலகில் உள்ள அனைத்துச் சிறுபான்மைச் சமூகத்தின் மேன்பாடும் அமையும். அதாவது ஒவ்வொரு இனமும் தனது சமூக இருப்பினைத் தக்கவைக்கவும் உலகமயமாதலினுள் சிதறுண்டு போகாதிருப்பதற்கு அவ்வவ்வற்றிக்குரிய சமூக வாழ்வலகுச் சுட்டிகள் உன்னத நிலையில் வைத்திருத்தல் மிகவும் அவசியமானதாகும். ●

# தற்கொலை விமர்சனங்கள் கூடாது!

மதிவதனி

பகுத்தறிவு உள்ள மனிதனின் தனித்துவ அடையாளம் சிந்திக்கத் தெரிந்தவன் அதாவது, தனது அறிவையும், ஆற்றலையும் நுண்ணறிவின் வினைத்திறனுக்கு பயன்படுத்தும் ஆற்றல் உள்ளவன் என்பது சிறப்புத் தகுதி.

பிறந்தவுடன் கண் இமைப்பொழுதில் வினைத்திறன் நடந்திடாது. குடும்ப வாழ்வியல் முறை, சமூகச் சூழல், கல்வி, அனுபவச்சூழல் இவை யாவும் நுண்ணறிவை விரிவுபடுத்துவதற்கு மூலமாகிறது. ஆனாலும், குழந்தை யாருடைய மகனாகவோ அல்லது மகளாகவோ பிறந்து வளர்ந்தாலும் அதற்கென்ற "சிறப்புத் தகுதிகள் இயல்பான" ஒன்றாக இருக்கும்.

அந்தத் தகுதிகளை காலப்போக்கில் நல்லது, கெட்டது எனத் தரம் பிரித்துக் கொள்கிறோம். கெட்டதைக் கண்காணித்து சரி செய்வதே முதன்மையான பெற்றோர் வளர்ப்பு முறையாக நாம் கருதுகிறோம்.

தவறுக்கான மூல காரணத்தை வீட்டின் உள்ளேயும், புறத்தேயும் தேடி அலைகிறோம். ஆனால், நமது குழந்தைகளுக்குள் தேடத் தவறி விடுகிறோம்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் பிள்ளைகளுக்குள் தேடி அதற்கான காரணத்தைக் கண்டு அந்த நோய்க்கான சிகிச்சையை நோக்கி நகர்கின்றனர். அந்த அளவு அறிவியல் வளர்ச்சியில் நாம் இல்லையா? உளரீதியாக, மூளை ரீதியாக ஏற்படும் நோய்களை நாம் ஏன் ஏற்க பயப்படுகிறோம், வெளிப்பரப்பில் பேசப் பயப்படுகிறோம், ரகசியம் காக்கிறோம்?

உதவாத காரணங்களைச் சொல்லி சரியாகி விடும் என்று நம்புகிறோம். இதனால், நோயாளி குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்குப் பதிலாக நாளும் தண்டனை அளிக்கிறோம். அதற்கு நாம் சொல்லும் காரணம், பிள்ளை மீதான்அக்கறையும் பாசமும்.

இந்த அக்கறையின் விளைவு, திட்டுதல், அடித்தல், குற்றம் சுமத்தல்கள், ஒப்பீட்டு வசைகள், எதிர்காலப் பய முறுத்தல்கள், குடும்ப கௌரவ அலம்பல்கள், சொந்த அனுபவப் பிதற்றல்கள், கல்வி வளாகத்தின் மீது பழி, சமூகத்தின் மீது பழி, தொழில்நுட்பத்தின் மீது பழி, யார் காரணம் என்ற விதண்டாவாதங்கள் - இப்படி எத்தனையோ சொல்லிக் கொள்ளலாம்.

குழந்தைகளின் இயல்பு ஒன்று இருக்கிறது. அதனை மறந்தே தீர்வை நோக்கி நம் செயல்பாடு உள்ளது. இயல்புக்கு ஏற்பவே விளைவுகள் வெளிப்படும். அதனை உணராத நிலையில் சரி செய்தல் இயலாது.

பிள்ளைகளின் தனித்துவ இயல்பைக் கண்காணிப்பது பெற்றோர் கடமையாகிறது. அதிர்ச்சியான குணாதிசயங்களை அறியலாம். அதற்காக ஆராவாரம் செய்யாது அவர்கள் வழியில் சென்று சரிசெய்ய முயற்சிக்கலாம். அதற்குப் பொறுமை மிக அவசியம். அதைவிட காலம் மிக அவசியம். கண் மூடித் திறப்பதற்குள் மேஜிக் நடக்க நம் பிள்ளைகள் ஒன்றும் ரோபோக்கள் அல்ல.

அதைவிட அவசியம் சுற்றமும், உற்றமும் சமூகத்தின் விமர்சனங்களையும் கடக்கும் திறன். அதற்கு பெற்றோருக்கு உளத்திடம் வேண்டும். இவை இல்லாது போனால் பிள்ளைகள் மீது நாளும் தாக்குதல் நடத்தும் சைக்கோகளாக மாறிவிடுவோம்.

> **ஓர் உயிர் தன்னைத்தானே அழிப்பது கண் நொடிப் பொழுதில் அல்ல. ஏனெனில், சிந்தித்து, சிந்தித்து மூளை நரம்புகள் சோர்ந்து மனம் வலுவிழந்து, உடல் மனதின் வலு இல்லாது சோர்கின்றபோதுதான், அந்த உடலை உயிரால் அழிக்க முடிகிறது.**

"எந்தப் பிள்ளையும் நல்ல பிள்ளைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவர் ஆவதும் கெட்டவராவதும் அன்னை வளர்ப்பதிலே..." என்கிற பாடல் வரிகள் இந்தக் காலத்துக்குப் பொருந்தாது.

தேடல் உள்ள பிள்ளைகள் தனியே கல்வியோடு நிற்க விரும்புவதில்லை. தன்னைத் தேடுகிறான்: தன் பெற்றோரை ஆராய்கிறான் சமூகத்தை உற்று நோக்குகிறான் உலகத்தை அளவெடுக்கிறான் முடிவில் தான் யாரெனத் தன் இயல்புக்கு ஏற்ப தன்னைத்தானே அடையாளப்படுத்துகிறான்.

இந்த இடத்தில்தான் முரண்பாடு தொடங்குகிறது. குறிப்பிட்ட சதவீதப் பிள்ளைகளே இந்தத் தகுதி உடையவர்களாக இருப்பதால் அவர்கள் மீது அழுத்தங்கள் அதிகமாக உள்ளது. சாதனைப் பிள்ளைகளாக இருந்தால் கொண்டாடும் நாம், அசாதாரணப் பிள்ளைகளைக் கொண்டாடுவதில்லை. அவர்கள் விமர்சனக் குழந்தைகளாக நமக்குத் தெரிகிறார்கள்.

இதனால் வன்முறையாளர்களாக பெற்றோர், சமூகம் மாறிவிடுவதால் எதிர்க்கத் திறன் அற்ற பிள்ளைகள் உளவியல் நோயாளிகளாகித் தம்மைத் தாமே அழித்து விடுதலை தேடுகின்றனர். இன்னும் வெகுசிலர் உளத் திடத்தோடு போராடித் தன் வாழ்வை வாழத் தொடங்குகின்றனர்.

இவையெல்லாம் தவறு என்று இருந்தவை காலப்போக்கில் நாகரிகத்தின் அடையாளச் சின்னமாக, பண்பட்ட மனிதனின் அடையாளமாக, விடுதலையின் மூலமாக, சட்டத்தின் சாசனமாக, அறிவியலின் விந்தையாக, இனத்தின் அடையாளமாக, வரலாற்றின் பதிவாக மாறியுள்ளது.

ஓர் உயிர் தன்னைத்தானே அழிப்பது கண் நொடிப் பொழுதில் அல்ல. ஏனெனில், சிந்தித்து, சிந்தித்து மூளை நரம்புகள் சோர்ந்து மனம் வலுவிழந்து, உடல் மனதின் வலு இல்லாது சோர்கின்றபோதுதான், அந்த உடலை உயிரால் அழிக்க முடிகிறது. அதனால், தற்கொலை செய்து கொண்டவர்களை ஆராய்ந்து, அவரவர் சிந்தனைக்கு ஏற்ப விமர்சனங்கள் செய்து அவர்களைச் சார்ந்த உயிர்களை வதைக்காதீர்கள்.

தற்கொலைக்கான காரணம் அடுத்த கட்ட நகர்வுக்கான சிந்தனையாக இருக்கலாம். அதைக் கடந்து தவறைச் சுட்டிக் காட்டி ஆய்வு செய்வதற்கான அரங்கமல்ல் ஏனெனில், இயல்புகளை உணராது வாழ்வியல் கோட்பாடுகளை நிர்ணயிக்கும் ஒருவருக்கு சரியும், பிழையும் சரியாகவும் பிழையாகவுமே தெரியும்.

சரியும், பிழையும், அவரவர் இயல்பு அல்லது சூழலில் முடிவாகிறது. ●

# அரச தொழில் முயற்சிகளின் வினைத்திறனின்மைக்கான ஒரேதீர்வு அவற்றைத் தனியார் மயப்படுத்துவது மட்டுந்தானா?

கந்தையா அருந்தவபாலன்

இலங்கை அரசுக்குச் சொந்தமான பெரும்பாலான தொழில் முயற்சிகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதன் காரணமாக ஆண்டு தோறும் பெருமளவு நிதியினை இத்தொழில் முயற்சி நிறுவனங்களுக்கு அரசாங்கம் மானியமாக வழங்க வேண்டியுள்ளது. அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்டத்தில் அதிகளவு பற்றாக்குறை ஏற்படுவதற்கான பிரதான காரணியாக இதுஅமைந்துள் ளது. இது அரசின் கடன்சுமையை மேலும் கூட்டுவதனுடன் நாட்டில் பண வீக்கத்தையும்தூண்டுகிறது. அத்துடன் கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசிய துறைகளுக்கான செலவுகளையும் குறைக்கவேண்டிய நிலைக்கு அரசாங் கத்தை தள்ளுகிறது. இது தொடர்பாக பொருளாதார வல்லுநர்களும் சர்வதேச நிதி நிறுவனங்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டி, அத்தகைய தொழில் முயற்சிகளை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவதற்கான பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய போதிலும் ஆட்சியாளர்கள் தமது அரசியல் நலன்களுக்காக அவ்வாலோசனகள் மீதுஅதிகளவில் கரிசனை காட்டவில்லை. ஆனால் நாடு கையறுநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இன்றைய நிலையில் அதிலிருந்து மீளவும், சர்வதேச நாணயத்தின் கடனைத் தொடர்ந்து பெறவும் அரச தொழில்முயற்சிகளை மறுசீரமைக்க வேண்டிய நிலைக்கு தவிர்க்க முடியாத வகையில் ஆட்சியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அரச தொழில் முயற்சி நிறுவனங்கள் அவற்றின் வினைத்திறன் இன்மையினாலேயே தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகின்றன. வினைத்திறன் இன்மையைத் தோற்றுவிப்பதில் பலகாரணிகள் செல்வாக்குச் செலுத்துகிறபோதும் அதற்கான ஒரே தீர்வாக அந்நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும் உத்தி இலங்கை உட்பட விருத்தியடையும் பல நாடுகளால் கையாளப்பட்டு வருகிறது. இதனையே முதலாளித்துவ நாடுகளின் செல்வாக்கின் கீழ் இயங்கிவரும் சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக நிதி நிறுவனங்களும் இந்நாடுகளுக்கு வலியுறுத்தி வருகின்றன. இதனடிப்படையில் இலங்கையின் பல அரச முயற்சிகள் 'மறுசீரமைத்தல்' என்ற பெயரில் தனியார் மயமாக்கும் செயல்முறைவேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக நிதி திட்டமிடல் அமைச்சில் புதிய பிரிவொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பல்வேறு வகைப்பட்ட 527 அரச முயற்சிகள் உள்ளன. இவற்றுள் மூலோபாய ரீதியில் முக்கியம் வாய்ந்த வர்த்தக முயற்சிகள் 55 உள்ளன. இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சிறிலங்கா வானூர்தி நிறுவனம் போன்றன இந்த வகையுள் அடங்கும். இவைதவிர ஏனைய வர்த்தக முயற்சிகள் 287 உம், வர்த்தக நோக்கற்ற முயற்சிகள் 185 உம் உள்ளன. மூலோபாய முக்கியம் வாய்ந்த 55 முயற்சிகளில் 13 முயற்சிகள் பாரிய நட்டத்தை அடையும் நிறுவனங்களாகும். இவை 2022 ஆண்டின் முதல் காற்பகுதியில் மட்டும் 1029 பில்லியன் ரூபாக்கள் நட்டத்தைப் பதிவுசெய்துள்ளன. இவற்றுள் முக்கிய மூன்று நிறுவனங்களான பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரசபை, சிறிலங்கா வானூர்தி மட்டும் 860 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளன. 2022 ஆம் ஆண்டின்முடிவில் இந்நிறுவனங்கள் மொத்தமாக 4000 பில்லியன் ரூபாக்கள் நட்டமடைந்துள்ளன. இந்நட்டத்தில் 50 வீதம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தாலும் இலங்கை வானூர்தி நிறுவனத்தாலும் இழக்கப்பட்டனவாகும்.

அரச முயற்சிகள் இவ்வாறு தொடர்ந்து நட்டமடைவதற்கான காரணம் அவற்றின் வினைத்திறனின்மை எனச் சுட்டிக்காட்டப் படுகிறது. நிறுவனமொன்றின் வினைத்திறன் என்பது அதன் உள்ளீடுகளுடனும் வெளியீடுகளுடனும் தொடர்புபட்டது. அதாவது மிகக் குறைந்த உள்ளீட்டில் அல்லது உற்பத்திச் செலவில் மிக உயர்ந்தளவு வெளியீட்டைப் பெறும் முறையாகும். இலங்கையில் அரச முயற்சிகளின் உற்பத்தித் திறனானது அதையொத்த தனியார் துறை முயற்சியை விட 70 வீதம் குறைவானது என எடுத்துக் காட்டப்படுகிறது. அரச முயற்சிகளின் இந்நிலைமைக்கு பல்வேறு காரணிகள் அடிப்படையாக அமைகின்றன. அவற்றுள் அந்நிறுவனங்களில் காணப்படும் பொருத்தமற்ற முகாமைத்துவம், ஊழல் முறைகேடுகள், மேலதிக ஆளணியினர், ஒழுங்கற்ற நிர்வாகம், அரசியல் தலையீடுகள் மற்றும் தனியுரிமை போன்றன முக்கியமானவையாக காணப்படுகின்றன. இந்நிறுவனங்கள் தமது செலவுகளைக் கட்டுப் படுத்துவதற்குப் பதிலாக உற்பத்திகளின் விலைகளை நியாயமற்ற வகையில் உயர்த்துவதன் மூலம் நட்டத்தைக் குறைக்க முயன்று வருகின்றன.

இலங்கையில் ஏனைய துறைகளில் காணப்படுவது போலவே அரச தொழில் முயற்சிகளிலும் அரசியல் தலையீடுகள் அதிகளவில் இடம்பெறுகின்றன. இதுவே அந்நிறுவனங்களின் வினைத்திறனின்மைக்குப்பல வழிகளிலும் காரணமாகி விடுகிறது. இவற்றில் ஒன்று ஆளணி நியமனங்களில் இடம் பெறும் அரசியல் தலையீடுகள். இலங்கையில் நீண்டகாலமாகவே அரச கூட்டுத்தாபனங்களும் சபைகளும் தொழில்முயற்சிகள் என்று

> **ஊழல் செய்யும் ஆட்சியாளர்கள் நிறைவாகவும் நிறுவனங்களின் போட்டித்தன்மை குறைவாகவும் உள்ள இலங்கையில் இவ்வாறான தனியார் மயமாக்கல்களால் ஏற்படக்கூடிய நன்மைகளைவிடத் தீமைகளுக்கே அதிகம் வாய்ப்புள்ளது.**

நோக்கப்படுவதை விட அரச வேலை வழங்குவதற்கான கூடங்களாகவே நோக்கப்பட்டு வருகின்றன. இதனால் அந்நிறுவனங்களில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் காணப்படுகின்றனர். அதற்கு மேலாக அங்கு இடம்பெறும் ஊழியர் நியமனங்களில் கணிசமான இடங்கள் அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. பெரும்பாலான அரச முயற்சிகளின் தலையும் வாலும் அரசியல் நியமனங்களாகவே காணப்படுகின்றன. அதாவது இம்முயற்சி நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர்களும் கீழ்மட்டத் தொழிலாளர்களும் அரசியல்சார்ந்த நியமனங்களாகவே இருப்பதைக் காணலாம். இந்நியமனங்களில் தொழில்சார் தகுதிகள் புறக்கணிக்கப்படுவதனால் நிறுவனத்தின் வினைதிறன் குறைவதுடன் ஊழல் முறைகேடுகளுக்கும் முகாமைத்துவச் சீர்கேடுகளுக்கும் வாயப்பேற்படுத்தப்படுகிறது. குறிப்பாக நிறுவனத் தலைவர்களும் பணிப்பாளர்களும் துறைசார்ந்த அமைச்சரின் தெரிவாக அமைவதால் பாரிய ஊழல் மோசடிகளுக்கு வாய்ப்பாக இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக நிலக்கரிக் கொள்வனவில் நிகழ்ந்த 4 பில்லியன் ஊழலைக் குறிப்பிடலாம். மேலும் இப்பதவிகளில் அமர்த்தப்படுவோருக்கான கொடுப்பனவுகளும் சலுகைகளும் பல மடங்கு உயர்வாக இருப்பதுவும் நிறுவனங்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துவதாக அரச கணக்காய்வுக் குழுவின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அத்துடன் இந்நிறுவனங்கள் தமது செயற்பாடுகளில் நிறுவனத்தின் வரவு-செலவுக் கட்டுப்பாட்டு ஒழுங்கு முறையைக் கடைப்பிடிப்பதும் மிகக் குறைவு என்பதுவும் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்நிறுவனங்களில் ஊழியர்களது சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகள் ஏனைய அரச துறைப்பணியாளர்களை விட மிக உயர்வானது. மேலும் இந்நிறுவனங்களின் கணக்காய்வு அறிக்கைகள் உரியகாலத்தில் தயாரிக்கப்படுவதில்லை. இந்தியாவில் கூட அரச முயற்சிகளின் நிதியறிக்கைகள் ஆண்டு தோறும் பொது மக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. ஆனால் இங்கு 10.4 வீதமான அரச முயற்சி நிறுவனங்கள் மட்டுமே தமது நிதியறிக்கையை ஆண்டுதோறும் வெளியிடுகின்றன. கிட்டத்தட்ட 90 வீதமான நிறுவனங்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை இவற்றினூடாக நாம் மதிப்பிட முடியும்.

இலங்கை வானூர்தி நிறுவனம் அரசாங்கம் வளர்த்து வரும் ஒரு வெள்ளை யானை. நட்டத்தில் இயங்கும் அரச முயற்சிகளில் முதலிடத்தில் அதுவே உள்ளது. இந்நிறுவனம் 2022ஆம் ஆண்டில் 4000கோடி ரூபா நட்டமடைந்துள்ளது. அதுமட்டுமன்றி இந்நிறுவனம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை போன்ற பல நிறுவனங்களுக்கு பல கோடிரூபா கடனை செலுத்த வேண்டிய நிலையிலுள்ளது. இந்நிறுவனம் மட்டுமன்றி முக்கியமான அரசமுயற்சி நிறுவனங்கள் 2020 இல் வங்கிகளிடம்பெற்ற கடன் 920 பில்லியன் ரூபா ஆகவும் திறைசேரியிடம் பெற்றது 95 பில்லியன் ரூபா ஆகவும் இருந்துள்ளன. வானூர்தி நிறுவனத்துக்குப்பொறுப்பான அமைச்சரான நிமல் சிறிபால டி சில்வா அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது இவ்வாண்டின் இதுவரையான காலப் பகுதியில் அந்நிறுவனம் 22 பில்லியன் ரூபா இலாப மீட்டியுள்ளதாகக் கூறியுள்ளார். இது எவ்வளவு தூரம் உண்மையானது எனத் தெரியாது. இன்று மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் மீதே மக்கள் ஐயம் கொண்டுள்ள நிலையில் அரசியல்வாதிகளின் கூற்றுக்கள் எவ்வளவுக்கு உண்மையாக இருக்கும் என்ற ஐயம் மக்களிடத்தில் அதிகம் இருப்பதில் ஆச்சரியமில்லை.

இவ்வாறு அரச முயற்சிகள் நட்டத்தில் இயங்குவதன் காரணமாக அவற்றை மறுசீரமைத்தல் என்ற பெயரில் சில நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக இலங்கை வானூர்தி, சிறிலங்கா தொலைத்தொடர்பு, ஹில்டன் ஹோட்டல், இலங்கை காப்புறுதி, லிட்றோ எரிவாயு போன்றவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இவற்றுள் நட்டத்தில் இயங்காது இலாமீட்டும் நிறுவனங்களும் உள்ளடங்கியுள்ளன. எனவே அரச முயற்சிகளை தனியார் மயமாக்குவதில் அரசாங்கத்துக்கு வேறு நோக்கங்களும் உள்ளன என்பது தெளிவாகிறது. தனியார் மயமாக்குதல் என்பது அரச சொத்துக்களை தனியாருக்கு விற்பது மட்டுமன்று. வேறு வகையிலும் அது மேற்கொள்ளப்படலாம். சொத்துரிமையை வைத்துக் கொண்டு முகாமைத்துவத்தை மட்டும் தனியாரிடம் வழங்குதல், அரச முயற்சிகளின் பங்குகளில் ஒருபகுதியைத் தனியாருக்கு வழங்குதல், அரச தனியுரிமை முயற்சிகளில் தனியாரும் ஈடுபட அனுமதித்தல் போன்றவையும் தனியார் மயப்படுத்தலின் வடிவங்களே. இவ்வாறான நடவடிக்கைகளும் எடுக்கபட்டு வருவதை அவதானிக்க முடியும்.

இது போன்ற தனியார் மயமாக்கும் செயன்முறைகள் உலக நாடுகளில் குறிப்பாக விருத்தியடைந்துவரும் நாடுகளில் கையாளப்படும் ஒரு உத்தியாகக் காணப்படினும் இலங்கையில் அதன்போக்கு இன்றுமிக வேகமாக உள்ளதைக் காணமுடியும். இலங்கையின் இன்றைய பொருளாதாரப் பின்னடைவும் இதனைத் தூண்டியுள்ளது என்பதும் உண்மையாகும். அரச முயற்சிகளின் வினைத் திறனின்மைக்குக் காரணமான நிலைமைகளைச் சீர்செய்வதற்குப் பதிலாக அரச முயற்சிகளைத் தனியார் மயப்படுத்தும் இலகுவான நடைமுறையை ஆட்சியாளர்கள் கைக்கொள்ள விரும்புவதையே காணமுடிகிறது. அதனால் அந்நிறுவனங்கள் வினைத்திறனாக இயங்கி இலாபமீட்டும் நிறுவனங்காளக மாறும் என்பதுவும், அரசின் செலவுகள் குறைக்கப்படுவதுடன் தனியார் துறைக்குக் கைமாற்றுவதால் கணிசமான நிதியைத் திரட்டாகப் பெற்று அரச வரவைக் கூட்டமுடியுமென்பதுவும் உண்மையாயினும் தனியார் மயமாக்குவதன் மூலம் எதிர்காலத்தில் நாட்டு மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும். ஏனெனில் இலங்கையில் மட்டுமல்ல இது போல தனியார் மயமாக்கப்பட்டபல நாடுகளில் அதன் மூலம் பல எதிர்மறையான விளைவுகள் தோன்றியுள்ளன என்பதுவும் மறுக்க முடியாத உண்மை. அதுவும் ஊழல் செய்யும் ஆடசியாளர்கள் நிறைவாகவும் நிறுவனங்களின் போட்டித்தன்மை குறைவாகவும் உள்ள இலங்கையில் இவ்வாறான தனியார் மயமாக்கல்களால் ஏற்படக்கூடிய நன்மைகளைவிடத் தீமைகளுக்கே அதிகம் வாய்ப்புள்ளது. அது மட்டுமன்றி நாட்டின்சொத்துகளை விற்பதற்கும், தனியார் மயமாக்குவதற்கும் மக்கள் தங்களைத் தெரிவு செய்யவில்லை என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

●


# கனடா கலைமன்றத்தின் ‘நிருத்த நிறைஞர்’ பட்டமளிப்பு விழா

**குரு அரவிந்தன்**

கனடாவில் இயங்கிவரும் கலைமன்றத்தின் 19 வது பட்டமளிப்பு விழா அண்மையில் ரொறன்ரோவில் உள்ள யோர்க்வூட் நூலகக் கலையரங்கத்தில் சிறப்பாக நடந்தேறியது. கோவிட் பெரும்தொற்றுக் காரணமாகக் கலைமன்றத்தின் பட்டமளிப்பு நிகழ்வு கடந்த சில வருடங்கள் நடைபெறாமல் இருந்தது குறிப்பிடத் தக்கது. மீண்டும் இம்மாதம் நடந்த இந்த நிகழ்வுக்குக் கனடா தமிழர் தகவல் இதழ் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் தலைமை தாங்கியிருந்தார்.

எம் மொழி அழிந்து விட்டால், எம்மினமும் அழிந்து விடும் என்பது யாவரும் அறிந்ததே! புலம்பெயர்ந்த மண்ணில் எமது மொழி நிலைத்திருக்க வேண்டுமானால், எமது பண்பாடு கலாச்சாரமும் இந்த மண்ணில் நிலைத்திருக்க வேண்டும். எமக்கான அடையாளங்களை நாம் காப்பாற்றாவிட்டால், புகுந்த மண்ணில் முகவரி அற்றவர்களாக ஆக்கப்பட்டு விடுவோம். எனவேதான் இதைச் சிந்தனையில் கொண்டு, ஆரோக்கியமான எதிர்கால தலைமுறையினரை உருவாக்குவதில் கனடா கலைமன்றம் முன்னின்று செயற்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களின் பாரம்பரிய கலையான பரதத்தைப் புலம்பெயர்ந்த இந்தக் கனடிய மண்ணில் அறிமுகம் செய்யும் நோக்கத்தோடு, 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கனடா கலைமன்றத்தின் நிறுவுனராகவும், இயக்குனராகவும், அதிபராகவும் சிறிமதி நிறைஞ்சனா சந்துரு அவர்கள் பணியாற்றுகிறார்கள். இதுவரை கனடா கலைமன்றத்தில் இருந்து எமது பாரம்பரிய கலையான பரதநாட்டியத்தில் 66 நிருத்த நிறைஞர்களும், 44 டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்களும் இதற்கான தகுந்த பயிற்சி பெற்றதன் மூலம் உருவாக்கப் பட்டிருக்கின்றார்கள். புலம்பெயர்ந்த மண்ணில் இது பெரியதொரு சாதனை என்றே எண்ணத்தோன்றுகின்றது.




இந்த மன்றத்தின் இன்னுமொரு இயக்குனரான கனடாவில் பிறந்து வளர்ந்த செல்வி ஐஸ்வரியா சந்துரு அவர்கள் பல்கலை விற்பன்னராக இருக்கின்றார். பரதநாட்டியத்தில் மட்டுமல்ல, இசைத்துறையிலும் சிறந்து விளங்குகின்றார். கர்நாடக இசையில் வாய்ப்பாட்டு, மற்றும் வீணை, வயலின் போன்ற இசைக்கருவிகளை வாசிப்பதிலும் திறமையாகச் செயற்படுகின்றார். சினிமாத்துறையில் இசையமைப்பாளர் டி. இமாமின் இசையமைப்பில் ‘வணங்காமுடி’ என்ற படத்தில் ‘அம்சவல்லி’ என்ற பாடலைப் பாடியதன் மூலம் பலராலும் பாராட்டப் பட்டிருக்கின்றார். தான் அறிந்தவற்றை அடுத்த தலைமுறையினருக்குக் கற்பிப்பதிலும் மிகவும் ஆர்வமாகச் செயற்படுகின்றார்.




கனடா நாடு பல்கலாச்சார நாடாக இருப்பது மட்டுமல்ல, எங்கள் மொழி, பண்பாடு, கலாச்சாரம் மற்றும் மதத்தைப் பேணிக்காக்க உதவும் நாடாகவும் இருக்கின்றது. இத்துறையில் ஈடுபாடு கொண்ட 2022 ஆம் ஆண்டு ‘நிருத்த நிறைஞர்’ பட்டடம் பெற்ற செல்வி நிலக்ஸா பிரகாஸ் மேடையில் கௌரவிக்கப்பட்டார். இவருடன் நடன ஆசிரியருக்கான டிப்ளோமா பட்டம் பெற்ற செல்வி பூமிகா புவிதரன், செல்வி லக்ஸயா வேணுகோபாலன், செல்வி அராபி ஜெயச்சந்திரன், செல்வி தக்ஸா பாலநாதன், செல்வி பிரியங்கா சக்ரபோதி, செல்வி லாவன்யா ஜோஸி, செல்வி கர்மின்ஜொட் மினாஸ், செல்வி கேதாயினி சிவகுமாரன், செல்வி சிறிஸதி சீஹல், செல்வி பிரித்திகா கமலேசன், செல்வி சுபிக்ஸா மணிவண்ணன் ஆகியோரும் சான்றிதழ்களும், விருதுகளும் கொடுக்கப்பட்டு, மேடையில் கௌரவிக்கப்பட்டனர். எமது பாரம்பரிய கலைகளை அடுத்த தலைமுறையினரும் புலம்பெயர்ந்த இந்த மண்ணில் தொடருவதற்கு வழியமைத்த ஒரு சிறந்த நிகழ்வாக இது அமைந்திருந்தது.

●






---

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**குணம் சுதர்சன், எமில்நகர்,**
**மன்னார்.**

**கேள்வி:** ஜெனிவாவில் நடைபெறும் ஒவ்வொரு மனித உரிமைகள் மாநாட்டிலும் இலங்கை இராணுவம் போர் குற்றம் இழைத்ததாகக் குற்றம்சாட்டப்படுகிறது. இதனால், அதற்குப் பதில் அளிக்கவும், யுத்தத்தின் உண்மை நிலையை எடுத்துக் காட்டும் நோக்கிலும் விசேட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளாரே?.

**வியுக்தியார்:** 2011 ஆம் ஆண்டு தருஸ்மன் தலைமையிலான ஐநா நிபுணர்குழு இங்குவந்து, யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களுக்குச் சென்று, பாதிக்கப்பட்டவர்களிடம் வாக்குமூலங்களைப் பெற்று நீதியான - நேர்மையான - அறிக்கை ஒன்றை வெளியிட்டது. உண்மையில் அந்த அறிக்கை ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை. ஆனால், இலங்கை அரசு, இந்தக் குழுவைத் தாம் ஏற்கமுடியாது. இந்தக் குழு சட்டரீதியானது அல்ல என்று கூறியது. இலங்கை இராணுவம் போர்க்குற்றம் இழைக்ககவில்லை என்றால் விசாரணையை நடாத்த வேண்டியதுதானே. அதைவிடுத்து குற்றவாளிகளே அறிக்கை தயாரிப்பது என்ற உலக அதிசயம் நமது நாட்டில் மாத்திரமே நடக்கக்கூடியது.

---

**பி.துசியந்தன் கோவில் வீதி,**
**நல்லூர்.**

**கேள்வி:** மக்களின் ஆதரவும் கட்சியின் ஆதரவும் நாமல் ராஜபக்ஷவுக்கு இருப்பதால் அவர் நாட்டின் தலைவராக வருவதில் தனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** நாமல் நாட்டின் தலைவராக வருவதற்கு மகிந்த ஆட்சேபனை தெரிவித்திருப்பதாக எங்கும் செய்தி வந்ததாகத் தெரியவில்லை. நாமல் மாத்திரமல்ல, இந்த வியுக்தியாரும் கூட மக்களின் ஆதரவு இருந்தால் நாட்டின் தலைவராக வரலாம்தானே. ஒரு ஜனாதிபதிக்கு- அதாவது நாட்டின் தலைவராக வருவதற்கு உரிய தகுதி நமலுக்கு மட்டுமல்ல இந்த நாட்டில் வாழும் குடிமக்கள் அனைவருக்கும் தான் இருக்கின்றது. ஆனால் அந்தப் பதவிக்கு வருவதற்கு மக்கள் ஆதரவு கட்டாயம் தேவை. அப்படியொரு ஆதரவு நாமலுக்கு இருந்தால் அவர் தலைவராக வருவதற்கு மகிந்த ராஜபக்ச ஆட்சேபனை தெரிவித்தாலும் தலைவராக வந்துவிடலாம்தானே?

---

**இ. அஜந்தன் மண்கும்பான்,**
**வேலணை.**

**கேள்வி:** நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் அன்றைய தினமே பாராளுமன்றத்தை கலைப்பதற்கான தீர்மானத்தையும் சமர்ப்பிக்கவேண்டும் என ஜே. வி. பி. தெரிவித்துள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கவேண்டும், ஆனால் அதன் போர்வையின் கீழ் பாராளுமன்ற அதிகாரத்தை இந்த அரசு தக்கவைக்க அனுமதிக்க முடியாது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதற்கான மக்கள் ஆணையில்லை என்றும் ஜேவிபி கூறியிருக்கின்றதே. அவர்கள் சொல்வது சரியானதுதானே.

**வியுக்தியார்:** நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கிவிட்டு, அடுத்த பாராளுமன்ற தேர்தல்வரை தற்போதைய ஜனாதிபதியே ஆட்சியில் தொடர்வதுபோல ஒரு தீர்மானத்தை பாராளுமன்றில் கொண்டுவந்து நிறைவேற்ற ரணில்- பஸில் கூட்டணி திட்டமிட்டுவருவதாக ஒரு செய்தி பரவியதைத் தொடந்தே ஜேவிபி இப்படிக் கூறியிருக்கின்றது. அப்படியொரு தீர்மானம் பாராளுமன்றல் கொண்டுவந்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டாலும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதெனில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்த வேண்டியிருக்கும் என்கின்றனர் அரசியலமைப்பை தெரிந்தவர்கள். அப்படி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமானால் அதற்கான மக்கள் ஆணை ரணிலுக்கு கிடைத்தால்தானே, அவரால் பதவியில் தொடரமுடியும். ஜேவிபியும் இப்போது நமது தலைவர்கள் போலத்தான் எதையாவது சொல்லிக் கொண்டிருக்கவேண்டும் என்று நினைத்து விட்டதோ தெரியவில்லை.

---

**இரா.கேசவன், எல்லை வீதி,**
**மட்டக்களப்பு.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உறுதியளிக்கப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லையென சுட்டிக்காட்டி தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்றஉறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளாராமே.

**வியுக்தியார்:** ரணில், ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் பாராளுமன்றில் உரையாற்றியபோது, 75வது சுதந்திரதினத்திற்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்டு நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்போவதாக அறிவித்தார். அதாவது பகிரங்கமாக நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் அறிவித்திருந்தார். அப்படி அறிவித்த விடயத்தையே ரணில் செய்யாத போது, ஒரேயோரு எம்.பி. என்ற பலத்தோடு, ரணிலிடம் பேசிய விக்கினேஸ்வரனிடம் உறுதியளித்த விடயங்களை அவர் நடைமுறைப்படுத்தவில்லை என்று கோப்படுவது விக்கியின் பல வீனத்தைத்தான் காட்டுகின்றது.

# முழுமையான முற்றுகைக்குள் காசா!

# ஐ.நா.வின் தோல்வியும், உலகின் மௌனமும்

# இஸ்ரேல் தொடரும் போர் குற்றம்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



ஐ.நா.சபையின் 75 ஆண்டு கால வரலாற்றில் பலஸ்தீனத்திற்கு உரிய நியாயத்தை உறுதி செய்வதில், ஐக்கிய நாடுகள் சபை முழுமையாக தோல்வியடைந்துள்ளது.

ஐ.நா. சபையில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கூட அமெரிக்கவும், மேற்குலக நாடுகளும் ஒருபோதும் ஆதரித்ததில்லை. அதற்கு மாறாக, இஸ்ரேலை பயன்படுத்தி வளைகுடா பிரதேசத்தில் நிரந்தரமான பதற்றத்தை நிலவச் செய்வதில் அமெரிக்கா வெற்றி பெற்றுள்ளது என்றே கருதலாம்.

தற்போது இஸ்ரேலில் ஆட்சியில் உள்ள அதிதீவிர வலதுசாரியான பெஞ்சமின் நேதன்யாகு தலைமையிலான அரசு, பாலஸ்தீனத்தையே முற்றாக அழிப்பது என்ற நோக்கத்துடன் மேற்கொண்ட நகர்வுகள், ஹமாஸ் உள்ளிட்ட பாலஸ்தீன மக்களின் இயக்கங்களுக்கு அதிர்ச்சியை மட்டுமின்றி, பாரிய அழுத்தங்களையும் ஏற்படுத்தியது.

இதனாலேயே இஸ்ரேலின் வலுவான உளவு அமைப்புகளின் கண்களில் மண்ணைத் தூவி, அதிரடியான தாக்குதலை நடத்தியுள்ளது ஹமாஸ் இயக்கம். இதற்கு இஸ்ரேல் தரப்பில் எதிர்வினை கடுமையாக இருக்கும் என்பது தெரிந்ததே. கடந்த நாட்களாக போர் பிரகடனம் அறிவித்து காசாவை இன்னும் கடுமையாக தாக்கி வருகிறது இஸ்ரேல்.

இதேவேளை இந்தப் போர் பற்றிய பக்கச்சார்பான செய்திகளே வருகின்றன. ஹமாஸ் தரப்பு தாக்குதல் நடத்தினால் அது தீவிரவாத தாக்குதல் என்றும் (Terroirst Attack) ஆனால் இதே தாக்குதலை வருடம் முழுவதும் இஸ்ரேல் நடத்தினால் அதற்குப் பெயர் சுற்றிவளைப்பு-முற்றுகை (Israel raids on Palestinian territory) என உலகின் மிகப்பெரிய சர்வதேச ஊடகங்கள் தொடர்ந்து இந்த வார்த்தைகளை பாவித்து வருகின்றன.



### 1948இல் இன அழிப்பு மீண்டும்?

1948 மே 14 அன்று பிரிட்டன் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியவுடன், ராணுவத்தை கொண்டிருந்த யூதர்கள், அமெரிக்க உதவியுடன், பாலஸ்தீனத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றினர். அப்போது சுமார் 15000 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மிகப் பெரிய அளவில் இனஒழிப்பு நடவடிக்கைகள் பாலஸ்தீனரக்கு எதிராக அப்போது நடத்தப்பட்டது.

ஏழு இலட்சம் பாலஸ்தீனர்கள் தங்கள் மூதாதையர் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டனர். ஆயிரக்கணக்கான பாலஸ்தீன கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இவையனைத்தும் அமெரிக்க ஆதரவுடன் நடைபெற்றன. அதே தினத்தில் யூதர்கள் "இஸ்ரேல்" என்ற நாட்டை அறிவித்தனர்.




இந்த இன அழிப்பின் பின்னர் அனைத்து ஆவணங்களிலும் இருந்த 'பாலஸ்தீனம்' என்ற பெயரை அழித்தனர். இந்த தினத்தை பாலஸ்தீனர்கள் "அல்-நக்பா" என்றழைக்கின்றனர். நக்பா என்றால் பேரழிவு என்று அர்த்தம்.

தற்போது மீண்டுமொரு இன அழிப்புன் ஆரம்பமாக காசா முழுவதுமாக இஸ்ரேலிய இராணுவ முற்றுகையில் உள்ளது. மின்சாரம் வழங்கப்படாது, உணவு வழங்கப்படாது, தண்ணீர் வழங்கப்படாது, எரிவாயு வழங்கப்படாது அனைத்தும் மூடப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் அதிகாரப்பூர்வ அறிவிப்பானது, பேரழிவு ஆரம்பமாகி உள்ளதை வெளிப் படுத்துகிறது. முழு முற்றுகைக்குள் காசா முடங்கி, இஸ்ரேலின் போர் குற்றம் தொடர்கிறது. உலகின் மனச்சாட்சியும் மௌனித்திருக்க, ஐ.நா.சபையின தோல்வியை வெளிப்படுத்தும் வண்ணம் இஸ்ரேலின் கோரத் தாண்டவம் அரங்கேறுகிறது.

**உலகின் மனச்சாட்சியும் மௌனித்திருக்க, ஐ.நா.சபையின் தோல்வியை வெளிப்படுத்தும் வண்ணம் இஸ்ரேலின் கோரத் தாண்டவம் அரங்கேறுகிறது. இராணுவ முற்றுகைக்குள் காசா முடங்கி, இஸ்ரேலின் போர் குற்றம் தொடர்கிறது**

### போரல் உருக்குலையும் காஸா

ஏற்கனவே, காசா முனைக்கு பல்வேறு வசதிகளை தடுத்து நிறுத்தி உலகின் மிகப்பெரிய திறந்தவெளி சிறையாகவே காசாவை இஸ்ரேல் வைத்துள்ளது. காசாவில் உள்ள 10 பாலஸ்தீனியர்களில் 7 பேர் அகதிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். சொந்த நாட்டுக்குள்ளேயே அகதிகளாக வாழும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆனால், இந்த முழு முற்றுகை ஒன்றும் காசாவுக்கு புதிதல்ல. ஏற்கனவே அங்கு 22 மணி நேரம் மின்சாரம் இருக்காது. இஸ்ரேல் அறிவிப்பால் தற்போது 24 மணி நேரமும் மின்சாரம் இருக்காது. காசாவில் வறுமை மற்றும் உணவுப் பற்றாக்குறையால் 7 சதவீத குழந்தை கள் நீண்ட கால ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக வளர்ச்சி குன்றிய நிலையில் உள்ளனர். 60 சதவீத குழந்தைகள் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐ.நா தரவுகள் கூறுகின்றன.

தற்போது உணவு, எரிபொருள் மற்றும் மருந்து பொருள்கள் எதுவும் உள்ளே செல்ல இயலாதவாறு இஸ்ரேல் முழுமையாக காஸாவை முற்றுகை செய்துள்ளது. ஏற்கெனவே இருந்த எகிப்து ஊடான ஒரே வழியும் அடைப்பட்டுவிட்டது. காஸாவின் மருத்துவமனைகளில் போதிய மருந்து பொருள்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில், போர் குற்றத்தின் கீழ் வரும், மனித நேயத்திற்கு எதிரான, மின்சாரம் வழங்கப்படாது, உணவு வழங்கப்படாது, தண்ணீர் வழங்கப்படாது, எரிவாயு வழங்கப்படாது, அனைத்தும் மூடப்படும் என இஸ்ரேல் அறிவித்துள்ளமையை பல கீழைத்தேய நாடுகள் கண்டனங்களை முன்வைத்துள்ளனர். ஆயினும் இஸ்ரேல் தொடரும் போர் குற்றத்தை மேற்கு உலகின் மௌனமானது ஐ.நா.சபையின் தோல்வியாகவே கருதலாம்.

### இஸ்ரேலை கண்டிக்காதது ஏன்?

இன்றைக்கு இஸ்ரேல் மீதான தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் உலக வல்லாதிக்க நாடுகள், உலகப் பெரும் தலைவர்கள், பன்னாட்டு அமைப்புகள் பாலஸ்தீனத்தின் மீது பல ஆண்டுகளாகத் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேலைக் கண்டிக்காது அமைதி காத்து வருகின்றன.

தற்போது பாலஸ்தீன ஹமாஸையும் வெறும் பயங்கரவாத இயக்கமாக மட்டுமே உலக நாடுகள் சித்தரித்து வருகின்றனவே அன்றி பாலஸ்தீன போராட்டத்தின் நியாயத்தை எவரும் உணரவில்லை. போரினால் மக்கள் பேரிழப்பைச் சந்திக்க நேரிடும் என்பதையும், போர் மட்டுமே நிரந்தரத் தீர்வில்லை என்பதனை இஸ்ரேல் இன்னமும் உணரவில்லை.




காஸா பகுதியை 2007 முதல் அதிகாரத்தில் வைத்திருக்கும் ஹமாஸை ஒடுக்கும் செயலில் மேலும் இஸ்ரேல் தீவிரம் காட்டி வருகிறது.

இந்தப் போர்ச் சூழலால், காஸாவில் பல லட்சம் மக்கள் வீடுகளை இழந்து அகதிகளாகி உள்ளதாக ஐ.நா. தெரிவிக்கிறது.

2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு 50,000 குழந்தைகள் உட்பட 1,50000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் இஸ்ரேல் அரசால் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் தடை செய்யப்பட்ட பாஸ்பரஸ் கொத்து குண்டுகளைப் போட்டு அப்பாவி பாலஸ்தீன மக்களை அழித்தொழிக்கும் இஸ்ரேலை உலக நாடுகள் இதுவரை தடுத்து நிறுத்தாதது ஏன் என்பதும் கவலைக்குரியதே.

### பாலஸ்தீன கனவை நசுக்கும் இஸ்ரேல்

"என் ஒரு கையில் துப்பாக்கி இருக்கிறது, மறு கையில் அமைதியைக் குறிக்கும் ஒலிவ் இலை இருக்கிறது, எதைத் தூக்க வேண்டுமென்று நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்" என்று ஐ.நா. மன்றில் தோன்றி உலகத்தின் முன் வரலாற்றுச் சிறப்புமிக்கப் பேருரையை ஆற்றிய பாலஸ்தீன முன்னைய அதிபர் யாசர் அராபத்திற்கு உலக நாடுகள் முன்னிலையில் அளித்த உறுதி மொழியைக்

(14ஆம் பக்கம் பார்க்க)





# முழுமையான...

(13ஆம்பக்கத் தொடர்ச்சி)
காலில் போட்டு மிதித்து, பாலஸ்தீன விடுதலைக் கனவை நசுக்கி உள்ளது இஸ்ரேல். ஆயினும் இஸ்ரேல் மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது எல்லோருக்கும் புரியும்.

தற்போது பாலஸ்தீனத்தின் காசாவில் முழு முற்று கையை இஸ்ரேல் அறிவித்துள்ளது. இது ஒரு போர் குற்றம் என கூறப்படுகிறது. அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் உதவியுடன் இயங்கும் இஸ்ரேல், பொதுவாகவே வரம்புகளை மீறி செயல்படும் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் நிலையில், அடிப்படை வசதிகள் அனைத்தும் காசாவில் முடக்கப்படும் என மீண்டும் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் அறிவித்தது ஒரு போர்க் குற்றம் என்பதும், மனித குலத்திற்கு எதிரான குற்றத்துக்கான அதிகாரப் பூர்வ அறிவிப்பை அந்நாடு வெளியிட்டுள்ளமை பல மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

உலகின் மனச்சாட்சியும் மௌனித்திருக்க, ஐ.நா.சபையின் தோல்வியை வெளிப்படுத்தும் வண்ணம் இஸ்ரேலின் கோரத் தாண்டவம் அரங்கேறுகிறது.

இராணுவ முற்றுகைக்குள் காசா முடங்கி, இஸ்ரேலின் போர் குற்றம் தொடர்கிறது.

"நாங்கள் காசாவை முழுவதுமாக முற்றுகையிடுகிறோம், மின்சாரம் வழங்கப்படாது, உணவு வழங்கப்படாது, தண்ணீர் வழங்கப்படாது, எரிவாயு வழங்கப்படாது, அனைத்தும் மூடப்படும்." என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் அதிகாரபூர்வமாக அறிவித்தார். நாங்கள் விலங்குகளுடன் போராடுகிறோம், அதன்படி செயல்படுகிறோம் என்று ஹீப்ரு மொழியில் அவர் கூறியுள்ளதுடன், காசா மீது முழு முற்றுகையை இஸ்ரேல் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளமையால் பேரழிவின் விளிம்பில் பாலஸ்தீன மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். •

# எரிபொருளைச் சேமிக்குமாறு ஜனாதிபதி ரணில் பணிப்புரை



கொழும்பு, ஒக். 15

போதுமான எரிபொருளை கையிருப்பில் சேமித்து வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

அண்மையில், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விசேட அமைச்சர்கள் கூட்டத்தில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இஸ்ரேல் - காஸா பகுதியில் நிலவி வரும் மோதல், உக்ரேன் - ரஷ்யா இடையிலான மோதல் காரணமாக உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துவருவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அனைத்து களஞ்சியசாலைகளிலும் போதியளவு எரிபொருள் இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் போர்கள் இது நீண்ட காலப் போராக மாறும் என்ற நம்பிக்கையில் மசகு எண்ணெய் உற்பத்தியாளர்களும் தங்கள் உற்பத்தி நடவடிக்கைகளைக் குறைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தேர்தல்களை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)
பயன்படுத்தி எதைச் செய்யமுடியும்? எதைச் செய்யமுடியாது என்பதை விக்கிரமசிங்க நன்கு அறிவார். அதனால் பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றத்தை கொண்டு வருவதற்கும் அதன் நீட்சியாக ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கும் என்று கூறிக் கொண்டு அரசாங்க உயர்மட்டம் முன்வைக்கும் யோசனை ஒப்பேறக்கூடிய ஒன்றாக தெரியவில்லை.

அதேவேளை 2025 பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு மக்களின் புதிய ஆணையுடன் பதவிக்கு வரக்கூடிய அரசாங்கமே ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு விவகாரத்தைக் கையாள வேண்டும் என்று கூறும் பொதுஜன பெரமுனவும் எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேம தாசவின் ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே.வி.பி.யும் அந்த தேர்தலில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு மக்களின் ஆணையைக் கேட்டு விஞ்ஞாபனத்தை முன்வைக்கவேண்டும்.

அந்த ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து உறுதியான நிலைப்பாட்டைக் கொண் டிருக்கும் ஜே.வி.பி. அண்மைக்காலமாக அடுத்த ஜனாதிபதி தேர்தலுக் கான வேட் பாளராக அதன் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவை ஏற்கெனவே அறிவித்து விட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக பிரேமதாச சில மாதங்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டுவிட்டார். இவர்கள் எல்லோரும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்துத் அண்மைக் காலமாக முன்னைய உறுதிப்பாட்டுடன் பேசுவதில்லை.

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலுக்கு முகங்கொடுக்க முடியாத நிலையில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்தும் பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றம் குறித்தும் கதையை அவிழ்த்துவிட்டிருக்கும் அரசாங்கம் அவை தொடர்பிலான சட்டவாக்க செயன்முறைகளை முன்னெடுக்க கால அவகாசம் தேவை என்று ஒரு விளக்கத்தைக் கூறி ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைக்கலாம் என்று நினைக்கிறது போலும்.

தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 2025 ஆகஸ்ட் வரை நீடிக்கிறது. அது வரைக்கும் அதிகாரத்தில் இருந்து பிறகு வேறு ஒரு வியூகத்தை வகுக்கலாம் என்ற விபரீதமான நம்பிக்கையில் அரசாங்கத் தலைவர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

# வேலைவாய்ப்பு பெற்று தருவதாக இணையத்தளம் ஊடாக மோசடி!

## ஒருவர் வசமாக சிக்கினார்

கொழும்பு, ஒக். 15

வேலைவாய்ப்பு பெற்று தருவதாக தெரிவித்து, இணையத்தளம் ஊடாக சுமார் ஒரு கோடி ரூபாவை மோசடி செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு ஊழல் விசாரணை தடுப்பு ஆணைக்குழுவினால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரந்தெனிய தெனகொட பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் பேஸ்புக் கணக்கின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட விளம்பரங்களின் ஊடாக அவர் இந்த பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# "ஒண்ணுமே புரியல உலகத்திலே..."

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஈரானியர்களும் முஸ்லிம்களா?

- ஆமாம். ஆனால், ஷியா முஸ்லிம்கள், அவர்கள் பொதுவாக சுன்னிகளுடன் உடன்பட மாட்டார்கள். ஆனால் அவர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் அவர்கள் தேர்வு செய்ய வேண்டும் என்றால், சுன்னிகளுக்கு ஆதரவளிக்கிறார்கள்.

மற்றும் அல்பேனியர்கள்?

- அல்பேனியர்கள் யூதர்களுக்கு ஆதரவு. ஆனால் அவர்கள் முஸ்லிம்கள் இல்லையா?

- ஆமாம், ஆனால் அவர்கள் அமெரிக்காவுடன் இருக்கிறார்கள், அமெரிக்கா இஸ்ரேலுடன் இருக்கிறது.

சரி. பொஸ்னியாவைச் சேர்ந்த சேர்பியர்கள் நிச்சயமாக இஸ்ரேலுக்கு எதிரானவர்கள் இல்லையா?

- இல்லை, அவர்கள் இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பவர்கள்

சரி, அல்பேனிய முஸ்லிம்கள் இஸ்ரேலுக்கு ஆதரவு என்றால், பொஸ்னிய முஸ்லிம்களும் இஸ்ரேலுக்குத் தான் ஆதரவா?

- இல்லை, அவர்கள் பாலஸ்தீனத்துக்கு ஆதரவளிப்பவர்கள்.

சரி... பொஸ்னிய குரேஷியர்கள், அவர்கள் முஸ்லிம்களுடன் கூட்டமைப்பில் உள்ளனர்,

எனவே அவர்களும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவா?

- இல்லை, பொஸ்னிய குரேஷியர்கள் இஸ்ரேலை ஆதரிக்கின்றனர்...

மற்றும் சேர்பியாவைச் சேர்ந்த சேர்பியர்கள் நிச்சயமாக கொசோவோவை அங்கீகரிக்காத பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும், அதை அங்கீகரித்த இஸ்ரேலுக்கு எதிராகவும் இருப்பார்கள்?

- இல்லை, சேர்பியாவைச் சேர்ந்த சேர்பியர்களும் இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பவர்கள். அப்போது உக்ரேனியர்கள்?

- இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பவர்கள். அப்படியானால், சேர்பியர்கள் நிச்சயமாக உக்ரேனுக்கு ஆதரவளிப்பார்கள். அவர்கள்

இஸ்ரேல் ஆதரவாளர்களாயிற்றே?

- இல்லை, பெரும்பாலான சேர்பியர்கள் ரஷ்யாவை ஆதரிக்கின்றனர்.

கடவுளே, முட்டிக்கொள்ளலாம்போல இருக்கிறதே?

- முயன்று பாருங்கள்

மற்றும் குரேஷியர்கள்?

- இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பவர்கள்.

அப்படியானால் குரேஷியர்களும் ரஷ்ய ஆதரவா?

- இல்லை, அவர்கள் உக்ரேனை ஆதரிக்கிறார்கள்.

ரஷ்யர்கள் இஸ்ரேலை ஆதரிக்கிறார்கள், இல்லையா?

- இல்லை, ரஷ்யர்கள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவு. ஏனென்றால், ஈரான் அவர்களுடன் உள்ளது,

ஈரான் ரஷ்யாவின் நட்பு நாடு.

சரி, நிச்சயமாக பொஸ்னியாவிலிருந்து வரும் முஸ்லிம்கள் ரஷ்யாவுக்கானவர்கள்.

ஏனென்றால், ஈரானிய முஸ்லிம்கள் ரஷ்யாவுடன் இருக்கிறார்கள், இது பாலஸ்தீனத்திற்கு, உக்ரைன் இஸ்ரேலுக்கு. சரியா?

- இல்லை, பொஸ்னியாவைச் சேர்ந்த முஸ்லீம்கள் உக்ரைனுக்கு ஆதரவாகவும், ரஷ்யாவிற்கு எதிராகவும் இருக்கிறார்கள், ஏனெனில், பொஸ்னிய சேர்பியர்கள் ரஷ்யாவுக்கு ஆதரவாக உள்ளனர். இப்போது எனக்கு எதுவும் புரியவில்லை. அப்போது துருக்கியர்கள்?

- துருக்கியர்களுக்கு என்ன?

துருக்கியர்கள் முஸ்லிம்கள், எனவே அவர்கள் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவா?

- உண்மையில் அப்படி இல்லை, பாலஸ்தீனர்கள் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து பாலஸ்தீனத்திலிருந்து துருக்கியர்களை விரட்டினர், அதனால் அவர்கள் ஒருவரையொருவர் அதிகம் விரும்புவதில்லை.

பாலஸ்தீனர்கள் துருக்கியர்களுக்கு எதிரிகளா?

- இல்லை, துருக்கியர்களின் எதிரிகள் குர்துகள். குர்துகள் இப்போது என்ன செய்கிறார்கள்?

- குர்துகள் நாத்திகர்கள்.

ஆம், குர்துகள் நிச்சயமாக சீன ஆதரவு, ஏனென்றால் அவர்களும் நாத்திகர்கள்.

- இல்லை, குர்துகள் அமெரிக்கர்களுடன் இருக்கிறார்கள்.

அப்படியானால் அமெரிக்கர்கள் குர்துகளுடன் இருந்தால் துருக்கியர்கள் அமெரிக்கர்களுக்கு எதிரானவர்களா?

- துருக்கியர்கள் அமெரிக்காவின் நட்பு நாடுகளான நேட்டோவில் உள்ளனர்.

அடக் கடவுளே! ஆர்மீனியர்களின் நிலை என்ன?

- அவர்களுக்கு என்ன?

அவர்கள் யார்?

- அவர்கள் கிறிஸ்தவர்கள்.

அவர்கள் ரஷ்யர்களுடன் இருக்கிறார்களா?

- இல்லை, அமெரிக்கர்களுடன்.

ஆனால் அந்த அஜர்பைஜானியர்கள் அவர்களை நாகோர்னோ - கராபக்கிலிருந்து வெளியேற்றினார்கள் இல்லையோ?

- ஆமாம்

அந்த அஜர்பைஜானிகள் பாலஸ்தீனத்தைச் சேர்ந்த முஸ்லிம்களின் பக்கமா?

- இல்லை, அவை இஸ்ரேலின் பக்கம்.

அப்படியானால், ஈரான் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக இருப்பதால் அவர்களும் ஈரானுக்கு எதிரானவர்களா?

- அஜர்பைஜான் ஈரானுடன் உள்ளது.

மேலும் இந்த சிரியர்கள் முஸ்லிம்களா?

-ஆமாம்

அப்படியானால் அவர்கள் துருக்கியர்களுடன் இருக்கிறார்களா?

- இல்லை, துருக்கியர்களும் சிரியர்களும் எப்போதும் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கிறார் கள்.

துருக்கியர்கள் குர்துகளுக்கு எதிரானவர்கள், எனவே நிச்சயமாக சிரியர்கள் குர்துகளுக்கு ஆதரவுதானே?

- இல்லை, குர்துகளும் சிரியர்களும் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்பவர்கள்தாம்.

சரி, அப்படியானால் சிரியர்கள் இஸ்ரேலை ஆதரிக்கவேண்டுமே?

- வாய்ப்பே இல்லை சிரியா 100வீதம் பாலஸ்தீனத்துக்கு ஆதரவு.

விளங்கிவிடும். அப்போது மாண்டினெக்ரின்கள்?

-அவர்களுக்கென்ன?

மாண்டினெக்ரின்கள் யாருடன் இருக்கிறார்கள்?

- முன்பு, அவர்கள் 1905இல் ருஸ்ஸோ-ஜப்பானிய போர் நடந்தபோது ஜப்பானுக்கு எதிராகப் போராடினர், இப்போது அவர்கள் அமெரிக்கா மற்றும் நேட்டோ மூலம் அதனுடன் இணைந்துள்ளனர்.

இப்போது, தயவுசெய்து உங்கள் ருசியான ஞாயிறு டிபனை சுவையுங்கள் அதோடு, மேலே நான் பறக்க விட்ட நண்பரின் புலம்பலை எண்ணிப் பார்த்து, இது தாண்டா உலகம். இதில் எப்படி நாம் வாழப் போகிறோம் என்று எண்ணிப் பாருங்கள்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

## பொதுஜன...

மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை அதற்கு சாதகமான பதிலை ஜனாதிபதி வழங்கவில்லை.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்.

இதன் காரணமாக பொதுஜன பெரமுனவின் சிரேஷ்டர்கள் கடந்த காலங்களில் ஊடகங்கள் முன் விரக்தியை வெளிப்படுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

எவ்வாறாயினும், அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதை நிறுத்தினால் அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படும் என்பதால், அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## நாகை...

தமிழகத்தின் நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக்காட்சி மூலம் புதுடில்லியில் இருந்தபடி நேற்று காலை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவும் இலங்கையும் கலாசாரம், வர்த்தகம் மற்றும் நாகரீகத்தின் ஆழமான வரலாற்றைப் பகிர்ந்து கொள்கின்றன.

நாகப்பட்டினம் மற்றும் அருகிலுள்ள நகரங்கள் இலங்கை உள்பட பல நாடுகளுடன் கடல் வணிகத்திற்கு நீண்டகாலமாக அறியப்படுகின்றன. பண்டைய தமிழ் இலக்கியங்களில் பூம்புகார் துறைமுகம் ஒரு மையமாக குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க கால இலக்கியங்களான பட்டினப்பாலை, மணிமேகலை போன்றவை இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே செல்லும் படகுகள் மற்றும் கப்பல்கள் பற்றி பேசுகின்றன.

மகா கவிஞர் சுப்பிரமணிய பாரதி தனது ‘சிந்து நதியின் மிசை’ பாடலில், நமது இரு நாடுகளையும் இணைக்கும் பாலம் பற்றிப் பேசியுள்ளார். இந்த படகு சேவையானது அந்த வரலாற்று மற்றும் கலாசார தொடர்புகளை உயிர்ப்பிக்கிறது.

இலங்கை ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் சமீபத்திய விஜயத்தின்போது, எமது பொருளாதார பங்காளித்துவத்திற்கான தொலை நோக்கு ஆவணத்தை கூட்டாக ஏற்றுக்கொண்டோம். இணைப்பு என்பது இந்தக் கூட்டாண்மையின் மையக் கருப்பொருள். இணைப்பு என்பது இரு நகரங்களை நெருக்கமாகக் கொண்டு வருவது மட்டுமல்ல.

இது நம் நாடுகளை நெருக்கமாகவும், நம் மக்களை நெருக்கமாகவும், நம் இதயங்களை நெருக்கமாகவும் கொண்டு வருகிறது. இணைப்பு வர்த்தகம், சுற்றுலா மற்றும் மக்கள்-மக்கள் உறவுகளை மேம்படுத்துகிறது. இது இரு நாட்டு இளைஞர்களுக்கும் வாய்ப்புகளை உருவாக்குகிறது. 2015 ஆம் ஆண்டில் நான் இலங்கைக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து, டில்லிக்கும் கொழும்புக்கும் இடையே நேரடி விமான சேவை தொடங்கப்பட்டதை நாங்கள் கண்டோம்.

பின்னர், இலங்கையிலிருந்து புனித யாத்திரை நகரமான குஷிநகரில் முதல் சர்வதேச விமானம் தரையிறங்கியதைக் கொண்டாடினோம்.

சென்னை மற்றும் யாழ்ப்பாணம் இடையே நேரடி விமான சேவை 2019 இல் தொடங்கியது. இப்போது, நாகபட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையே படகு சேவை மற்றொரு முக்கியமான படியாகும். - என்றார். (அ)

## வர்த்தக...

உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வாகனங்களை மீள இறக்குமதி செய்வது தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த உப குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், அமைச்சரவையின் அனுமதி கிடைத்த பின்னரே மீண்டும் வர்த்தக வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஏனைய வாகனங்களின் இறக்குமதிக்கு இதுவரை எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை. (அ)

## யாழ்.போதனா...

நான் மிகவும் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளதோடு குறித்த பாதுகாப்பு கடமைகள் ஈடுபடும் தனியார் நிறுவனத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு காவலாளிகளையும் நேற்றிலிருந்து வைத்தியசாலை பாதுகாப்பு கடமைக்கு அனுப்பவேண்டாம் எனவும் அவர்களுக்கு எச்சரித்துள்ளேன். இவ்வாறான சம்பவங்களை இனிமேலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதாவது பொதுமக்கள் வைத்தியசாலைக்கு சுதந்திரமாக வந்து தமது மருத்துவத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பல்வேறு பட்ட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே இவ்வாறான ஒரு சில சம்பவங்கள் மூலம் அவை மழுங்கடிக்கப்படக்கூடாது-என்றார்.

யாழ்.போதனா வைத்தியசாலை நுழைவாயிலுக்கு அருகில் நபர் ஒருவரை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தாக்கும் காணொளி சமூக ஊடகங்களில் வைரலாகியது. (அ)

## புலிபாய்ந்த...

முன்னாள் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் வடக்கு பகுதிக்கு இடைப்பட்ட பகுதியான புலிபாய்ந்தகல் கடற்கரையை அண்டிய பகுதி, இதனோடு இணைந்த பல ஏக்கர் காணிகள் சிறு தானிய பயிர்ச்செய்கைக்காக தமிழ் மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன. தற்போது வன இலாகா கையகப்படுத்தியுள்ளது.

கடற்கரைப் பகுதியில் தமிழ் மீனவர்கள் பாரம்பரியமாக தொழில் செய்து வருகிறார்கள். அப் பகுதியில் இரண்டரை மாதத்திற்கு முன்னர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் வாடி அமைத்து அங்கே தொழில் மேற்கொள்கிறார்கள் என கொக்கு தொடுவாய் மீனவர் அமைப்பும் அங்கு தொழில் செய்யும் தமிழ் மீனவர்களும் கிராம சேவை யாளருக்கு முறைப்பாடு மேற்கொண்டதோடு எனக்கும் தெரியப்படுத்தினர்.

அவ்விடத்திற்கு சென்று பார்வையிட்டபோது கிராம சேவையாளர் அந்த வாடிகளை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகச் கூறிச் சென்றார். ஆனால் சட்டத்தை மீறி அனுமதியின்றி அமைக்கப்பட்ட வாடி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களால் இதுவரை அகற்றப்படவில்லை.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் அதனை அகற்ற கோரி பதாகை காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. ஆனால் இருந்த வாடியை விட இன்னுமொரு வாடி முழுமைப்படுத்தப்பட் டுள்ளதுடன் மேலும் இரண்டு வாடிகள் அங்கே பகுதியளவில் போடப்பட்டுள்ளன.

இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து பெரியதொரு குடியேற்ற திட்டத்தை முறியடிக்கும் விதமாக செயற்படவேண்டும். - என்றார். (அ)

## 40ஆண்டுகளுக்கு...

நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் துறைமுகங்கள், கப்பல் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் ஆகியோர் குறித்த சேவையை நேற்று ஆரம்பித்து வைத்தனர்.

நாகை துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து கடந்த 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என முன்னதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் பல்வேறு காரணங்களால் குறித்த நிகழ்வு இரண்டு முறைகள் ஒத்திவைக்கப்பட்டன.

விமான நிலையத்தின் நடைமுறைகளே நாகப்பட்டினம் துறைமுகத்திலும் பின்பற்றப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு பயணி, கப்பல் பயணத்தின்போது தன்னுடன் 50 கிலோ எடையிலான பொருட்களை மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

அதில் 20 கிலோவை பயணி தன்னுடன் வைத்துக் கொள்ளும் படியாகவும், 30 கிலோ கப்பலில் வைக்கக்கூடிய பை என இரண்டாகப் பிரித்து வைத்திருக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்திய கப்பல் பயணத்தில் இலங்கைக்குச் சென்றால் அவர் இந்தியா திரும்புவதற்கான விமானம் அல்லது கப்பல் பயணச் சீட்டை காண்பித்தால் மட்டுமே இலங்கைக்குச் செல்ல அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இலங்கையைச் சேர்ந்த பயணிக்கு இந்த நடைமுறை பின்பற்றப்படாது.

குறித்த கப்பல் நாள்தோறும் காலை 7 மணிக்கு புறப்பட்டு மதியம் 12 மணிக்கு இலங்கை காங்கேசன் துறைமுகத்திற்கு 12 மணிக்கு வந்தடையும்.

அங்கிருந்து மதியம் 1.30 மணிக்கு புறப்பட்டு மாலை 5.30 மணிக்கு நாகபட்டினத்தை சென்றடையும்.

இந்த பயணத்துக்கு கடவுச்சீட்டு, விசா கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் நடைமுறைகளைப் போலவே பயணிகளின் உடமைகள் சுங்கத்துறையினரால் கப்பல் பயணத்தின் போதும் பரிசோதனைக் குட்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 ஆண்டுகளுக்குப் பிறகு நாகபட்டினம் இலங்கை பயணிகள் கப்பல் சேவை நேற்று காலை 8 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த பயணிகள் கப்பலுக்கு ‘செரியபாணி என்றும் பெயரும் சூட்டப்பட்டுள்ளது,

செரியாபாணி கப்பலை காங்கேசன் துறை துறைமுகத்துக்கு வரவேற்கும் நிகழ்வில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபால சுந்தரன், யாழ்ப்பாணம் இந்திய துணை தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ் கரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் களும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

காங்கேசன்துறை துறைமுகத்தில் யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ் கரன் பச்சை கொடி அசைத்து மீண்டும் இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகம் நோக்கி 31 பயணிகளுடன் கப்பல் பிற்பகல் 1.15 மணியளவில் புறப்பட்டது.

நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன் துறைக்குமிடையிலான கப்பலில் பயணம் மேற்கொள்வதற்கு ஒருவருக்கு ஒருவழிக் கட்டணமாக 27,000 ரூபாவும் இருவழிக்கட்டணமாக 53,500 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

இறுதியாக 1984 ஆம் ஆண்டு தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் கப்பல் சேவை இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையின்...

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு இணங்காமல், மனித உரிமைகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்றும் மனித உரிமைகள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் ஐ.நா. நீண்டகாலமாக கவலையடைந்திருந்த நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தது.

மரண தண்டனையை நீக்குவது உட்பட சில நேர்மறையான திருத்தங்கள் வரைவில் செய்யப்பட்டிருந்தாலும், திருத்தப்பட்ட வரைவில் உள்ள பல விதிகளின் நோக்கம் மற்றும் பாரபட்சமான விளைவுகள் குறித்து கவலைகள் உள்ளன.

கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைகளுக்கான கட்டுப்பாடுகள் குறித்து ஐ.நா. கவலை கொள்வதாகவும் கூறியுள்ளது.

இந்த சட்டமூலத்தில் பயங்கரவாதம் பற்றிய மிக விரிவான வரையறை உள்ளது மற்றும் போதிய நீதித்துறை மேற்பார்வையின்றி மக்களை தடுக்கவும், கேள்வி கேட்கவும், தேடவும், கைது செய்யவும், தடுத்துவைக்கவும் பொலிஸாருக்கும் இராணுவத்திற்கும் பரந்த அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை பொறுத்தவரை, தகவல் தொடர்புகளை கடுமையாக ஒழுங்குபடுத்தும் மற்றும் கட்டுப்படுத்தும். மேலும் உடன்படாத வெளிப்பாடுகளை ”தவறான அறிக்கைகள்” என்று முத்திரிரையிடுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரிகளுக்கு கட்டுப்பாடற்ற அதிகாரத்தை வழங்குமென ஐ.நா. நம்புகிறது.

சட்டமூலத்தின் பல பிரிவுகள் தெளிவில்லாமல் வரையறைகளைக் கொண்டிருக்கின்றன.

சிவில் சமூகம் மற்றும் சுயாதீன நிபுணர்களுடன் மேலும் அர்த்தமுள்ள ஆலோசனைகளை மேற்கொள்ளுமாறும், இலங்கையின் சர்வதேச மனித உரிமைக் கடமைகளுக்கு முழுமையாக இணங்குவதற்கு சட்ட வரைவில் கணிசமான திருத்தங்களைச் செய்யுமாறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. (அ)

## புலமைப்பரிசில்...

ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் வடக்கில் இம் முறை 71 இணைப்பு நிலையங்களும் 209 பரீட்சை மண்டபங்களும் செயல்படவுள்ளன.

இவ்வாறு செயல்படும் பரீட்சை மண்டபங்களிலேயே இந்த 18 ஆயிரத்து 759 மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

இதேநேரம் வடக்கில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் யாழ்ப்பாணம் ஒன்று வலயத்தில் 12 இணைப்பு நிலையங்களின் கீழ் 41 பரீட்சை நிலையங்களில் 3 ஆயிரத்து 782 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் அதேநேரம், யாழ்ப்பாணம் 02 வலயத்தில் 10 இணைப்பு நிலையங்களின் கீழ் 54 பரீட்சை நிலையங்களில் 5 ஆயிரத்து 208 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 10 இணைப்பு நிலையங்களின் கீழ் 28 பரீட்சை நிலையங்களில் 2ஆயிரத்து 219 மாணவர்களும், முல்லைத்தீவில் 09 இணைப்பு நிலையங்களின் கீழ் 24 பரீட்சை நிலையங்களில் 2 ஆயிரத்து 162 மாணவர்களும்,

வவுனியா மாவட்டத்தில் 14 இணைப்பு நிலையங்களின் கீழ் 34 பரீட்சை நிலையங்களில் 3 ஆயிரத்து 212 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற் றும் அதேநேரம், மன்னாரில் 16

இணைப்பு நிலையங்களின் கீழ் 28 பரீட்சை நிலையங்களில் 2 ஆயிரத்து 176 மாணவர்கள் தோற்றுகின்றனர்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# யாழில் மகிந்த கட்டிய பங்களா குத்தகைக்கு விடப்படுகின்றது!

யாழ்ப்பாணம், ஒக். 15

**யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையின் வளாகத்தை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

ஜனாதிபதியின் தலைமை அதிகாரியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள இந்த வளாகம் 29 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. அதில் 12 ஏக்கரில் கட்டடத் தொகுதிகள் அமைந்துள்ளன. இந்த நிலப்பரப்பில் 12 ஏக்கர் நிலம் அரசுக்கு சொந்தமானது எனக் கூறப்பட்டுள்ளது. எஞ்சியவை இராணுவ நடவடிக்கையின் மூலம் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டவை.

தற்போது, இந்தக் காணி கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளதுடன், உரிய குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர், குறித்த வளாகம் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்துக்கு விடுவிக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில், பொதுமக்கள் நிதியை வீண் விரயம் செய்து, பொது மக்கள் காணியில் இந்த பங்களா தொகுதி அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

## சீனா பயணமானார் ரணில்

கொழும்பு, ஒக். 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகப்பூர்வ விஜயமாக நேற்று சீனாவுக்கு பயணமானார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் மற்றும் பல அரசியல் மற்றும் வர்த்தக தலைவர்களைச் சந்திக்கவுள்ளதுடன் சீனாவுடனான கடனை மறுசீரமைப்பது தொடர்பான உடன்படிக்கைகள் குறித்தும் கலந்துரையாடவுள்ளார்.

பெல்ட் அண்ட் ரோட் முயற்சியின் 10 ஆவது ஆண்டு உச்சி மாநாட்டில் ஜனாதிபதியும் கலந்து கொள்ள உள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தின்போது கடன் நிவாரணம் தொடர்பில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் என ஜனாதிபதி அலுவலகம் எதிர்பார்த்துள்ளது.

கடந்த 12 மாதங்களில் இரண்டு தடவைகள் அண்டை நாடான ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்தபோதிலும் கடந்த வருடம் பதவியேற்றதன் பின்னர் ஜனாதிபதி விக்ரமசிங்க சீனாவுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும். (அ)

# 33 வருடங்களின் பின்னர் சொந்த இடத்தில் வலி. வடக்கு பிரதேச சபை உப அலுவலகம்

யாழ்ப்பாணம், ஒக். 15

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் காங்கேசன்துறை உப அலுவலகம் மற்றும் பொது நூலகம் என்பன சுமார் 33 வருடங்களின் பின்னர், எதிர்வரும் புதன் கிழமை முதல் சொந்த கட்டடத்தில் இயங்கவுள்ளதாக பிரதேச சபை அறிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக வலி. வடக்கில் இருந்து 1989 ஆம் ஆண்டு கால பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்த போது , அலுவலகம் மற்றும் நூலகம் என்பனவும் இடம்பெயர்ந்தது.

இடம்பெயர்ந்த நூலகம் மற்றும் அலுவலகம் என்பன யாழின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வந்த நிலையில் , 2016ஆம் ஆண்டு கால பகுதியில் காங்கேசன்துறை உள்ளிட்ட சில பகுதிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் மக்கள் மீள் குடியேற தொடங்கினர்.

அக்கால பகுதியில் காங்கேசன்துறையில் சில பகுதிகள் விடுவிக்கப்பட்டபோதிலும், வடக்கு பிரதேச சபை அலுவலக கட்டடம் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருந்தமையால், காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரிக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் வலி.வடக்கு பிரதேச சபையின் காங்கேசன்துறை உப அலுவலகம் மற்றும் பொது நூலகம் என்பன இயங்கி வந்தன.

இந்நிலையில் இந்த வருட ஆரம்ப கால பகுதியில் வலி. வடக்கு பிரதேச சபையின் கட்டடம் அமைந்துள்ள பகுதி உள்ளிட்ட சில பகுதிகளை இராணுவத்தினர் விடுவித்து இருந்த நிலையில், சுமார் 33 வருடங்களின் பின்னர் மீண்டும் எதிர்வரும் புதன் கிழமை முதல் தனது சொந்த கட்டடத்தில் வலி.வடக்கு பிரதேச சபை உப அலுவலகம் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட ஆதரவை வழங்காது மொட்டு கட்சி

### ஜகத் குமார திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 15

ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமானால் அதற்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் அரசுக்குள் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றனவா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தேர்தல் முறைமையை மாற்றம், தேர்தலை ஒத்திவைத்தல், சர்வஜன வாக்கெடுப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் எம்முடன் எவரும் கலந்துரையாடவில்லை. வேறு எங்கும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரியவில்லை. எதிரணி தரப்பில் இருந்துதான் இப்படியான தொரு கதை வந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருக்கும் நோக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க முயற்சி எடுக்கப்படுமானால் அதற்கு நான் உட்பட பலர் ஆதரவு வழங்கமாட்டோம். இதற்கான தேவைப்பாடும் அரசுக்கு இல்லை என்றே நினைக்கின்றேன்.

உள்ளாட்சிசபை தேர்தலை முறைமையை மாற்ற போய் என்ன நடந்தது, உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்து, தற்போது தேர்தலே இல்லாமல்போயுள்ளது - என்றார். (அ)

# வைத்தியர்களின் பிரச்னைகள் ஜனாதிபதியிடம் 8 யோசனைகள்

கொழும்பு, ஒக். 15

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, மூளைசாலிகள் வெளியேற்றம், சுகாதார பிரச்சினைகள் உள்ளிட்ட வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் 08 விடயங்களை உள்ளடக்கிய ஆலோசனைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தப் பரிந்துரைகளை கையேற்றதுடன், உரிய பரிசீலனைக்கு உட்படுத்துவதாகவும் குறிப்பிட்டதோடு, சீனாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் மீண்டும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரைச் சந்திப்பதாகவும் தெரிவித்தார்.



பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி. ஆர்.எச். எஸ் சமரதுங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் மதுஷங்க திஸாநாயக்க, ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் மிமி தென்னகோன், முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர். ஹரித அளுத்கே, உப தலைவர் வைத்தியர். சந்திக எபிகடுவ மற்றும் சங்கத்தின் உதவி செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# சாகலவும் அமைச்சர் பிரசன்னவும் அமெரிக்காவில் இரகசிய சந்திப்பு

கொழும்பு, ஒக். 15

ஆளுங்கட்சியின் பிரதம கொரடாவாக இருக்கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இரண்டு வாரங்களுக்கு முன்னர் திடீரென அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக பணிபுரியும் சாகல ரத்நாயக்கவும் அமெரிக்காவுக்கு விசேட விஜயமொன்றை மேற்கொண்டிருந்ததுடன், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தமது விஜயத்தை பிரபல்யப்படுத்தாது அமெரிக்கா சென்றிருந்தார்.

அவர் ஒரு நிகழ்வில் பங்கேற்பதற்காக சிலருடன் அமெரிக்கா சென்றார். அமெரிக்காவில் பிரசன்னவுக்கும் சாகலவுக்கும் இடையில் விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகிறது.

இதற்குக் காரணம், கடந்த காலம் முழுவதும் பிரசன்ன ரணதுங்க ரணிலுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளமையே.

பிரசன்ன ரணதுங்க பொதுவாக ராஜபக்ஷர்களின் தீவிர ஆதரவாளராக தம்மை காட்டிக்கொண்டிருந்தார்.

ஆனால், கோட்டாபயவின் இராஜினாமாவின் பின்னர் ஜனாதிபதியான ரணிலுடன் அவர் நெருங்கிய நட்பை வளர்த்துக் கொண்டுள்ளார்.

இதன் காரணமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக ரணிலை முன்னிறுத்தவேண்டும் என்றும் ரணிலுக்கும் தனது ஆதரவு இருக்கும் என்றும் பிரசன்ன ரணதுங்க பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், இதற்கு பொதுஜன பெரமுன எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, அதன் தலைவர்களை சந்தித்த பிரசன்ன, பொதுஜன பெரமுனவால் பரிந்துரைக்கப்படும் வேட்பாளருக்கு ஆதரவளிக்கத் தயார் என ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

மொட்டில் இருந்து ரணிலை முன்னிறுத்தினால் அவருக்கு ஆதரவளிப்பேன் எனவும் பிரசன்ன மேலும் குறிப்பிட்டார்.

இரண்டு வாரங்களுக்கு முன் திடீரென அமெரிக்கா சென்ற அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அடுத்த சில நாட்களில் மீண்டும் ஒருமுறை அமெரிக்கா செல்ல திட்டமிட்டுள்ளதாக அறியமுடிகிறது.

இந்த முறை அரசியல் காரணங்களுக்காக அமெரிக்கா செல்கிறாரா அல்லது வேறு காரணங்களுக்காக செல்கிறாரா என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

## கட்டார் செல்ல முயன்ற யுவதி கைது!

கொழும்பு, ஒக். 15

கட்டாருக்கு சட்டவிரோதமான முறையில் வீட்டு வேலைக்காகச் செல்ல முயற்சித்த யுவதியொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - மொரட்டுவ பிரதேசத்தை சேர்ந்த 20 வயதுடைய இளம் யுவதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்படாத முகவர் ஒன்றினால் கட்டாருக்கு சட்டவிரோதமான முறையில் வீட்டு வேலைக்குச் செல்வதற்காக குறித்த யுவதி கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோது, விமான நிலைய குடிவரவு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

21 வயதுக்கு மேற்பட்ட யுவதிகள் வீட்டு வேலைக்காக கட்டாருக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும், கைது செய்யப்பட்ட இளம் யுவதி வீட்டு சேவைக்கு விண்ணப்பிப்பதற்கான சரியான வயதை பூர்த்தி செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பச்சைக்கடல் அலை ஓசை

தேன்மொழி சபா

நெற் பயிர்களின் கன்னிப்பருவமும், தலைப் பிள்ளைகளைச் சுமந்து பூரிப்புடன் சிவந்து நளினத்துடன் நிற்கும் புதுமணப் பெண்களின் செந்தழிப்பும் கணேசருக்கு மிகுந்த ஆனந்தத்தை வாரிவழங்கின.

அவரது உள்ளம் தனது சிசுவை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் தகப்பனின் மனம் போன்று துள்ளிக் குதித்தது.

வயல் வரப்பில் மெதுவாக நடந்தவரின் காதுகளில் ‘தபக்…,தபக்’ என்ற சத்தங்கள் அடிக்கடி வீழ்ந்தன.

அந்தச் சத்தங்கள் ஒருவிதமான பயத்தை கணேசருக்கு ஏற்படுத்தினாலும், வயிறு வரை வளர்ந்து நின்ற பயிர்கள், உடம்பின் பாகங்களை அங்கங்க உரசிக் கிசுகிசுப்பை ஊட்டி மகிழ்வையும் கொடுத்தது.

சுட்டிக் குழந்தைகளாக முட்டிமோதி விளையாடும் பேரப்பிள்ளைகளை, நோகவிடாது ஆசையோடு அவர்களின் தலையைத் தடவி விடுவது போன்று, அவரது கைகள் பயிர்களை மெதுவாக வருடிய வண்ணம் சென்றன. .

அந்நேரம் வயல் வரப்பில் சாரை ஒன்று தவளையை விழுங்குவதற்கான முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டது. அவரின் அடுத்த காலடி, பாம்பின் வாலில் தான் பதிந்திருக்கும். எதேச்சையாக வரப்பை பார்த்தவரின் கண்ணில் பாம்பு தென்பட்டதும் வெல வெலத்துப் போனார். மிகுந்த அதிர்ச்சியுடன், முன் வைக்க முயன்ற பாதத்தை பின்னால் வைத்து திரும்பினார்.

‘” இயற்கை அன்னை, கொடையாக எதுவித எதிர்பார்ப்பும் இன்றி மழையை வழங்குகிறாள், மழையைக் கண்டதும் பூமித்தாய் தனது அன்பளிப்பாக பயிர்களை வளரச் செய்கிறா,

நான் நெல்லைத்தான் தூவினேன். ஆனால் எங்கிருந்தோ விதம் விதாமன பூச்சிகள், தவளைகள் ,நண்டு பாம்பு,இன்னும் பெயர் தெரியாத பிராணிகள் என வந்து சேர்ந்துவிட்டன அவை ஒவ்வொன்றும் தமக்கேற்ற வித்தில் பாதுகாப்பாக வாழ்விடங்களையும் அமைத்து சந்தோசமாக குடும்பம் நடத்துகின்றன. இயற்கை அன்னை எல்லா உயிர்களுக்கும் ஏதோ ஒருவகையில் உதவிசெய்து மகிழ்கின்றா.

…என தன் கற்பனையைத் தட்டிவிட்டவாறு கிணற்றை நாடிச் சென்றார். அவரது உள்ளம், திடீரென தனது மேலதிகாரியிடத்தில் பாய்ந்தது.

“ என்ன மனிசனடா இவன், இந்த பாம்பு பூச்சிகள் கூட தமது உணவைத் தாமகத் தான் தேடி பசி ஆறுகின்றன. ஆனால் இவன் மட்டும்,… பதவி கூடின விதம்…

எவ்வளவு வசதியாய் இருக்கிறார். நாலு வீடு,… இரண்டு கார், மோட்டடைபைக், என எவ்வளவு வசதியாக இருந்தாலும், அவனுக்கு பேராசை குறையேலை.

இந்த ஆசைதான் எல்லாத்துக்கும் காரணம், .. அவன் எடுக்கிற சம்பளத்தில காப்பங்கு தான் எனக்கு கிடைக்குது. ஆனால் மாசத்தில் ஒரு நாளைக்கு என்ர உபயமாக தனது வயிறை நிறைக்கிறான்.

வெட்கமில்லாமல் சாப்பாடு வேண்டியா, எண்டு சொல்லுறானே! ,

என்னட்டை மாத்திரமில்லை, அவன் அங்கு வேலை செய்யிற அனேகம் பேரிடத்தில இதுதான் வேலை.

நல்ல பதவியிலை இருக்கிறவை, பின்னணி வசதிவாய்ப்போடு இருக்கிறவையின் பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டான்.

வயசுக்காதல் மதிப்பு மரியாதை தருகிறானா? நாங்கள் ஏதோ அவன்ர வீட்டு வேலைக் காரர் எண்ட நினைப்பு,… திமிர் பிடிச்சவன்”

இவ்வாறாகத் தனது மன உழைச்சலை கொட்டிக் கொண்டு “இது நல்லதுக்கு இல்லை, படைச்சவன் பார்த்துக் கொண்டு இருக்கிறான், கட்டாயம் அவனுக்கு கூலி கிடைக்கும். என்றவாறு கிணற்றுக் கட்டில் அமர்ந்தார் .

அந்நேரம் மெல்லிய தென்றல் அவரின் மனதை வருடி அமைதிப்படுத்தியது. பயிர்கள் பச்சைக் கடல் அலை போன்று அசைந்தாடிக் கொந்தழித்தன.



அவ் அலையின் ஓசை எந்த இசைக் கருவிகளினாலும் எழுப்ப முடியாத அளவிற்கு இனிமையாக அவரின் காதில் வீழ்ந்து உவகை ஊட்டியது.

காலச் சக்கரம் உருண்டு ஓடியது.

தனது தொழில் ஓய்வுக்கு பின் வழமை போன்று வயலைச் சுற்றிப் பார்த்த அசதியில, கிணற்றுக் கட்டில் பயிர்களின் அழகைச் இரசித்தவாறு இழைப்பாறினார்.

அந்நேரம்,

“கணேஸ்! ஏன்ன ஆறுதலாய் இருக்கிறாய். அங்க ஊரே திரண்டு அமளிதுமளிப் படுகுது, .உனக்கு ஒண்டும் தெரியாது போல” என்று கூறிக்கொண்டு பக்கத்தில் அமர்ந்தார்

கணேசர் எதுவும் புரியாது ஆவலோடு “என்ன இரத்தினம் சொல்லுறாய்?”

“அந்தப் பொடியன் அடிபட்டுவிட்டானாம். ஆள் தப்பிறது கஸ்டம் என்று பாத்தவை சொல்லிச் சினம்,… அவன் மோட்டச் சைக்கிள்ள போகும் போது, முன்னுக்கு பெரிய வாகனம் ஒன்று வேகமாக வந்திருக்குது. அதைச் சமாளிக்க முடியாமல் அவசரமாக வெட்டியிருக்கிறான், திருப்பின வேகத்தில பக்கத்திலை நிண்ட மரத்தோட அடிப்பட்டு போனான்,

நல்ல அடி போல, பைக்கின் முன் பக்கம் சப்பலாய் போய்க்கிடக்குது. அந்த அடியைப் பாத்தால் தெரியுது, தப்ப மாட்டான் எண்டு, அந்தளவுக்கு பைக் நெளிஞ்சு சுருண்டு போய் கிடக்குது….

சில நிமிட மௌனத்திற்கு பின், “அவனைப் பிச்சு உதறியிருக்கும். இடமே இரத்த வாடைதான். ஆரோ மண்போட்டும் மூடியிருக்கினம். சின்னஞ் சிறிசுகள் அந்த வெள்ளத்தைப் பாத்தால் பயந்து போங்கள். இப்பவும் எனக்கு அந்த வாடை அடிப்பது போலத் தான் இருக்கு”

“யார்? எந்தப்பிள்ளை?”

“மனேஜர் அரவிந்தனின் மகன்”

“அவன்ர பொம்பிளைப் பிள்ளையும் தாய் தகப்பனுக்கு தெரியாமல் பிறத்திப் பொடியனைக் கட்டினதால வீட்டுக்க எடுக்கிறேலையாம், இப்ப இந்தப் பிள்ளைக்கும் இந்த நிலை, என்ன செய்யிறது?… எல்லாம் வினைப்பயன்” என நீண்ட பெரு மூச்சொன்றுடன்,

“எப்பவும் அடுத்தவன்ர சாபத்துக்கு ஆளாகாமல் வாழவேண்டும், தகப்பன் செய்ததுக்கு இந்தப் பிள்ளைகள் என்ன செய்யிறது. .. நல்லாய் படிப்பான்,” என்று கூறிக் கொண்டு கணேஸ் தனது முகத்தை தோளில் இருந்த துண்டால் துடைத்துக் கொண்டார்

“தாய் தகப்பன் செய்யிறதெல்லாம் பிள்ளையளுக்குத் தானே போய்ச் சேரும்,… பிள்ளைகளுக் காகத்தான் எல்லாம் செய்கிறோம் எண்டு வாய் கூசாமல் சொல்லுவினம்.

பிள்ளைகள் நல்லாய் இருக்க வேண்டும் என்றால், முதல்ல தாங்கள் நேர்மையாக நடக்க வேண்டும். அவர்கள் சேர்க்கிற சொத்துப் பத்துகளோடு, பாவ புண்ணியங்களும் பிள்ளைகளுக்குத் தானே போய்ச் சேரும்” எனமெதுவாக முணுமுத்த கணேசரைப் பார்த்து,

“ …இதைத்தானே எங்கட இதிகாசங்கள் தெளிவாகக் கூறுகின்றது

பாரதக்கதையை பார்த்தால் , மனிதர் எவ்வாறு வாழவேண்டும், எப்படியெல்லாம் வாழக் கூடாது, அப்படி வாழ்ந்தால் என்ன நடக்கும் என்பதை படம் போட்டுக் காட்டுது. தர்ம வழியில் நடப்பவர்களின் வாழ்க்கைதான் பூஞ்சோலையாக மாறி மணம் பரப்பும் என்றும்,…` ஆபத்துக் காலங்களில் அவர்களுக்கு துணையாக ஆண்ட வன் இருப்பான் என்ற யதார்த்தத்தையும், சில சம்பவங்கள் மூலம் காட்சிப் படுத்தி நிற்கின்றது.”

“ஓ..! நீ சொல்லுறது சரி, குந்தி தேவி தனது பிள்ளைகளுக்கு, அரசதர்மங்களையும் பயிற்சிகளையும தகுந்த குருமார்கள் மூலம் பெற்றுக் கொடுத்தாலும், வாழ்க்கைக்குத் தேவையான, சகோதர ஒற்றுமை, அண்ணன் தம்பி பாசப் பிணைப்பு, பெரியவர்களை மதிக்கின்ற பண்புகள், உற்றார் உறவினர் நலன்களில் அக்கறை, இறைநம்பிக்கை, போன்ற நற்பண் புகளை ஊட்டி வளர்த்தா. பிள்ளைகளும் தாயின் தியாகத்தை உணர்ந்து மிகவும் அன்பும் பண்பும் நிறைந் தவர்களாக வளர்ந்தார்கள். தமது அண்ணனின் வாக்கிற்கு கட்டுப்பட்டு நடந்தார்கள். பல சந்தர்ப்பங்களில் அமைதியாக இருந்து ஆண்டவனிடத்து தமது வேதனை களைக் கொட்டினார்கள். இறைவனும் அவர்களோடு துணையாக நின்றார்.”

“ இதைத் தானே இராமயணமும்,.. சொல்லுது. எமது மூதாதையர்கள் முட்டாள்கள் இல்லை ,… வருங்காலம் எப்படி அமையப் போகின்றது, என்பதை முன்கூட்டியே தெரிந்து தான், இந்த இதிகாசங்களை படைத்திருக்கிறார்கள். இந்தக் கதைகளை சிறுவயதில பிள்ளைகளுக்கு புரியவைத்தால், அவர்களின் வாழ்க்கை ஒழுக்க முடையதாக அமையும்,” என இரத்தினம் எழுந்து தனது காணிப்பக்கம் திரும்பினார்..





# இளைஞனாகும் விஜய்

லியோ படத்தை அடுத்து வெங்கட் பிரபு இயக்கும் தனது 68ஆவது படத்தில் நடிக்கிறார் விஜய். இந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. இந்த படத்தில் விஜய் 50 வயது அப்பா வேடம் மற்றும் 25 வயது மகன் வேடத்தில் நடிக்கிறார். இந்த 25 வயது மகன் வேடத்தில் நடிக்கும் விஜயின் பாத்திரத்தை கிராபிக்ஸ் உதவியுடன் ஏ. ஐ. தொழில்நுட்பத்தில் அவரை இளைஞராக காண்பிக்கப் போகிறார்கள்.

இதற்காகத்தான் சமீபத்தில் விஜய் மற்றும் வெங்கட் பிரபு ஆகியோர் அமெரிக்கா சென்று விஜயின் உடலை 3டி ஸ்கேன் செய்து அதற்கான பரிசோதனை நடத்தினார்கள். அதுமட்டுமின்றி இளம் வயது விஜயின் சண்டை காட்சிகளையும் ஹொலிவுட் தொழில்நுட்பத்தில் படமாக்குவதற்கும் திட்டமிட்டுள்ளார் வெங்கட் பிரபு. இப்படியொரு செய்தி வெளியானதை அடுத்து விஜய் ரசிகர்கள் வட்டாரத்தில் இப்படம் குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# அஜித்தின் அடுத்த படம்!



‘மார்க் ஆண்டனி’ படத்தை இயக்கிய ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கும் புதிய படத்தில் அஜித் நடிக்கவுள்ளார். மகிழ் திருமேனி இயக்கத்தில் அஜித் நடிக்க உள்ள படம் ‘விடாமுயற்சி படத்தின் பின்னர் இந்தப் படம் தொடங்கவுள்ளது.

’நேர்கொண்ட பார்வை’ படப்பிடிப்பின்போது ஆதிக் சொன்ன கதை அஜித்துக்கு பிடித்திருந்ததாகவும், தற்போது அந்த கதையை படமாக்குவதற்கான முதல் கட்ட பேச்சு தொடங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. கதை இறுதியானால் இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்புகள் வெளியாகலாம்.

# மிரட்டும் அமிதாப்



“நடிகையர் திலகம்“ படத்தை இயக்கிய நாக் அஷ்வின் இயக்கத்தில், பிரபாஸ், தீபிகா படுகோனே, அமி தாப்பச்சன், கமல்ஹாசன் மற்றும் பலர் நடிக்கும் படம் “கல்கி 2898 ஏடி”.

இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் அமிதாப்பச்சனின் கதாபாத்திரம் கடந்த வாரம் வெளியானது.

“உங்கள் பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதும், உங்கள் மகத்துவத்தைக் காண்பதும் ஒரு மரியாதை, இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்,” என கல்கி படக்குழு அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நவம்பர் 7ஆம் திகதி கமல்ஹாசன் பிறந்தநாள் வர இருக்கிறது. அதனால், அன்றைய தினம் அவருடைய போஸ்ரரையும் படக்குழு வெளியிடும் என எதிர்பார்க்கலாம்.

**திரைப்படம் - ரத்தம்**
**இயக்கம் - சி. எஸ். அமுதன்**
**இசை - கண்ணன் நாராயணன்**
**நடிப்பு - விஜய் ஆண்டனி, நந்திதா ஸ்வேதா, மகிமா நம்பியார்**




ரௌடிகள், தாதாக்கள்தான் இதுவரையில் தமிழ் திரையில் கொலைகளை செய்யும் கூலிப்படைகளாக இருந்துள்ளார்கள். ஆனால், முதன்முறையாக தொழில்நுட்பத்தை வைத்து கொலைகளைச் செய்யும் ஒரு கூலிப்படையை தமிழ் திரையுலகுக்கு அறிமுகப்படுத்தி உள்ளார் இயக்குநர் சிஎஸ் அமுதன்.

இதற்கு முன்பு ‘தமிழ்ப் படம், தமிழ்ப் படம் 2’ என ‘ஸ்பூப் கொமெடி’ படங்களைத் தந்தவர் இந்த ‘ரத்தம்’ படத்தில் ஒரு குற்ற மர்மக் கதையைக் கையாண்டிருக்கிறார். அதற்காக காவல்துறை நாயகன் எனச் சொல்லாமல் ‘புலனாய்வு பத்திரிகையாளர்’ என பத்திரிகை பக்கம் வந்திருக்கிறார். சொல்ல வந்த விஷயத்தை முடிந்தவரையில் சுவாரசியமாக சொல்ல முயற்சித்திருக்கிறார்.

புலனாய்வு பத்திரிகையாளராக சர்வதேச அளவில் புகழ் பெற்றவர் விஜய் ஆண்டனி. பிரசவ சமயத்தில் அவரின் மனைவி இறந்துவிட தனது வேலையும் ஒரு காரணம் என வேலையை விட்டு தன் மகளுடன் கொல்கத்தாவில் வசிக்கிறார். தனது கவலைகளை மறக்க குடிக்கு அடிமையாகிறார். இந்நிலையில் சென் னையில் பத்திரிகை நடத்தும் நிழல்கள் ரவியின் மகன் பணிமனையிலேயே கொடூரமாகக் கொலை செய்யப்படுகிறார். விஜய் ஆண்டனியை தன் இன்னொரு மகன் போல வளர்த்த நிழல்கள் ரவி, விஜய் ஆண்டனியை சந்தித்து அந்தக் கொலை பற்றிச் சொல்கிறார். விஜய் ஆண்டனியும் சென்னை வந்து நிழல்கள் ரவி பத்திரிகையில் வேலைக்கு சேர்கிறார். கொலைக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முயலும் விஜய் ஆண்டனிக்கு கூடு தலாக பல தகவல்கள் கிடைக்கின்றன. அவை என்ன, குற்றவாளி யார் ? என்பதைக் கண்டுபிடித்தாரா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.




மீண்டும் ஒரு மென்சோகக் கதாபாத்திரத்தில் விஜய் ஆண்டனி. தனக்காகவே இப்படிப்பட்ட கதாபாத்திரங்களை தேடித் தேர்வு செய்து நடிக்கிறார் என்றே தெரிகிறது. மனைவி இல்லாமல் மகளை வளர்க்கும் சோகம் ஒரு பக்கம், சகோதரனை போன்றவரை இழந்தது இன்னொரு பக்கம் என சோகமயமாகக் காட்சியளிக்கிறார். பொதுவாக பத்திரிகையாளராக நடிப்பவர்கள் கொஞ்சம் ஓவராகவே நடிப்பார்கள். இந்தப் படத்தில் விஜய் ஆண்டனி அப்படியான நாடகத்தன்மையைக் கொண்டு வராமல் இயல்பாக நடித்திருக்கிறார்.

க்ரைம் எடிட்டர் ஆக நந்திதா ஸ்வேதா. பத்திரிகை பணிமனையில் மட்டுமே அவரின் கதாபாத்திரம் முழுமையாக நகர்கிறது. அந்தக கதாபாத்திரத்திற்குரிய மேன்மை, அழுத்தம் ஆகியவற்றைச் சரியாகக் கொடுத்திருக்கிறார். மகிமா நம்பியார் கதாபாத்திரம் ஆரம்பத்தில் ஒரு சாதாரண அம்மா கதாபாத்திரம் என நாம் நினைக்க அவர் கதாபாத்திரத்தில் ஒரு பெரும் மர்மத்தை சேர்த்திருக்கிறார் இயக்குநர். ரம்யா நம்பீசனுக்கு அவ்வளவாக வேலையில்லை, சில காட்சிகளில் மட்டும் வந்து போகிறார்.

படத்துக்குத் தேவையான அளவோடு கண்ணன் நாராயணன் பின்னணி இசையும், கோபி அமர்நாத் ஒளிப்பதிவும் அமைந்துள்ளது.

படத்தில் பொலிஸ் கதாபாத்திரங்கள் இருந்தாலும் அவர்கள் செய்யும் வேலையை படத்தின் நாயகன் விஜய் ஆண்டனியே செய்து முடிக்கிறார். ஒரு புதுவிதக் கதையை யோசித்தது சிறப்பு. இடைவேளைக்குப் பின் யார் குற்றவாளி என்பதை ஒரு ‘திடுக்’ சம்பவத்துடன் காட்டியிருந்தால் இன்னும் அதிர்வுகளை உண்டாக்கியிருக்கும். குழப்பமில்லாத ஒரு குற்றக் கதையை தந்தால் போதும் என்பதுதான் படக்குழுவின் விருப்பமாக இருந்திருக்கிறது.




# மீண்டும் கவர்ச்சி திசை

ஷாருக்கானுக்கு ஜோடியாக நயன்தாரா நடித்து கடந்த மாதம் வெளியான ஜவான் படம் 1,100 கோடி (இந்திய) ரூபாய் வசூல் செய்து சாதனை செய்து நயன்தாராவுக்கு பொலிவூட்டில் நல்லதோர் அறிமுகத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதன் பிறகு ஜெயம் ரவியுடன் அவர் நடித்த இறைவன் படம் கடந்த மாதம் 28ஆம் திகதி திரைக்கு வந்தது. இந்த படங்களை தொடர்ந்து டெஸ்ட் மற்றும் தனது 75ஆவது படத்திலும் தற்போது நயன்தாரா நடித்துக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் ஆரம்ப காலத்தில் பில்லா உள்ளிட்ட பல படங்களில் கவர்ச்சியாக நடித்து வந்த நயன்தாரா, ஒரு கட்டத்தில் கவர்ச்சியாக நடிப்பதை குறைத்திருந்தார். ஆனால், தற்போது பொலிவூட் அறிமுகத்துக்கு பிறகு மீண்டும் அவர் கவர்ச்சி குயினாக மாறி இருக்கிறார். பிரபல சஞ்சிகை ஒன்றுக்காக கவர்ச்சியாக போட்டோசூட் ஒன்று நடத்தியுள்ளார் நயன்தாரா. அது குறித்த புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.


# விஜய் சேதுபதியை இயக்கும் மிஷ்கின்



ஆண்ட்ரியா முக்கிய வேடத்தில் நடித்த பிசாசு 2 என்ற படத்தை இயக்கி உள்ளார் மிஷ்கின். அந்த படம் இன்னும் திரைக்கு வர வில்லை. இதையடுத்து சிவ கார்த்திகேயனுடன் மாவீரன் படத்தில் நடித்திருந்த மிஷ்கின், பின்னர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்திருக்கும் லியோ படத்திலும் வில்லனாக நடித்திருக்கிறார்.

இந்த நிலையில் அடுத்தபடியாக விஜய் சேதுபதியை நாயகனாக வைத்து தனது புதிய படத்தை அவர் இயக்கப் போகிறார். தற்போது அந்த படத்தின் ஆரம்பகட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. மிஷ்கினும், விஜய் சேதுபதியும் இணையும் இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்க உள்ளது. எஸ். தாணு தயாரிக்க, ஏ. ஆர். ரஹ்மான் இசையமைக்கவுள்ளார்.

# பாணியை மாற்றும் லாரன்ஸ்



நடன இயக்குநர் மற்றும் நடிகர் ராகவா லாரன்ஸ் முனி, காஞ்சனா ஆகிய படங்களில் நடித்தது மூலம் தமிழ் சினிமாவில் தவிர்க்க முடியாத இடத்தை பிடித்தவர். சமீபத்தில் அவர் நடித்து வெளிவந்த ருத்ரன் படம் தோல்வி அடைந்தது. சந்திரமுகி 2 சுமாரான வெற்றியை பெற்றது.

தற்போது ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் படத்தில் நடித்துள்ளார். அவர் கூறியதாவது, ” பழைய கதைகள் இனி வேலைக்கு ஆகாது. கொரோனா காலத்திற்கு பிறகு நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இன்றைய தலைமுறை இயக்குநர்கள் லோகேஷ், நெல்சன் ஆகியோர் கதைக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. திரைக்கதை மற்றும் சண்டை காட்சிகளில் கவனம் செலுத்தி வருகின்றனர் . நானும் இந்த புதிய பாதையில் பயணிக்க தொடங்கியுள்ளேன். இதற்கு பதில் ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் படத்தில் கிடைக்கும்” என தெரிவித்துள்ளார்.

ஈழநாடு



# ஈழத்தின் தனித்துவம் மிக்கபெண் ஆளுமை முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

**14.10.2023 அவருக்கு அகவை 80**



**ச.லலீசன்**
அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை
(அம்மையாரின் அன்பு மாணவன்)

உணர்வாகி உயிராகிவிளங்கும் தமிழ் மொழியின் ஏற்றத்திற்காக உழைப்போர் பலர். எம்மண்ணில் பிறந்து எம்முடன் வாழ்ந்து உலகளாவிய தமிழ் வளர்ச்சிக்கெனப் பங்களிக்கும் தமிழ் இணையராகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் இணையரை அடையாளப்படுத்தமுடியும்.

### பிறப்பும் ஆளுமைஉருவாக்கமும்

முனைவர் மனோன்மணிசண்முகதாஸ் 14.10.1943 இல் பருத்தித்துறை தும்பளை நெல்லண்டையில் பிறந்தவர். தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயம், வடமராட்சி மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை என்பவற்றில் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சிறப்புக்கலைக் கற்கையைப் பயின்றவர். பேராசிரியர் க.கைலாசபதியின் வழிகாட்டலில் சி.வை. தாமோதரம்பிள்ளையின் தமிழியற் பணிகளை ஆய்வு செய்து முதுமாணிப் பட்டத்தையும் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் வழிகாட்டலில் சங்ககால அகப்பாடல்களின் உரைப்பொருத்தம் குறித்து குறுந்தொகைப் பாடல்களை முன்னிறுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

பேராதனையில் தனது வாழ்க்கைத் துணைநலத்தைத் தீர்மானிக்கும் நல்லூழ் அவருக்கு வாய்த்திருந்தது. 1965 இல் சண்முகதாஸ் மனோன்மணி இணையரின் திருமணம் இடம்பெற்றது. இணையர் இயற்றிய இல்லற வாழ்வின் இனிய நன்கலங்களாக கலைச்செல்வி குகஸ்ரீ, திருநங்கை ஞானசபேசன், செந்தூரன் ஆகியோர் வாய்த்தனர். கனடா, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் இவர்கள் வாழ்கின்றனர். சேந்தினி, இளநிலா, அபிதேவ், தியானா, றிக்கோ, அபிநயனி எனப் பேரப்பிள்ளைகளையும் கண்டுள்ளனர். புலம் பெயர் தேசத்தில் வாழும் தகைமையும் வசதியும் இருந்தும் யாழ். மண்ணில் தம் ஊழியைக் கழிக்கும் ஆர்வத்தினால் இன்றும் யாழ்ப்பாணத்தில் வாழ்வதைப் பெருமையாகக் கருதி இத்தமிழ் இணையர் வாழ்கின்றனர்.

### ஆசிரியப் பணி

பேராசிரியரதும் அம்மையாரதும் தமிழாசிரியப் பணிகள் போற்றுதற்குரியன. யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவின் தமிழ்த்துறை விரிவுரையாளர்களாக இருவரும் 1965 தொடக்கம் மூன்றாண்டுகள் பணியாற்றியுள்ளனர். பேராசிரியர் சண்முகதாஸ் பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனத் தனது பணிகளை விரித்துக்கொண்டார். முனைவர் மனோன்மணி அம்மையார் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தின் தமிழாசிரியராகவும் நான்குஆண்டுகள் கொக்குவில் தொழில்நுட்ப நிறுவனத்தின் விரிவுரையாளராகவும் இருபதாண்டுகள் ஜப்பான் டோக்கியோவில் உள்ள கக்சுயின் பல்கலைக் கழகத்தின் ஆய்வுப் பேராசிரியராகவும் பணியாற்றி பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் வருகை விரிவுரையாளராகவும் வெளிவாரிப் பட்டக்கற்கை நெறியில் தமிழ் பயில்வோருக்கான வழிகாட்டுநராக வும் பணிமேற்கொண்டார்.

சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை ஆழந்த புலமையும் பயிற்சியும் அம்மையாரிடத்தில் உண்டு. இதனால் நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும், ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தமிழில் உயர்பட்டப் படிப்பைமேற்கொள்ளும் பலரை இன்றும் வழிப்படுத்திவருகின்றார்.

### செவிலித்தாய்

திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லப் பிள்ளைகளின் செவிலித்தாயாகத் தன்னைஅர்ப்பணித்தார். 14 ஆண்டுகள் சைவவித்தியா விருத்திச் சங்கத்தில் இல்லத்திட்டப் பணிப்பாளராகவும் நிதிச் செயலாளராகவும் பணியாற்றி சிறுவர்களை வழிப்படுத்தினார். இவர்களுட் பலர் வாழ்வின் உயர்நிலையில் மிளிர்வதற்கு வழிகாட்டியாகவும் ஒளியேற்றியாகவும் அமைந்தார்.

### அம்மையார் ஆக்கிய நூல்கள்

அம்மையார் இதுவரை 52 இற்கும் மேற்பட்ட நூல்களைஆக்கியுள்ளார். இவை தமிழ், ஆங்கிலம், மற்றும் யப்பானிய மொழிகளில் அமைந்தனவாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தின் முக்கிய போக்குகள்., சி.வை.தா. ஓர் ஆய்வு, இத்திமரத்தாள், ஆற்றங்கரையான், Worldview and Rituals Among Japanese and Tamils, மன்யோசு காதற் பாடற் காட்சிகள், மன்யோசு, காதற் காட்சிகள், சாதியும் துடக்கும், பைந்தமிழர் வாழிவியற் கோலங்கள், தமிழ்மொழி அகராதி தந்த சதாவதானி, சங்ககாலத் திருமணநடைமுறைகள்,சென்றகாலத்தின் பழுதிலாத்திறம்,காலம் தந்த கைவிளக்கு, வாலிவதை - ஒருவழக்காடுகளம், செவிநுகர் கனிகள், பாரதியின் கன்னிக் குயிலின் இன்னிசைப் பாட்டு, இலங்கைத் தமிழியல் - சிலபதிவுகள், பிஞ்சு முகத்தின் தேடல், ஜப்பானியக் காதற் பாடல்கள் முதலிய நூல்கள் இங்கு குறிப்பிட்டுக்காட்டத்தக்கன.

நூல்களின் பட்டியல் இதைவிடநீண்டது. இடவிரிவஞ்சித் தவிர்க்கப்பட்டுள்ளன. தவிர, நூற்றுக்கணக்கானஆய்வுக் கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார்

### அம்மையாரின் ஆக்க இலக்கியங்கள்

ஆக்க இலக்கியகர்த்தராகவும் மனோன்மணி அம்மையார் தன்னை இனங்காட்டியுள்ளார். ஐந்திற்கும் மேற்பட்ட சிறுகதைகள், பத்துக்கும் மேற்பட்ட நாடகங்களும் இசைச்சித்திரங்களும் இவற்றுள் அடங்கும். சொர்க்கத்தின் குரல், அம்மாவந்தாள் ,நம்பிக்கை, புத்தம் புதியதுளிர், பொதுக்கிணறு முதலிய சிறுகதைகள் பிரபலஊடகங்கள் வாயிலாகப் பிரசுரமாகியுள்ளன. இதைவிட வலம்புரி, உதயன், ஜேர்மனியின் வெற்றி மணி, இந்துசாதனம் முதலிய பத்திரிகைகளில் தொடர்ச்சி யாக இலக்கியமற்றும் சமயச் செய்திகளின் பத்தியெழுத்தாளராகவும் செயற்பட்டுவருகின்றார்.

சிறந்தகுரல் ஆளுமையுடன் கருத்துக்களைவெளிப்படுத்தும் திறனைக் கொண்டிருப்பதால் இன்றைய யாழ்ப்பாணத்துப் பெண் பேச்சாளர்கள் வரிசையில் முதன்மையிடத்தில் வைத்தெண்ணப்படும் ஆளுமையாகத் திகழ்கின்றார்.

### தனித்துவச் சிந்தனைகள்

இலக்கிய வரலாற்றுக் காலப்பகுப்பைப் பல்வேறு அறிஞர்களும் வெள்வேறு வகைகளில் குறிப்பர். அது அவர்களுக்கு உள்ள சுதந்திரம். இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலப்பகுப்புக் குறித்துக் கட்டுரை ஆக்கிய முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் தனது நோக்கில் புதியதோர் அணுகுமுறையைப் பதிவு செய்கின்றார்.

“ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பரப்பினைப் பார்க்குமிடத்து 12 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரேயே தமிழில் இலக்கியங்கள் பற்றிய செய்திகளை அறிய முடிகின்றது. இப்பிற்பட்ட காலப்பகுதியைப் பாகுபாடு செய்யுமிடத்து பின்வருமாறு பாகுபாடு செய்து கொள்ளலாம்“ என்கிறார் (இலங்கைத் தமிழியல் சில பதிவுகள் ப.07)

அ. ஆறுமுகநாவலருக்கு முற்பட்ட காலம் (1216 - 1822)

ஆ. ஆறுமுகநாவலர் காலம் (1872 - 1879)

இ. தன்னாட்டு உணர்வுக் காலம் (கனகிபுராணம் போன்ற இலக்கியங்கள் எழுந்த காலம்)

ஈ. தனித்துவம் பேணும் காலம். (1958 இற்குப் பின் - இனக்கலவரத்தின் பின்னரான காலம்)

முதலாவது பகுதியில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் தொடக்கம் ஆறுமுகநாவலர் வரையான காலப்பகுதியைக் குறிப்பிடுகின்றார். இதற்குள்தான் மிசனறிகளின் காலமும் அடங்குகின்றது. இக்காலப்பகுப்பு ஆறுமுகநாவலர் என்ற தனி ஆளுமையை மையப்படுத்தி அமைக்கப்பட்டமை, மற்றும் தனித்துவம் பேணும் காலம் என்ற தொடர்ப்பிரயோகம் என்பன தமிழுலகோரால் எந்தளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்பது ஆய்விற்குரியது.

யாழ்ப்பாணத்தவரின் வழிபாட்டு மரபுப் போக்குப் பற்றி அவர் குறிப்பிட்ட கருத்து ஒன்று நோக்கத்தக்கதாகும்.

“யாழ்ப்பாணத்தவர்கள் கிறிஸ்தவ மதத்தையும் மேலைநாட்டுப் பண்பாட்டம்சங்களையும் எதிர்கொண்டபோது அதன் செல்வாக்கைத் தடுப்பதற்கு ஆரியவயப்பட்ட மதவழிபாட்டு நடைமுறைகளையே தமது கவசமாக அணிய முற்பட்டனர். இதனால் தொழில்நிலை சார்ந்த நிலத்தெய்வ வழிபாட்டு நடைமுறைகள் வழக்கொழியலாயின. சாதிநிலை வழிபாடுகளாக அவை சமூகக்கட்டமைப்பை அவிழ்க்க முயன்றன.“ (இலங்கைத் தமிழியல் சில பதிவுகள் ப. 137) பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடக உலகப் பிரவேசம் குறித்துக்கருத்துரைக்கும் போது அம்மையார் மேற்கண்ட கருத்தை முன்வைத்துள்ளார்.

அம்மையாருடைய எழுத்துநடை சிக்கனம் வாய்ந்ததாக இருக்கும். வெல்லும் சொல் இன்மை அறிந்து அவரது சொற்பிரயோகம் இருப்பதை ஆக்கங்களை வாசித்தவர்கள் அறிவர். கட்டுரைகளில் மேலைத்தேயப் பாணியில் அட்டவணைகளாக்கிக் காட்டுதல், வகைப்படுத்திக் காட்டுதல், குறித்த ஒரு கருத்து எவ்வெள் இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது என்பதை நிரற்படுத்திக் காட்டுதல் என அவரது எழுத்துநடையில் ஒரு தனித்துவம் உள்ளது.

விஞ்ஞானத்தின் வலிமை மிகு செயற்பாடுகள் பற்றிய நம்பிக்கை அவரிடம் குறைவாகவே காணப்படுகின்றது. மின்னஞ்சல், முகப்புத்தகம் முதலிய தொடர்பாடல் சாதனங்களின்பால் நம்பிக்கையற்றவராக அவரைப் பலதடவைகள் தரிசித்திருக்கின்றேன். அவரது கையெழுத்தை ஒரு தனி எழுத்துருவாக (font) அமைக்கலாம் எனப் பலரும் விதந்து பேசுவர்.

இளையோரிடையே இலக்கியப் பரிச்சயத்தை வளர்க்கவேண்டும் என்ற ஆர்வமும் அதற்கான செயலுருக்களும் அவரிடம் என்றைக்கும் இருந்து வருகின்றது. இதற்கு அவரது பின்வரும் கருத்துச் சான்றாக அமையும்.

“இன்றைய வேகமான வாழ்வியலில் சமூகவயப்பட்ட வழிகாட்டல் ஒன்று தேவைப்படுகின்றது. வாழ்வின் செல்நெறியைச் செம்மைப்படுத்த இலக்கியக் கற்கைநெறி ஒன்று இன்றியமையாதது. இளமையும் முதுமையும் ஒன்றுபட இது வழிவகுக்கும். ஆனால் இக்கற்கைநெறியைக் கல்விக் கூடங்கள் மட்டும் நிறைவாகச் செய்ய முடியாது. பொது அமைப்புக்களும் இப்பணியைத் தலைமேற்கொள்ள வேண்டும். ஊரக நிலையில் இலக்கியத்தின் சுவையை ஊட்டி மக்களை அதன்பால் ஈர்க்கும் பணியை இளைஞரும் முன்னெடுக்க வேண்டிய காலம் இது. முதுமை, தளர்ச்சியாலும் முரண்பாட்டாலும் இப்பணியைக் கைநெகிழ விட்டுள்ளது. அதனால் சமூக நெறிப்படுத்தலில் ஓர் இடைவெளி ஏற்பட்டுள்ளது. பிறமொழிச் செல்வாக்கும் பிறபண்பாட்டுத் தாக்கமும் சமூகக் கட்டமைப்பைச் சீர்குலைத்துள்ளன. இந்நிலையில் ஆரியர் ஆடும் கயிற்று நடனம் போலப் பணிசெய்ய இளந்தலைமுறை முன்வரவேண்டும்.“ (ஜீவநதி -01. ப.05)

### யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்திற்கு மீளுயிர்ப்பு

யாழ்ப்பாணஅரசர் காலத்தில் நல்லூரில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் ஒன்று செயற்பட்டதாக வரலாறு உண்டு. 1900 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இதற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டதாயினும் சிலஆண்டுகளில் இதன் பணிகள் கைவிடப்பட்டுவிட்டன. உலகிலேயே தமிழ்ச்சங்கம் கால்கோளிடப்பட்ட யாழ்ப்பாணத்திற்கெனத் தமிழ்ச்சங்கம் இல்லையே என்ற பெருங்குறையைக் களையும் வகையில் 2012 ஆம் ஆண்டில் துறைசார்ந்தோரை இணைத்து யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தை பேராசிரியா அ.சண்முகதாஸ் மீளஉருவாக்கினார். அவரேஅதன் முதலாவது தலைவராகவும் செயற்பட்டார். தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சியில் கலாநிதி மனோன்மணி அம்மையார் மூன்றாவது தலைவராக 2016 தொடக்கம் தலைமைப் பொறுப்பை ஏற்று இரண்டாண்டுகள் சங்கத்தை வழிநடத்தினார்.

### நிறைவாக...

பெண்மையின் ஆற்றலைப் பெரிதும் வலியுறுத்தக் கூடிய ஆளுமை மிக்கவராக முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களை அடையாளப்படுத்தலாம். பேராசிரியர் அ.சண்முகதாஸ் என்ற மிகப்பெரும் ஆளுமையின் வெற்றிகளுக்குப் பின்னால் நின்று இயங்குவதோடல்லாமல் தனித்துத் தன் தடத்தையும் நிலைநிறுத்தும் மனோன்மணி அம்மையாரின் வாழ்வியல் - இன்றைய உலகோர் கற்க வேண்டிய பாடம். அவருக்கு இனிய அமுதவிழா வாழ்த்துக்கள்.

# ஹட்ரிக் வெற்றி

நடப்பு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் 11ஆவது போட்டியில் பங்களாதேஷை 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி உள்ளது நியூஸிலாந்து அணி. இதன் மூலம் அந்த அணி விளையாடிய முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றியை பதிவு செய்து அசத்தியுள்ளது.

சென்னை - சேப்பாக்கத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. முதலில், துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 245 ஓட்டங்கள் எடுத்தது. முஷ்ஃபிகுர் ரஹீம் 66 ஓட்டங்கள் எடுத்தார். அந்த அணியின் தலைவர் ஷகிப் அல் ஹசன் 40 ஓட்டங்களும், மஹமுதுல்லா 41 ஓட்டங்களும் எடுத்திருந்தனர். ஃபெர்குசன் 3 விக்கெட்கள் கைப்பற்றினார். டிரெண்ட் போல்ட் மற்றும் மேட் ஹென்றி தலா 2 விக்கெட்களும், மிட்செல் சான்ட்னர் மற்றும் கிளென் பிலிப்ஸ் தலா 1 விக்கெட் வீழ்த்தி இருந்தனர்.



246 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நியூஸிலாந்து அணி விரட்டியது. ரச்சின் ரவீந்திரா 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கான்வே மற்றும் அணித் தலைவர் கேன் வில்லியம்சன் இணைந்து 80 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். கொன்வே, 45 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து டேரில் மிட்செல் உடன் இணைந்து 108 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் வில்லியம்சன். காயம் காரணமாக முதல் இரண்டு போட்டிகளில் அவர் விளையாடவில்லை. இந்த சூழலில் 107 பந்துகளில் 78 ஓட்டங்கள் எடுத்த அவர், காயத்தால் முறையில் வெளியேறினார். இறுதிவரை களத்தில் இருந்த மிட்செல், 67 பந்துகளில் 89 ஓட்டங்கள் எடுத்திருந்தார். கிளென் பிலிப்ஸ் 16 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இதன் மூலம் 42.5 ஓவர்களில் 248 ஓட்டங்கள் எடுத்து அந்த அணி வெற்றி பெற்றது.

ஹட்ரிக் வெற்றி: நடப்பு உலகக் கோப்பை தொடரில் இங்கிலாந்து, நெதர்லாந்து மற்றும் பங்களாதேஷ் என மூன்று தொடர் வெற்றிகளை பதிவு செய்துள்ளது நியூஸலாந்து. வரும் 18ஆம் திகதி சேப்பாக்கத்தில் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக நியூஸலாந்து விளையாட உள்ளது. இப்போது புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.



